
காந்தி பிள்ளைத் தமிழ்



ஆக்கியவர்: ராய. சொ

விளக்க உரை: பழ. முத்தப்பன்

காந்தி பிள்ளைத் தமிழ்

மூலமும் விளக்க உரையும்

உரை விளக்கம் :

முனைவர், சித்தாந்தச் செம்மணி

பழ. முத்தப்பன்

உமா பதிப்பகம்
18/171, பவளக்காரத் தெரு,
மண்ணடி, சென்னை - 600 001.
போன் : 2521 5363

நூல் விவரப் பட்டியல்

நூலின் பெயர்	:	காந்தி பிள்ளைத் தமிழ்
உரையாசிரியர்	:	முனைவர் பழ. முத்தப்பன்
மொழி	:	தமிழ்
பதிப்பு ஆண்டு	:	முதல் பதிப்பு - ஏப்ரல் 2013
பதிப்புரிமை	:	© உமா பதிப்பகம்
தாள்	:	11.2 வெள்ளைத் தாள்
நூல் அளவு	:	12.5 x 18 செ.மீ.
எழுத்து	:	12 புள்ளிகள்
பக்கங்கள்	:	144
பைண்டிங்	:	சாதாரணக் கட்டு
விலை	:	ரூ. 40.00
ஒளி அச்சு	:	விக்னேஷ்வர் கிராபிக்ஸ் சென்னை - 600 005.
அச்சிட்டோர்	:	பரமேஸ்வரி கிராபிக்ஸ் சென்னை - 600 005.
நூல் வெளியீடு	:	உமா பதிப்பகம் சென்னை - 600 001.

9/4

பிள்ளைத் தமிழ் இலக்கியம்

தமிழ் இலக்கிய வகைகளில் ஒன்று சிற்றிலக்கிய வகையாகும். இதைப் பிரபந்தங்கள் என வடமொழி யாலும் கூறுவர். தமிழில் உள்ள சிற்றிலக்கியங்களின் வகை 96 என்பது ஒரு மரபு. ஆனால், இந்தக் குறிப்பிட்ட 96 வகை களுக்கு மேற்பட்டும் சிற்றிலக்கிய வகை உண்டு என்பது இக்கால ஆய்வாளர்களின் கருத்தாகும். தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று பிள்ளைத் தமிழ் இலக்கியமாகும். பெருமை பெற்ற தலைவனையோ அருள் தந்திடும் கடவுளையோ குழந்தையாக (பிள்ளையாக)ப் பாவித்துக் கொண்டு பத்துப் பருவங்களாக அமைத்துப் பாடுவது பிள்ளைத் தமிழ் இலக்கியமாகும். ஒரு பருவத்திற்குப் பத்து விருத்தங்களாக நூறு பாடல்கள் பாடப்பெறும். பெரும் பாலும் கழிநெடிலடி ஆசிரிய விருத்தங்களாலேயே பாடப் பெறும். ஆண்பாற் பிள்ளைத் தமிழ் என்றும், பெண்பாற் பிள்ளைத் தமிழ் என்று இரண்டு வகையாகக் கூறவும் பெறும். பருவங்களுக்குரிய பெயர்களாகக் காப்பு, செங் கீரை, தால், சப்பாணி, முத்தம், வருகை, அம்புலி என்ற ஏழு பருவங்கள் இரண்டு பிள்ளைத் தமிழுக்குமுரிய பொதுப் பருவங் களாகும். ஆண்பாற் பிள்ளைத் தமிழாயின் பொதுப் பருவங்களுக்கு அடுத்து சிற்றில், சிறுபறை, சிறுதேர் என மூன்று பருவங்களை அமைப்பர். பெண்பாற் பிள்ளைத் தமிழுக்குக் கழங்கு, நீராடல், ஊசல் என்ற மூன்று பருவங் கள் பாடப்பெறும்.

பருவங்களுக்குரிய விளக்கம் :

1. **காப்புப் பருவம் :** இது பிள்ளை பிறந்து இரண்டு மாதத்தில் பாடப் பெறுவது. பாட்டுடைத் தலைவரைத் தெய்வங்கள் காக்க வேண்டும் எனத் தெய்வங்களைப் போற்றிப் பாடுவது காப்புப் பருவம் ஆகும்.

2. **செங்கீரைப் பருவம் :** இது ஐந்து மாதத்தில் பாடப் பெறுவதாகும். குழந்தை ஒரு காலை முடக்கி ஒரு காலை நீட்டி முழங்காலையும் ஒரு கையையும் ஊன்றித் தவழும் பருவம். இப்பருவத்தில் குழந்தை தலைநிமிர்ந்து முகமசைய ஒரு கையை ஆட்டும் நிகழ்ச்சி நிகழும். இந்தக் காட்சி சிவந்த கீரைத்தண்டு காற்றில் அசைவது போன்ற அழகுக் காட்சியாகத் திகழும். எனவே இப்பருவம் ஆயிற்று.

3. **தாலப் பருவம் :** (குழந்தையைத் தொட்டிலில் இட்டு தாலாட்டுப் பாடித் துயில வைக்கும் பருவம்) ஆறாவது மாதம் முதல் எட்டாவது மாதத்தில் பாடுவதாகும். தால் நாக்கு எனப் பொருள்படும். நாக்கை அசைத்துப் பாடுவதால் தாலாட்டு ஆயிற்று.

4. **சப்பாணிப் பருவம் :** ஒன்பதாவது மாதத்தில் பாடுவது. குழந்தை இரு கைகளைக் கொட்டுமாறு செய்து பாடுவது. பாணி - கை என்பது பொருள். ஒலிவரக் கையைச் சேர்ப்பது இப்பருவமாகும்.

5. **முத்தப் பருவம் :** இது பத்தாவது மாதத்தில் பாடுவது. குழந்தையை முத்தம் தருமாறு அழைத்துப் பெருமை பேசுவது. திருவாயின் சிறப்புக் கூறப் படும் பருவம்.

6. **வருகைப் பருவம் :** பனிரெண்டாவது மாதத்தில் பாடுவது. குழந்தை நின்று கால்களை எடுத்து வைத்துத் தன்னிடம் வருமாறு தாய் அழைப்பது போல் பாடுவது.

7. **அம்புலிப் பருவம் :** பனிரெண்டு மாதங்களுக்குப் பிறகு குழந்தை வளர்ந்த நிலையில் பாடுவது. அம்புலியாகிய சந்திரனைக் குழந்தையுடன் விளையாட வருக என அழைத்துப் பாடுவதாகும். இதில் சந்திரனுக்கும் குழந்தைக்கும் ஒற்றுமை கூறுவதும் வேறுபாடு கூறுவதும் உண்டு.

8. *சிற்றில் பருவம் : ஆண்பாற் பிள்ளைத் தமிழுக்கே உரியது. குழந்தை வளர்ந்த பிறகு பாடுவது. உடன் விளையாடுகின்ற பெண் குழந்தைகள் கட்டிய மணல் வீட்டை (சிறிய இல் - சிற்றில்) காலால் சிதைக்க வேண்டாம் என்று பாடுவது.*

9. *சிறுபறைப்பருவம் : குழந்தை வளர்ந்து அறிவு நிலை யில் பாடுவது. பறை என்று கூறப்பெறும் சிறிய இசைக் கருவி யைக் குழந்தையானவன் கொட்டும்படியாகப் பாடுவது.*

10. *சிறுதேர்ப் பருவம் : குழந்தை விளையாடும் பருவம் கொண்ட பொழுது பாடுவது. தச்சரால் மரத்தில் செய்யப்பட்ட விளையாட்டுக்கு உரிய சிறிய தேரினைப் பாட்டுடைத் தலைவனாம் குழந்தை தெருவில் உருட்டி ஓட்டி வருமாறு பாடுவது.*

பெண்களுக்கு உரிய பருவங்கள் :

8. *கழங்கு பருவம் : பிற சிறுமிகளோடு விளையாடும் பருவத்தில் கழங்கு எனக் கூறப்படும் காய்களை வைத்துக் கொண்டு விளையாடுவதைச் சிறப்பித்துப் பாடுவது.*

9. *நீராடல் பருவம் : வயது வருவதற்குரிய பருவத்தில் பாட்டுடைத் தலைவியாம் குழந்தை பலவகை மணப் பொருள் கலந்த நீரில் ஆடுகின்ற சிறப்பைக் கூறுவது.*

10. *ஊசல் பருவம் : விளையாடும் பருவத்தளாகிய பாட்டுடைத் தலைவியாம் குழந்தை கயிற்றால் கட்டப்பெற்ற ஊஞ்சலில் ஆடி விளையாடுக என்று பெருமை பேசிப் பாடும் பருவம் ஆகும்.*

தமிழில் இதுவரை வெளிவந்துள்ள பிள்ளைத் தமிழ் இலக்கியங்கள் 86 என்ற எண்ணிக்கையை உடையன என்று சிற்றிலக்கிய அகராதி வெளியிட்ட முனைவர் ந.வீ.ஜெய ராமன் அவர்கள் குறிப்பிடுவார்கள்.

நூலாசிரியர் வரலாறு

காந்தி பிள்ளைத் தமிழின் ஆசிரியர் காரைக்குடி இராய.சொக்கலிங்கம் 30.10.1898ல் பிறந்தவர். தந்தை இராயப்ப செட்டியார். தாய் அழகம்மை. எட்டாம் வகுப்பு வரை படித்தவர். இருப்பினும் தன் முயற்சியால் தமிழ் இலக்கண இலக்கி யங்களை நன்கு கற்று 1958ல் காரைக்குடி இந்து மாதாபிமான சங்கத்தார் தமிழ்க்கடல் என்ற பட்டத்தினை அளிக்கும் அளவிற்குச் சிறப்பினைப் பெற்றவர்.

1917ல் காரைக்குடியில் தோன்றிய இந்து மதாபிமான சங்கத்தின் தோற்றத் திற்கு அடிப்படைக் காரணம் ஆவார். 1919ல் தன வைசிய ஊழியர் சங்கம் தோன்றுவதற்குக் காரணம் ஆவார். தன வைசிய ஊழியன், ஊழியன் என்ற இதழ்களுக்கு ஆசிரியர் ஆவார்.

திரு.வி.க. அவர்களின் உரைகளில் மனத்தை ஈடுபடுத்தி அவரைக் குருவாக ஏற்று அரசியல் துறையில் விளங்கினார். சட்ட மறுப்பு இயக்கத்தில் ஈடுபட்டு 9.1.1932ல் ஓராண்டு சிறைத்தண்டனை பெற்றார். வேலூர் சிறையில் சிறைத் தண்டனையை அனுபவித்தார். 1934ல் காந்தி அடிகள் தமிழகத்தில் சுற்றுப் பயணம் செய்த பொழுது ஒரு நாள் இவர் வீட்டிற்கு வருகை தந்து விருந்துண்டார். 1938 முதல் 41 வரை காரைக்குடி நகரசபைத் தலைவராக விளங்கினார்.

1962ல் காரைக்குடி அழகப்பா கலைக் கல்லூரியில் தமிழாராய்ச்சித்துறை தொடங்கிய பொழுது, இவரின் ஆழ்ந்த தமிழ்ப் புலமையைக் கண்டு இவரைக் கௌரவத் தலைமைப் பொறுப்பாளராக ஆக்கினார்கள்.

சமயம் சார்ந்த சிறந்த ஆன்மீக வாதியாவார் இவர். தன் வாழ்வின் பிற்பகுதியில் அரசியலில் இருந்து விலகி ஆன்மீகத் தொண்டாற்றினார். காரைக்குடி சிவன், பெருமாள் கோயில்களின் அறங்காவலராக விளங்கினார். ஆண்டுதோறும் சேக்கிழார் விழா நடத்தியவர். பழந் தமிழ்ப் பாடல் அனைத்தையும் நன்கு மனணம் செய்தவர். சிறந்த பேச்சாளர். தமிழ்நாட்டுக் கம்பன் கழக மேடைகளை அலங்கரித்தவர். காந்தீய உணர்வு மிக்கவர். கம்பனும் சிவனும், வில்லியும் சிவனும், காந்தி கவிதை, என்பன உள்ளிட்ட முப்பதுக்கும் மேற்பட்ட நூல்களுக்கு ஆசிரியர். பழந்தமிழ் நூல்களைப் பதிப்பித்துத் தமிழ் மொழி வளர்ச்சிக்குத் தன்னை ஈடுபடுத்திக் கொண்டவர். சிவமணி, சிவம் பெருக்கும் சீலர் என்ற பட்டங்களைப் பெற்றவர். இவரது திருவுருவச் சிலை காரைக்குடியில் இந்து மதாபிமான சங்கத்திற்கு முன்னர் 22.1.1984ல் திறந்து வைக்கப் பெற்றது. 30.9.1974ல் இவ்வுலக வாழ்வை நீத்தவர்.

காந்தியின் மேல் தான் கொண்ட பற்றினால் எளிய சொற்களைக் கொண்டு இப்பிள்ளைத் தமிழ் பாடி யுள்ளார். காப்புப் பருவம் மட்டும் முன்னோர் பிள்ளைத் தமிழின் மரபிற்கு வேறாக ஒவ்வொரு கடவுளரையும் பாடாமல் பெயர் குறிக்கப் பெறாத பரம்பொருளாகிய முழுமுதல் தெய்வத்தைப் பாடியிருப்பது இவரின் நடுவு நிலையைக் காட்டுவதாகும். காந்தியின் வரலாற்றுச் செய்திகளை நூலில் இடம்பெறச் செய்துள்ளார். திருக் குறளைப் பின்பற்றியதே காந்தீயத்தின் அறக்கொள்கை என்பது இவரின் துணிபாகும் திருவள்ளுவரே மறு பிறவியில் காந்தியாகத் தோன்றினார் என்பதும் இவரது கருத்தாகும். எளிய சொற்களில் இனிய தமிழில் சுவை படப் பாடப்பெற்ற இப்பிள்ளைத் தமிழ் தமிழ்க் கடல் இராய.சொ. அவர்களின் தமிழ்ப் புலமைக்கும், தேசிய உணர்வுக்கும் எடுத்துக்காட்டாகும்.

முன்னுரை

செட்டிநாடு என எண்ணுகிற பொழுது சைவமும் தமிழும் நினைவுக்கு வரும். செட்டிநாட்டுத் தமிழ் என நினைக்கும் பொழுது தமிழ்க் கடல் இராய. சொவின் நினைவு வாராது இருக்க இயலாது. மேடையில் - எழுத்தில் - இராய. சொவின் தமிழ் மிஞ்சு தமிழாய் கொஞ்சி விளையாடும்.

தமிழிதயம் மட்டுமல்லாது தேசிய இதயமும் கொண்டவர் இராய.சொ. அவர்தம் தேசிய இதய கீதமே காந்தி பிள்ளைத் தமிழ். பிள்ளைத் தமிழ் இலக்கிய வரிசையில் இன்றளவும் நிலைத்து நிற்பது செய்யுள்களை சந்தி பிரித்துப் பயின்றால் இராய.சொவின் எளிய நடைபுலனாகும்.

மேலைச் சிவபுரி கணேசர் செந்தமிழ் கல்லூரியில் முதலாண்டு பயிலும் காலத்தில் இலக்கிய மன்ற விழாவில் இராய.சொ. அவர்கள் 'திருவாசக தேன்' என்ற பொருளில் சொற்பெருக்காற்றினார்கள். அவர்களின் இனிய - சுவை யான பேச்சே எம் உள்ளத்தே திருமுறைப் பற்றை விளை வித்தது. திருமுறைகளும் - சித்தாந்த சாத்திரங்களும் நன்கு பயில வேண்டும் என்ற எண்ணத்தைத் தோற்றுவித்தது.

அத்தகைய பெருமகனாரின் பேச்சால் உந்தப் பெற்ற என் வாழ்வில் அவர்தம் நூலுக்கு உரை எழுதும் வாய்ப்பு கிடைத் தமைக்கு இறையருளுக்கு கடப்பாடுடையேன். இவ்வரிய பணியில் எளியனை ஈடுபடுத்திய உமா பதிப்பகச் சகோதரர் இலக்குமணன் அவர்களின் அன்பிற்கு என்றும் நன்றி உடையேன்.

திருச்சி
1.4.2013

- பழ. முத்தப்பன்

பதிப்புரை

காந்தீய உணர்வு மிக்க ராய. சொக்கலிங்கனார் இயற்றிய காந்தி பிள்ளைத் தமிழ் - பிள்ளைத் தமிழ் நூல்களிலேயே மிகவும் உயர்ந்தது - சிறந்தது.

தமிழ்ச் சிற்றிலக்கிய வகைகளில் ஒன்று பிள்ளைத் தமிழ் இலக்கியமாகும்.


காந்தியின் மேல் தான் கொண்ட பற்றினால் எளிய சொற்களைக் கொண்டு இந்த காந்தி பிள்ளைத் தமிழை பாடியுள்ளார்.

சித்தாந்த செம்மணி பேராசிரியர் பழ. முத்தப்பன் அவர்கள் இந்த நூலுக்கு உரை எழுதியுள்ளார். அவரின் அரிய பணிக்கு எங்கள் பாராட்டு - நன்றி.

தமிழ் கூறும் நல்லுலகம் தந்து வரும் ஆதரவு மேலும் தொடர வேண்டி விரும்பி கேட்டுக் கொண்டு அன்புடன் உங்கள் முன் படைக்கின்றோம்.

சென்னை - 1. **- இராம. லட்சுமணன்**

உள்ளே...



காந்தி பிள்ளைத் தமிழ்

காப்பு

சாந்தம் பொறை கருணை தண்மை புனித நிறை
காந்திக்குப் பிள்ளைக் கவிபுகல - மாந்தர்
நினைத்தவடி வோடெவர்க்கும் நேர்ந்தவா ஈயுந்
தனித்த பொருள் தாளே சரண்.

பொருள் :

அமைதி, பொறுமை, கருணை, தண்மை, புனிதம் நிறைந்த காந்தி மீது பிள்ளைத் தமிழ்க் கவிதை சொல்ல, மானிடர் நினைத்த வடிவில் காட்சி தரும் தனிப் பொருளாம் மெய்ப்பொருள் திருவடிகளே சரணம்.

சொ.பொ.வி :

சாந்தம் - அமைதி, பொறை - பொறுமை, தண்மை - சாந்தம், புனிதம் - தூய்மை, புகல - சொல்ல, தாள் - திருவடி.

1

காப்புப் பருவம்

நீபடைத்த உயிர்காத்தல் நின்இயல்பே
அதினுமுயர் நெறியே பற்றி
நேர்மைதனில் எட்டுணையும் நீங்காமல்
அறம்வளர்க்கும் நேயம் மிக்க
தாய்படைத்த உயிரனைத்தும் தனிபுரக்கும்
தண்ணளியைத் தரும வாழ்வைச்
சாந்தநிறை பெருங்கடலைச் சத்தியத்தின்
தனியுருவைச் சமம்வே றில்லா.
ஆய்படைத்த அருமணியை அருள்காந்திப்
பெருமானை அடைவே காத்தல்
ஐயமிலை ஆனாலும் என்னாசை
யாலுரைத்தேன் ஐயனைக்காத் தருள்கவே.
பூபடைத்து விண்படைத்துப் புங்கமுறும்
எரிபடைத்துப் பொருகாற் றோடு
புல்லாதி யாவும் படைத்துப்
புரிக்கின்ற புனித மூர்த்தி. (1)

பொருள் :

பூமியைப் படைத்து ஆகாயத்தைப் படைத்து உயர்வுடைய தீயைப் படைத்து, பொருந்திய நீர், காற்று, புல் ஆகிய அனைத்தையும் படைத்துக் காக்கின்ற புனித மூர்த்தியே, நீ படைத்த உயிரை எல்லாம் காப்பது உன்னுடைய இயல்பே என்றாலும், அதிலும் உயர் நெறியைப் பின்பற்றி நேர்மையில் எள்ளளவும் நீங்காமல் அறம் வளர்க்கின்ற

அன்பு மிக்க பாசம் உடையவனாய், படைத்த உயிரனைத்தும் காக்கின்ற அருள் வள்ளலை, தரும வாழ்வை, சாந்தம் நிறைந்த பெருங்கடலை, சத்தியத்தின் தனி உருவை, நடுநிலையில் விளங்கும் அருமணியை, அருள் காந்தியம் பெருமானைப் பொருத்தமுறவே நீ காத்தல் ஐயமில்லை என்றாலும் அப்பெருமானைக் காத்தருள்க என்று என் ஆசையால் உரைத்தேன்.

சொ.பொ.வி :

எட்டுணையும்-எள்ளளவும், நேயம்-பாசம், புரக்கும்-காக்கும்.

புகழ்சேர்சுக் கிலவாண்டுப் புரட்டாதித்
திங்கள்பதி னெட்டாம் நாளில்
புண்ணியநந் திருநாட்டைப் பிடித்தசனி
யகன்றோடச் சனிவா ரத்தில்
மகிழ்கூர மக்களெலாம் மகம்வந்த
பெரியோனை மகித லத்தில்
மற்றொருவர் ஒப்பில்லா மாண்டகுணம்
வாய்ந்தானை வள்ளல் தன்னை
இகழ்செய்கை எள்ளவும் இல்லானை
என்னெளிய இதயந் தன்னில்
என்றுமுள எம்மானை எழிற்காந்திப்
பெம்மனை இனிது காக்க
செகமனைத்தும் ஆக்கியளித் தழித்துமறைத்
தருளைந்து செயலும் வல்ல
திண்மையனே சீலமுளார் திருமணத்தில்
தினமுறையுந் தேவ தேவே. (2)

பொருள் :

உலகம் அனைத்தும் ஆக்கி, காத்து, அழித்து, மறைத்து, அருளும் ஆகிய ஐந்து தொழில்களில் வல்ல திண்மை

யனே, ஒழுக்கம் உடையவர் திருமணத்தில் தினமும் உறையும் தேவதேவனே, புகழ்சேர்ந்த சுக்கில ஆண்டு புரட்டாசி மாதம் பதினெட்டாம் நாள் சனிக் கிழமை மக நட்சத்திரத்தில் - புண்ணிய பாரத நாட்டைப் பிடித்த சனி (அன்னியர் ஆட்சி) அகன்று ஓட, மக்கள் எல்லாம் மகிழ்ச்சி அடையத் தோன்றிய பெரியோனை, இந்த உலகத்தில் யார் ஒருவரும் ஒப்பில்லா நிலையில், குணம் வாய்த்தவனை, வள்ளல்தன்னை, இகழ்ச்சி பொருந்திய செய்கை எள்ளளவும் இல்லாதவனை, என்னுடைய எளிய இதயத்தில் எங்குமுள்ள எம்மானை, எழிற் காந்தியம் பெருமானை நீடு காப்பாயாக.

சொ.பொ.வி:

சனிவாரம் - சனிக்கிழமை, மகம் - மக நட்சத்திரம், மகிதலம் - உலகம், மாண்ட - மாண்புடைய.

அகழ்வாரைத் தாங்குகின்ற அம்புவிபோல்
அவமதிக்கும் அவர்ப்பொ றுக்கும்
அன்பரே தலையாயார் ஆவரென
அறமுரைத்தோன் அறைந்த வாபோல்
அகழ்வாரைப் பொறுத்தவர்க்கும் இன்மொழியால்
உய்யவழி இயம்பு மேலாம்
ஏழையரைத் தோழமைகொள் எங்காந்திப்
பெருமானை என்றுங் காக்க
திகழுமுல குயிர்தொறுமவ் வுயிர்க்குயிராய்
உள்ளுறைந்த திண்மை கொண்டு
செய்கைமுழு வதுநடத்திச் சிக்கெனவே
பிடித்தவன்பர் சிந்தை நன்றாய்
நெகிழ்கூர என்றென்றும் அவருள்ளங்
குடிகொண்ட நேய வாழ்வே
நித்தியமே நின்மலமே நிர்க்குணமே
என்னிதயம் நிற்குங் கோவே. (3)

பொருள் :

திகழுகின்ற உலகம் உயிர் ஆகியவற்றில் உயிருக்கு உயிராய் அவற்றின் உள்ளே கலந்து வல்லமை கொண்டு உலகச் செயல் அனைத்தையும் நடத்தி, தன்னைச் சிக்கெனப் பிடித்த அன்பர்களின் சிந்தை நன்றாக நெகிழ்ச்சி அடைய, என்றும் அவர் உள்ளத்தில் குடி கொண்டிருக்கும் பாசமுடைய வாழ்வே, அழிவில்லாத வனே, மலமாகிய குற்றம் இல்லாதவனே, தனக்கென ஒரு குணம் இல்லாதவனே, என் இதயத்தில் நிற்கும் தலைவனாகிய இறைவனே - தன்னைத் தோண்டுகின்ற வரைத் தாங்குகின்ற நிலம்போல, தன்னை அஃவமதிப் பாரைப் பொறுக்கும் அன்பரே தலைமையாவார் என்று அறமுரைத்த திருவள்ளுவன் சொல் போல், இகழ் வாரைப் பொறுத்து அவருக்கும் இனிய மொழிகளால் அவர்கள் வாழ வழி கூறும் மேன்மையும் கொண்டு, ஏழை எளியவரைத் தோழமையாகக் கொள்ளும் காந்தியம் பெருமானைக் காப்பாயாக.

சொ.பொ.வி:

அறமுரைத்தோன் - திருவள்ளவர், உய்ய - வாழ, உள்ளுறைந்து - உயிர்களோடு ஒன்றாய், திண்மை கொண்டு - தான் வேறாய் வலிமை கொண்டு, அன்பர் - அடியவர், நெகிழ் கூற - கசிய, நேயவாழ்வே - பாசவாழ்வே, நித்தியம் - அழிவில் லாதவன் (அநாதி), நின்மலன் - ஆணவம், கன்மம், மாயை ஆகிய மலங்கள் இல்லாதவன். பாடலில் இடம்பெற்ற குறள் :

அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
இகழ்வார் பொறுத்தல் தலை. (குறள் - 151)

பூதலத்தில் அறம்பொலிய மறம்தொலையப்
பிறந்தருளும் புனிதன் புண்ய
பூமியாம் பாரதநந் திருநாட்டில்
போர்ப்பந்தர் பிறங்க வந்தோன்
காதலற வேயறுத்தான் கலங்காதான்
கடமையையே கருத்துட் கொண்டான்
கருணையே உருவான எம்பெருமான்
காந்திதனைக் காக்க காக்க
மாதலத்து வாழ்மக்கள் வீடடைய
வருத்தசம யங்கட் கெல்லாம்
வழித்துணையாய் அண்டமெலாம் வகுத்துலகில்
வாழுமுயிர் ஆக்கிக் காத்துச்
சாதலுற வேயழித்துச் சங்கையற
சாற்றரிய விளையாட் டார்ந்து
சராசமாய்ப் பிறபவலாய்த் தத்துவங்கள்
கடந்தபரம் பொருளாம் ஈசன். (4)

பொருள் :

உலகில் வாழுகின்ற மக்கள் வீட்டுப் பேறு அடையக் கொள்கைகளை வகுத்த சமயங்களுக்கு எல்லாம் வழிகாட்டுபவனாய், ஏழு உலகங்களையும் வகுத்து மண்ணுலகில் வாழுகின்ற உயிர்களை ஆக்கி, காத்து, இறந்திட அழித்து, ஐயமில்லாது சொல்லுவதற் கரிய விளையாடல்களைச் செய்து இயங்குகின்ற உயிரி னங்களாய், பிற பொருள்களாய், தத்துவங்களைக் கடந்த பரம்பொருளாம் ஈசனே, உலகத்தில் அறம் சிறக்க, பாவம் தொலையப் பிறந்தருளிய புனிதன், புண்ணிய பூமியாம் பாரதத் திருநாட்டில் போர்பந்தர் நகரில் பிறந்து வந்தோன், ஆசையை அறுத்தான், கலங்காதவன், கடமையையே

கருத்தாகக் கொண்டவன், கருணையே உருவானவன் ஆகிய எம்பெருமானாம் கந்தியைக் காக்க.

சொ.பொ.வி:

பூதலம் - உலகம், மறம் - பாவம், காதலற - ஆசையற, மாதலத்து - உலகம், வீடடைய - முத்தியடைய, சங்கை - ஐயமற, சாற்றரிய - சொல்லுதற்கு அரிய, விளையாட்டு - திரு விளையாட்டு, சராசராமாய் - உலகில் இயங்கும் பொருளாய்.

நின்மக்கள் தம்முள்ளே ஒருசாரார்
மற்றவரை நேய மோடு
நெருங்கியுற வாடாமல் நிகழ்பிறப்பின்
தன்மைகொடு நிந்தை கூறித்
தன்மநெறி சாராமல் சான்றாண்மை
நோக்காமல் சாதி தன்னில்
தாழ்ந்தவரே நீரென்னச் சாற்றுமநி
யாயத்தைச் சகிக்க லாற்றா
தன்னபிழை தனையகற்ற அகங்கொண்டா
வனபுரியம் அம்மான் ஐயன்
அருள்வடிவ மாயுதித்த அறக்காந்திப்
பெருமானை அன்பாற் காக்க
பன்னரிய பல்லுலகும் பல்லுயிரும்
பல்பொருளும் பகலும் அல்லும்
பல்பொருளும் பல்பெயரும் பல்வேறு
சமயமுமாம் பரம நாத. (5)

பொருள் :

சொல்லுதற்கு அரிய பல உலகமும், பல உயிரும், பல பொருளும், பகலும், இரவும், பல உருவமும், பல பெயரும், பல்வேறு கொள்கை உடைய பல சமயங் களும் ஆகத் திகழும் பரமநாதனே, நீ படைத்த மக்கள் தம்முள்ளே ஒரு சாரார் மற்றவர்களை அன்போடு

நெருங்கி உறவாடாமல் பிறப்பால் வேறுபடுத்தி, பழி கூறி, தருமநெறி சாராமல், சான்றாண்மையை நோக்காமல், அவர்களைச் சாதியில் தாழ்ந்தவர் நீர் என்று கூறும் அநியாயத்தை, பொறுக்கலாற்றாது அத்தகைய பிழையை அகற்றுவதற்கு மனதில் எண்ணி, ஆவன செய்கின்ற பெம்மான், அருள் வடிவமாகவே உதித்த, அறநெறி கொண்ட காந்தியம் பெருமானைக் காப்பாயாக.

சொ.பொ.வி:

நிந்தை - பழி, தன்ம நெறி - தருமநெறி, சகிக்க - பொறுக்க, பன்னரிய - சொல்லரிய, அல் - இரவு.

அமைச்சனாய் அவனிமுறை அரசாண்ட
அறந்திறம்பா அறிஞன் அந்நாள்
அரசர்க்கும் அஞ்சாத ஆற்றல்படைத்
துயர்ச்சிபெறும் அண்ண லான
சமர்த்தனுத் தமசந்த்ரன் மகன்மகனைத்
தந்தைதொழில் தன்னைத் தாங்கித்
தந்தையினுஞ் சதமடங்கு தநயனெனும்
புகழ்கொண்டம் மன்னன் தந்த
அமைப்புடைய பெருநிலத்தை அடையமறுத்
திட்டகரம் சந்த்ரன் ஈந்த
அருமகனைத் திருமகனை அவனிக்கே
ஒருமகனைக் காந்தி யென்னும்
எமைப்புரக்கும் பெருமகனை எல்லாமாய்
அல்லதுமாய் இணையில் லாத
இன்பதாய்த் துன்பமதாய் இருந்திடுமோர்
இறைவனார் இனிது காக்க. (6)

பொருள் :

எல்லாமாய், அல்லதுமாய், வினையில்லாததாய், இன்மாய், துன்பமாய் விளங்குகின்ற இறைவனே,

கத்தியவாரில் உள்ள சமஸ்தானத்தில் அமைச்சராய் விளங்கி, உலக அரசமுறை தவறாது செயல்பட்ட அறிஞன், அந்நாள் அரசராக விளங்கிய நவாப்பிற்கு அஞ்சாத ஆற்றல் படைத்த அண்ணல், அறிவிற் சிறந்த வன் உத்தம சந்த்ரன் என்பவருக்கு (காந்தியின் தாத்தா விற்கு) மகனாய்ப் பிறந்து, தந்தையின் தொழிலாகிய சமஸ்தான மந்திரியாய்ப் பதவியேற்று, தந்தையைக் காட்டிலும் நூறு மடங்கு புகழ் கொண்ட தனயன் ஆகி, நவாப் மன்னன் தந்த நிலத்தையும் ஏற்க மறுத்த கரம்சந்த்ரன் என்ற சான்றோன் பெற்றிட்ட அருமை மகனை, திருமகனை, உலகத்திற்கு ஒரு மகனை, காந்தியம் பெருமானைக் காப்பாயாக.

சொ.பொ.வி :

அந்நாள் அரசன் -நவாப், சதம் - நூறு, தனயன் - மகன், கரம்சந்த்ரன் - காந்தியின் தந்தை காபாகாந்தி.

மத்தெறிந்த தயிர்போல வல்லடிமை
வலியழிய மறங்கள் மாள
வருமகாத் மாவென்னும் மாதவனை
மணிவயிறு வாய்த்த மங்கை
நத்தியயல் நாடுசெலும் நன்மகற்கந்
நாட்டார்கொள் கள்ளுன் நங்கை
நசையிவற்றை நண்ணாது நல்லொழுக்கம்
நாட்டிவர நவின்ற நன்மைப்
புத்திரிபாய் அருமந்த புத்திரனைக்
காந்திதனைப் புவிக்குத் தோன்றாப்
புகழ்த்துணையா விருந்தாட்டும் பொருளாகிப்
பழமையாய்ப் புதுமை யாகிச்

சத்து வமாய்ப் பிறகுணமாய்க் குணங்கடந்த
தத்துவமாய் மறைதா னாகித்
தமிழாகி இசையாகிச் சமயங்கள்
ஆனபரன் சார்ந்து காக்க. (7)

பொருள் :

உலகத்தில் தோன்றாமல் புகழைத் துணையாகக் கொண்டு, அனைத்தையும் ஆட்டும் பொருளாகி, பழமைக்குப் பழமையாய், புதுமைக்குப் புதுமையாய், சத்துவ குணமாய், பிற குணமாய் விளங்கும் குணங் களைக் கடந்த தத்துவமாய், வேதங்களாய், தமிழாய், இசையாய், சமயங் களாய் விளங்கும் பரனாம் சிவ பெருமான் - மத்தில் பட்ட தயிர் போல வல்லடிமை அழிய, பாவங்கள் மறைய, வந்த மகாத்மா என்னும் மாதவனைத் தன் மணி வயிற்றில் தாங்கிய பெருமாட்டி - விரும்பி அயல்நாடு செல்லும் தன் மகனுக்கு அந்நாட்டார் வழக்கத்தில் உள்ள கள்ளுண்ணுதல், புலால் உண்ணுதல், பெண்ணாசை இவற்றை விரும்பாது, நல்லொழுக்கத்தை நாட்டிவர நவின்றவள் நன்மையான புத்ரிபாய். அவளுடைய அருமந்த புத்திரனாம் காந்தியைக் காப்பாராக.

சொ.பொ.வி :

மத்து - தயிர்கடையும் கருவி, அடிமை - அடிமைத் தனம், மறம் - பாவம், நத்தி - விரும்பி, நசை - ஆசை, நண்ணாது - சாராது (விரும்பாது), புத்ரிபாய் - காந்தியின் தாயார், புவி - உலகம், ஆட்டும்பொருள் - ஆட்டுவானாகி, சத்துவம் - நான்கு குணங்களில் ஒன்று, மறை - வேதம்.

வள்ளுவர்சீர் மனைவியெனும் வாசுகிநேர்
மான்கற்பு மடந்தை மாற்றம்
மறுத்துரைக்க மாட்டாதாள் வள்ளவர்சொல்
மனைமாட்சி வாய்த்த மங்கை

எள்ளுகுணம் இறையுமிலாள் எழிற்கணவன்
இன்பதுன்பம் எல்லாம் ஏற்பாள்
இதயந்தான் இணையாமல் எந்நாளும்
ஏவல்செயும் ஏதம் இல்லாள்
கள்ளுலவு கருங்கூந்தற் கஸ்தூரி
காதலெழிற் கணவன் கார்நேர்
காந்தியெனும் கண்ணியனைக் கடலாகிக்
கல்லாகிக் கருவாய்க் காலாய்த்
தள்ளரிய தரையாகித் தனிவிண்ணாய்த்
தழலாகித் தண்ணீ ரானாய்ச்
சான்றோர்கள் தம்மனத்தே சார்ந்துறையுந்
தனிப்பெரிய தலைவன் காக்க. (8)

பொருள் :

கடலாகி, கல்லாகி, கருவாகி, காற்றாகி, தரையாகி, விண்ணாகி, நெருப்பாகி, தண்ணீராகி விளங்கி, மேலும் சான்றோர்களின் மனத்தே சார்ந்து உறைகின்ற தனிப் பெருந் தலைவனாம் சிவபெருமான் - வள்ளுவருடைய புகழ் பெற்ற மனைவியாகிய வாசுகியைப் போன்ற கற்புடைய பெண், கணவனின் சொல்லுக்கு மறுத்துரைக்கமாட்டா தவள், வள்ளுவர் கூறிய மனைமாட்சி வாய்ந்த மங்கை போன்றவள், எள்ளி நகையாடுகின்ற குணம் சிறிதும் இல்லாதவள், கணவனின் இன்ப துன்பங்களை ஏற்பவள், இதயம் உடன்படாமல் எந்த நாளும் பிறரை ஏவல் செய்யும் குணம் இல்லாதவள், தேன் சொரியும் மலர் சூடிய கூந்தலைக் கொண்ட கஸ்தூரி என்ற இப் பெண்ணின் ஆசை மிக்க கணவன், மேகம் போல் கொடை உடைய காந்தி என்னும் ஒழுக்க சீலனைக் காப்பாராக.

சொ.பொ.வி:

மாற்றம் - கணவன் சொல்லுக்கு எதிர்ச்சொல், எள்ளு குணம் - இழிவான குணம், இறை - சிறிதும், ஏதம் - குற்றம், தழல் - நெருப்பு.

தகப்பனைப்பெற் றவர்களிலே தரணிமுழு
தீடில்லா தவரே என்னச்
சாற்றுமரி லால்மணிலால் சாருமிராம்
தாசோடு தந்தை சொன்ன
செகம்புகழும் தேவதாஸ் எனுமிவரின்
தந்தையைச் சீர்த்தி மிக்க
திருவணிகர் மரபென்றந் நாள்வகுத்த
குலத்துதித்துந் திருமால் சீலம்
அகங்கொண்ட அன்பர்களின் வழிவந்தும்
அவ்வளவோ டமைமந்தி டாமல்
அவனியுறை பெருமக்கள் அனைவருங்கொண்
டாடுசெயற் காந்தி தன்னை
அகரமுதல் எழுத்தாகி அவைசேர்ந்த
சொல்லாகி அச்சொல் தன்னால்
ஆனபொருள் முதலான அனைத்துமாம்
அண்ணலார் அடைவே காக்க. (9)

பொருள்:

தான்தனித்தும் பிற எழுத்துக்களோடு சேர்ந்து ஒலிக்கும் அகர எழுத்துப் போல், உலகப் பொருளில் தான் வேறாய், ஒன்றாய் இருக்கும் அண்ணலாகிய சிவபெரு மான் - உலகத்தில் நல்ல தந்தையைப் பெற்றவர்களே ஈடு இணையில்லாதவர் என்று கூறும் வண்ணம் அரிலால், மணிலால், ராமதாஸ், தேவதாஸ் என்னும் நான்கு மக்களின் தந்தையை, புகழ்மிக்க வணிகர் மரபு என்று அந்நாள் வகுத்த குலத்தில் உதித்து, திருமாலை வணங்குகின்ற அன்பர்களின் வழிவந்து, அதோடு அமைந்துவிடாமல் உலகத்து மக்கள் எல்லாம் போற்றிக் கொண்டாடுகின்ற செயல்களைச் செய்கின்ற காந்தியம் பெருமானைக் காப்பாராக.

சொ.பொ.வி : *செகம் - உலகம், அவனி - உலகம்.*

வேறு

தென்னாப் பிரிக்கா எனுநாட்டிற்
சீல நிறையு மனைவி யொடும்
சிறந்த மைந்தன் தன்னோடுஞ்
சிறைவாழ் வேற்றந் நியர்செய்த
இன்னா ஒன்றோ அம்மம்ம
எண்ணின் இதயம் ஊடுருவும்
எல்லாம் பொறுத்தின் செயல்புரியும்
எம்மான் காந்தி தனைப்புரக்க
மன்னா அணுவுக் கணுவாகி
மலையிற் பெரிய மலையாகி
மண்ணும் விண்ணும் பாதலமும்
மதியும் ரவியும் தானாகித்
தன்னேர் இன்றி எல்லாமாய்த்
தரணி புகழ எங்குநிறை
தரும வடிவ மாய்த்திகழுந்
தண்மை மிக்க பழம்பொருளே. (10)

பொருள் :

அணுவிற்கு அணுவாகி, மலைக்குப் பெரிய மலையாகி, மண்ணாகி, விண்ணாகி, பாதாள உலகமாகி, திங்களாகி, சூரியனாகி விளங்குகின்ற, தனக்கு ஒப்புவமை இல்லாத எல்லாப் பொருளுமாய், உலகம் போற்ற எங்கும் நிறைந்து, அறத்தின்வடிவாய்த்திகழுகின்ற பரம்பொருளாகிய சிவபெருமான் - தென்னாப்பிரிக்கா எனும் நாட்டில் தன் சீலம் நிறைந்த மனைவியோடும், சிறந்த மகனோடும் சிறைச்சாலை வாழ்வை ஏற்று, அன்னியர் செய்த துன்பங்கள் எண்ணில் லாதவற்றை எல்லாம் பொறுத்து, எண்ணற்ற இதயங்களில் வீற்றிருக்கும் எம்மான் காந்திதனைக் காப்பாராக.

சொ.பொ.வி: *இன்னா - துன்பம், எண்ணின் - எண்ணில்லாத, இன் செயல் - நல்ல செயல், பாதலம் - பாதாள உலகம், இரவி - சூரியன்.*

2

செங்கீரைப் பருவம்

போர்ப்பந்தர் தனிற்பிறந்து புவனமெலாம்
புகழ்படைத்துப் பொறுமை யோடு
பொல்லாத மறங்கொன்று அறமோம்பிப்
பரந்தபெரும் பூமி முற்றும்
நார்ப்பந்தர் இடட்டவற்றுள் நண்ணுவார்
தமைக்கூட்டி நண்ணா தாரால்
நலிவுபல வந்துற்றும் நாட்டமதிற்
செலுத்தாது நன்றே நாடி
வார்ப்பந்த மக்கள்மனை மாண்பொருளெ
லாந்துறந்து மக்கட் கெல்லாம்
மன்னறஞ்சத் யாக்கிரகம் மற்றபல
அறங்களெலாம் வகுத்துச் சொற்றுச்
சீர்ப்பந்த ஏர்வாடாச் சிறைமேய
செல்வனே செங்கீரை யாடியருளே
செயற்கருஞ் செயல்செய் செகம்போற்று
சேவகா செங்கீரை யாடியருளே. (1)

பொருள் :

போர்பந்தர் என்னும் திருநகரில் பிறந்து உலக மெலாம் புகழ் படைத்துப் பொறுமையோடு பொல்லாத பாவம் கொன்று, அறத்தைக் காத்துப் பரந்திருக்கும் இவ்வுலகம் முற்றும் அன்பெனும் பந்தல் இட்டு, அவற்றுள் சேர்வார் அனைவரையும் தனைக்கூட்டி,

பகைவரால் மெலிவு பல வரினும் அதில் கவனம் செலுத்தாது, நல்லதையே நாடி, நேர்மை மிக்க மக்கள், மனை, பெரும்பொருள் அனைத்தையும் துறந்து, மக்கள் எல்லாம் நிலைபெற அறமுடைய சத்யாக்கிரகம் போன்ற மற்ற பல அறங்கள் எல்லாம் வகுத்துச் சொல்லிச் சீர்மிக்க ஏர்வாடா சிறை சென்ற செல்வனே, செங்கீரையாடி யருளே. செயற்கரும் செயல் செய்து உலகம் போற்றும் சேவகா செங்கீரையாடியருளே.

சொ.பொ.வி :

மறம் -பாவம், நார் அன்பு, நண்ணி - சேர்தல், நண்ணார் - பகைவர், நலிவு - மெலிவு, வார்ப்பந்த - நேர்மை மிக்க, சொற்று - சொல்லி.

தீஞ்சாலி விளைபழனத் திருநாட்டின்
ஓர்பகுப்பாய்த் திகழும் பண்டு
திருமலிய வரசுபுரி திண்ணமுறு
பாண்டவர்சீர்ச் செல்வத் தேவி
பாஞ்சாலி யெனுமரிய பதிவிரதை
தனையீன்ற பண்பு மிக்க
பஞ்சநதம் பரவிநலம் படிக்கீயும்
பாங்கான பான்மை கொண்ட
பாஞ்சால மெனுநாட்டிற் பகரரிய
பாழான பாத கங்கள்
பலசெய்த வரசாங்கத் தொத்துழையா
மைபூண்ட பண்பால் அன்று
தேஞ்சாற்றுத் திருத்துளவோன் பிறந்தசிறை
சேர்ந்தவா செங்கீரை யாடியருளே
செயற்கருஞ் செயல்செய் செகம்போற்று
சேவகா செங்கீரை யாடியருளே. (2)

பொருள் :

செந்நிற நெல் விளையும் வயல்களைக் கொண்ட திருநாட்டில் ஓர் பகுதியாய்த் திகழும் - முன் காலத்தில் செல்வம் மிகுந்திட அரசு புரிந்த வலிமை மிக்க பாண்டவர்களின் மனைவியாகிய கற்புடைய பண்புமிக்க தேவி பாஞ்சாலியை ஈன்ற ஐந்து நதிகள் பாய்ந்து பூமிக்கு நலம் தரும் பாங்கான தன்மை கொண்ட பாஞ்சால நாடு எனும் நாட்டில், சொல்லுதற்கரிய கொடுமையான பாதகங்கள் பல செய்த அரசுக்கு ஒத்துழையாமை பூண்ட பண்பால், அன்று தேன் சொரியும் துளசி மாலையை அணிந்த கண்ணபிரான் பிறந்த சிறை சேர்ந்தவனே, செங்கீரையாடியருளே, செயற்கரிய செயல் செய்து உலகம் போற்றும் சேவகா செங்கீரை யாடியருளே.

சொ.பொ.வி:

தீஞ்சாலி - தீ போன்ற செம்மை நிறமுடைய நெல், பழனும் - வயல், பகுப்பு - ஒரு பகுதி, பதிவிரதை - கற்புடையவள், நதம் - நதி, படி - பூமி, பகர - சொல்லுதற்கு, தேஞ்சாற்றும் - தேன் ஒழுகும், துளவோன் - துளசி மாலை அணிந்தவன்.

மந்திரியின் வழிவழியில் வந்துதித்தும்
அவ்வாழ்வை மதியா திந்த
மண்ணாசை முதலான மாயையெலாம்
ஒழித்திறைவன் வகுத்து னக்குத்
தந்தபெரும் பொருளையெலாந் தாரணியின்
வாழ்விற்கே தந்த செல்வா
சத்தியமே கமழ்வாயுந் தண்ணளியே
சார்மனமுந் தாங்கும் ஐயா

இந்திரிய வயப்பட்டே ஈடேற
வகைய றியார்க்கினிய கூறி
எல்லோரும் உயர்நிலையை எய்தவுப
தேசமருள் எழிலார் எந்தாய்
செந்தரள நந்தீனுஞ் செய்சூழு
நன்னாட செங்கீரை யாடியருளே
செயற்கருஞ் செயல்செய் செகம்போற்று
சேவகா செங்கீரை யாடியருளே. (3)

பொருள் :

சமஸ்தான அமைச்சர் பதவி வகித்த குல வழியில் வந்து பிறந்தாலும், அந்த வாழ்வை மதியாது, இந்த உலகத்தில் மண்ணாசை முதலான நிலையில்லாதவற்றை எல்லாம் ஒழித்து, இறைவன் உனக்கு வகுத்துத் தந்த பெரும் பொருளை எல்லாம் உலக மக்கள் வாழ்க்கைக்கே தந்த செல்வா - சத்தியமே மணக்கின்ற திருவாயும், அருளுள் ளமே சார்ந்த மனமும் தாங்கும் ஐயனே, ஐம்புலன்களின் வழியே சென்று வாழ்க்கையில் ஈடேற முடியாதவர்களுக்கு இனிய வழிகள் கூறி, அனைவரும் உயர்நிலை எய்த உபதேசம் கூறிய எழில் மிகுந்த என் தந்தையே, சிப்பிகள் முத்து ஈனும் நிலங்கள் சூழ்ந்த நல்ல நாடனே, செங்கீரை யாடியருளே, செயற்கரிய செயல் செய்து உலகம் போற்றும் சேவகனே, செங்கீரை யாடியருளே.

சொ.பொ.வி :

மந்திரி - அமைச்சர் (காந்தியின் தாத்தா, அப்பா இருவரும் சமஸ்தான அமைச்சராய் இருந்தவர்கள்), மாயை - நிலை யில்லாத, இந்திரியம் - ஐந்து புலன்கள், தரளம் - முத்து, நந்து - சிப்பி.

எல்லாமாய் அல்லதுமாய் எங்குநிறை
யிறைபடைப்பில் ஏற்றத் தாழ்வாம்
என்றுபல கற்பித்தே இவ்வுலகச்
செல்வத்தால் இறுமாப் புற்றுப்
பொல்லாத நெறிபற்றிப் புண்ணியமென்
பதைமறந்து புன்மை கொண்டு
புவிப்பொறையாத் திரிகின்றார் பலமக்கள்
வேறுபலர் புந்தி யின்றி
நில்லாத உடல்கொண்டு நான்பெரியன்
சாதியினில் நீகீழ் என்ன
நிலையறியா துழல்கின்றார் ஈதென்ன
உலகியற்கை என்ன மற்றோர்
செல்லாத பெருந்துறையிற் சென்றருளு
செல்வனே செங்கீரை யாடியருளே
செயற்கருஞ் செயல்செய் செகம்போற்று
சேவகா செங்கீரை யாடியருளே. (4)

பொருள் :

எல்லாப் பொருளுமாய், அல்லதுமாய் எங்கும் நிறைந்த இறைவன் படைத்த மக்கள் படைப்பில் ஏற்றத் தாழ்வுகள் பலவற்றைக் கற்பித்து, இவ்வுலகத்தில் தாங்கள் பெற்ற செல்வத்தால் தற்பெருமை கொண்டு, பொல்லாத நெறிகளைக் கடைப்பிடித்து, புண்ணியம் என்பதை மறந்து, இழிவு கொண்டு பூமிக்குப் பாரமாகத் திரிகின்றார் பலர். வேறு பலர் புத்தியில்லாமல் அழிகின்ற உடலைச் சிறப்பாக எண்ணி, சாதியில் நான் பெரியவன், நீ சிறியவன் என்று தங்கள் நிலையறியாது வாழ்கின்றார் கள். இத்தகைய உலக இயற்கைதான் வியப்பாக இருக் கிறதே என்ற யாரும் செல்லாத அன்பு வழியில் சென்று

அருளுகின்ற செல்வனே, செங்கீரை யாடியருளே, செயற்கரும் செயல் செய்து உலகம் போற்றும் சேவகா செங்கீரை யாடியருளே.

சொ.பொ.வி :

இறுமாப்புற்று - தற்பெருமை உற்று, புவிப்பொறையா - பூமிக்குப் பாரமாக, நில்லாத உடல் - அழியும் உடல், உழல் கின்றார் - வாழ்கின்றார்.

வேறு

ஞாலம் பெறினும் நடுநிலை தவறா
நல்லோய் நாயேனை
நஞ்சாம் உலகத் தீநெறி யதனுள்
நண்ணா தாட்கொண்ட
சீல அறத்தை வாயாற் கூவிச்
செய்கை மாறுபட்ட
சிறியோர் தமக்கும் வீண்பேச் சுரையீர்
செய்து காட்டுமென
ஏல வுரைததே யுயர்நெறி பற்றி
இருஞ்சிறை புக்கருளி
இன்னல் அனைத்தும் இன்பம் எனக்கொள்
எந்தாய் மோகனனே
ஆலனை யார்க்கும் அருள்தரும் அமுதே
ஆடுக செங்கீரை
அருள்வடி வங்கொண் டவனியில் வந்தவ
ஆடுக செங்கீரை. (5)

பொருள் :

உலகமே கிடைத்தாலும் நடுவுநிலை தவறாத நல்லவனே, நாய் போன்ற என்னை உலகத்தின் நஞ்சு போன்ற அழிக்கக் கூடிய தீ நெறிகளில் செல்லாத

வண்ணம் ஆட்கொண்ட சீலனே, அறங்களைத் தங்களுடைய வாயினால் கூறி, செயலில் மாறுபட்டு விளங்கும் சிறியவர்களுக்கு, ''வீண் பேச்சு சொல்லாதீர், செயலில் செய்து காட்டுக'' என உரைத்து, உயர்ந்த நெறியைக் கைப்பற்றி, அதை ஏற்காத பகைவரால் பெரிய சிறை புகுந்து பெற்ற துன்பங்கள் எல்லாம் இன்பமே எனக் கொண்ட என் தந்தை மோகனனே, ஆலமரம் போல் பரந்துபட்ட அனைவருக்கும் அருள்தரும் அமுதே, செங்கீரை யாடியருளே, அருள் வடிவம் கொண்டு உலகுக்கு வந்தவனே, செங்கீரையாடிருளே.

சொ.பொ.வி :

ஞாலம் - உலகம், நண்ணாது - சேராது, ஆல் - ஆலமரம்.

இருநில மதனில் இருந்துயிர் வாழ்தல்
விருந்திட என்றெவரும்
இணையிலை எனுமா றிசைபெறு புலவன்
எந்திரு வள்ளுவன்
றுரைசெயு மொழியைச் சிரமிசை யேற்றே
ஒருபக லும்வீணா
ஒழியா துற்ற விருந்து புரந்து
வருவிருந் தெதிர்நோக்கும்
பெருமைகள் நிறையுந் திருமலி மக்கட்
பெற்றுயர் புகழ்கொண்ட
பேசின் ஞாலத் தெந்நா டுந்நிகர்
பெறுமோ எனத்தக்க
அருமைகள் மிகமலி திருநா டுடையாய்
ஆடுக செங்கீரை
அருள்வடி வங்கொண் டவனியில் வந்தவ
ஆடுக செங்கீரை. (6)

பொருள் :

இந்தப் பெரிய உலகத்தில் வாழ்தல் வருகின்றவர்க்கு விருந்திடவே ஆகும் என்றும், அவர்களுக்கு இணை யில்லை என்றும் புகழ்பெற்ற புலவனாம் எம் திருவள்ளு வன் உரைத்த சொல்லைத் தலையில் கொண்டு, ஒரு பகலும் வீணாக்காது, வந்த விருந்தினருக்கு விருந்திட்டு, வருகின்ற விருந்தினரை எதிர்நோக்கும் பெருமைகள் நிறைந்த, செல்வம் மிகுந்த மக்களைப் பெற்று உயர்புகழ் கொண்ட எங்கள் நாட்டிற்கு (பாரத நாட்டிற்கு), இந்த உலகத்தில் எம் நாட்டிற்கு வேறு எந்நாடும் ஒப்பாகுமோ என்னுமளவிற்குச் சிறப்புகள் கொண்ட திருநாடாம் பாரத நாட்டை உடையவனே, செங்கீரை யாடியருளே. அருள் வ'டிவு கொண்டு உலகில் வந்தவனே, செங்கீரையாடியருளே.

சொ.பொ.வி :

இருநிலம் - பெரிய உலகம், இசைபெறு புலவன் - திருவள்ளுவன், சிரம் - தலை, புரந்து - காத்து, திருமலி - செல்வம் மிகுந்த, ஞாலம் - உலகம். பாட்டில் இடம்பெற்ற குறள்:

இருந்தோம்பி இல்வாழ்வது எல்லாம் விருந்தோம்பி
வேளாண்மை செய்தற் பொருட்டு" *(குறள் - 81)*

மாநில மதின்வரு மக்கள் பிறப்பின்
மாண்பயன் உணர்ந்தழியா
மண்பெரு வீட்டை வழியை வகுத்த
வல்லுநர் பலரெனினும்
வானவர் மண்ணவர் மற்றவ ருந்தொழ
வான்செயல் பலசெய்த
வண்டமிழ் கன்னி வளர்த்த செழுந்தமிழ்
வரம்பமை தித்திக்கும்

தென்சொரி தெய்வத் தீந்தமிழ் மொழியிற்
றிறம்பா அறமுரைத்த
தெய்வப் புலமைத் திருவள் ளுவனார்
திறமெவ ருக்குவரும்
ஆன்றவர் உரைவழி செயல்புரி அறவோய்
ஆடுக செங்கீரை
அருள்வடி வங்கொண் டவனியில் வந்தவ
ஆடுக செங்கீரை. (7)

பொருள் :

உலகத்தில் பிறந்த மக்கள் பிறப்பினுடைய பெரும் பயன்களை உணர்ந்து, வாழ்ந்து மேலுலகத்தை அடைய வழியைச் சொன்ன அறிஞர்கள் பலர் என்றாலும், தேவர்களும் மண்ணுலகத்தவரும் மற்றவரும் தொழும் வண்ணம் உயர்ந்த பல செயல்களைச் செய்த, வளப்பம் மிகுந்த தமிழ்க் கன்னி வளர்த்த செழுந்தமிழ் நாட்டில் தித்திக்கும் தேன்போன்ற தெய்வத் தீந்தமிழ் மொழியில், மாறுபடாத அறம் உரைத்த தெய்வப் புலவன் திருவள்ளுவனார் திறமை எவருக்கு வரும். (ஒருவருக்கும் வாராது) அவரின் சொல்வழி செயல் புரிகின்ற அறவோனே செங்கீரை ஆடுக. அருள்வடிவு கொண்டு உலகில் வந்தவனே செங்கீரை ஆடுக.

சொ.பொ.வி:

நானிலம் - பெரிய உலகம், மாண் பயன் - உயர்ந்த பயன், வீடடை வழி - முத்திக்கு உரிய வழி, திறம்பா - மாறுபடாத.

உலகவர் அவரவர் மதமத குருகுரு
வெனவென உன்னரிய
உயரிய ஒருதனி உறுசெயல் ஒண்புகழ்
ஒளியெனும் உன்னாமம்
பலபல படிசொலி அனுதின மும்மகிழ்
பரிசெவர் அறியாதார்
படிதனில் அனைவரும் ஒருபடி எனவுணர்
படிறில் பெருந்தகையே
கலகல வெனவெறும் உரைபல மொழிகுநர்
மிகமலி காசினியில்
கருதிய தெதுவெது அதுவது புரியெங்
காந்திப் பெருமானே
அலைபுனை நிலமகள் துயர்களை அந்தண
ஆடுக செங்கீரை
அருள்வடி வங்கொண் டவனியில் வந்தவ
ஆடுக செங்கீரை. (8)

பொருள் :

உலகத்தில் வாழுகின்றவர்கள் தங்களுடைய மதத்திற்கு ஆசிரியர் என எண்ணுதற்கு அரிய, உயர்ந்த, உறுதனிச் செயல்புரியும் மேலான புகழ்கொண்ட ஒளி பொருந்திய உன்னுடைய பெயரைப் பலவாறு சொல்லி ஒவ்வொரு நாளும் மகிழ்கின்ற தன்மையை யார்தான் அறியாதவர்கள். பூமியில் அனைவரும் சமம் என உணர்ந்த குற்றமில்லாத பெருந்தகையே, கல கல என்று வெற்றுச் சொற்களைப் பலவாகச் சொல்லுகின்றவர் மிக மலிந்திருக்கும் இந்த உலகத்தில், கருதிய எதுவோ அதனையே சொல்லிச் செயல்படும் காந்தியம் பெரு மானே, கடல் சூழ்ந்த உலகத்து நிலமகள் துன்பத்தைக்

களைய வந்த அந்தணனே, செங்கீரை ஆடுக. அருள் வடிவம் கொண்டு உலகத்திற்கு வந்தவனே, செங்கீரை ஆடுக.

சொ.பொ.வி :

உன்னரிய - எண்ணுதற்கரிய, சொலி - சொல்லி, அனுதினமும் - நாள்தோறும், படி - பூமி, படிறில் - குற்றமில்லாத, காசினி - உலகு.

பிறப்பினில் எல்லா உயிர்களு நிகரெனப்
பேசிய பேரறிஞன்
பெரியோன் வள்ளுவன் நல்லுரை மறந்து
பேணத் தக்கவுயர்
சிறப்பெது மிலராய்த் தக்க தகாதன
சீர்தூக் கறிவின்றித்
தீமை புரிந்து நல்லன கனவினுஞ்
சிந்தனை செய்யாத
மறத்தொழி லவரும் பிறப்பினி லுயர்வென
மனத்தெணி மற்றதனால்
மாண்பின ரேனு மிழிவுப் படுத்தும்
மதியில் கொடுஞ்செயலை
அறக்களைந் தருள அவதரித் தவனே
ஆடுக செங்கீரை
அருள்வடி வங்கொண்ட டவனியில் வந்தவ
ஆடுக செங்கீரை. (9)

பொருள் :

பிறப்பால் எல்லா உயிர்களும் ஒத்தனவே என்று பேசிய பேரறிஞன் பெரியோன் வள்ளுவன் கூறிய நல்லுரைகளை மறந்து, கடைப்பிடிக்க வேண்டிய உயர்ந்த

சிறப்புக்கள் எதுவும் இல்லாதவராய், தக்கது தகாதது எது எனச் சீர்தூக்கிப் பார்க்கும் அறிவில்லாது தீமைகளையே செய்து, நல்லனவற்றைக் கனவிலும் நினைக்காத பாவத் தொழிலைச் செய்பவரும், பிறப் பினில் தங்களை உயர்வெனக் கருதி அதனால் மாண் பற்றவர்களாக விளங்கிடும் அவர்தம் புத்தியில் எழுந்த கொடுஞ்செயல் களை எல்லாம் களைவதற்காக அவதரித்தவனே, செங்கீரை ஆடுக, அருள் வடிவு கொண்டு உலகில் வந்தவனே, செங்கீரை ஆடுக.

சொ.பொ.வி :

பேண - கடைப்பிடிக்க, மறத்தொழில் - பாவத்தொழில், மனத்தெனி - மனத்தில் எண்ணி, மதி - புத்தி. பாடலில் இடம் பெற்ற குறள்:

> ***பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா***
> ***செய்தொழில் வேற்றுமையால். (குறள் - 972)***

இன்னா செய்தார் நாண நன்னயம்
இயற்ற வேண்டுமென
இணையில் புலவன் இயம்பிய இன்னுரை
ஏட்டள வோடின்றித்
தென்னாப் பிரிக்கா ஆதிய இடங்களில்
செய்து காட்டியநின்
சீர்த்தி யுரைக்க வல்லவன் இந்தச்
சிறுமதி யுடையேனோ
கொன்னே அந்தோ முன்னற் கரிய
கொடுமையிற் பல்லுயிரைக்
கோறல் புரிந்த டயரும் வருந்தின்
கூர்வல் உதவியெனுஞ்

செந்நா வுடையாய் செய்கையும் வல்லாய்
செங்கோ செங்கீரை
திருமகள் உறையுந் திருநா டுடையாய்
செங்கோ செங்கீரை. (10)

பொருள் :

நமக்குத் தீமையானவற்றைச் செய்தவர் நாணும் படியாக அவர்களுக்கு நல்லதைச் செய்ய வேண்டும் என்று ஒப்பற்ற புலவன் திருவள்ளுவர் கூறிய நல்லுரை வெறும் ஏட்டளவில் மட்டும் இல்லாது தென்னாப் பிரிக்க முதலிய இடங்களில் செய்து காட்டிய உன்னுடைய புகழை, சிற்றறிவு கொண்ட நானே உரைக்க வல்லவன். முன்பு தன்னுடைய கொடுஞ் செயலால் பல உயிர்களைக் கொன்ற டயர் என்ற ஆங்கில அதிகாரி துன்பப்பட்டால் அவனுக்கு உதவி செய்வேன் என்று கூறுகின்ற நாவினை உடையவனே, சொல்லுவதோடு மட்டும் அல்லாது அதைச் செய்து காட்டும் வல்லவனே, ஆடுக செங்கீரை. திருமகள் வாழும் திருநாடு உடையாய் செங்கீரை ஆடுக.

சொ.பொ.வி :

இன்னா - இன்னாத (நமக்குத் தீமையான), நாண - வெட் கப்படும்படி, நன்னயம் - நன்மை, சிறுமதி - குறைந்த அறிவு, கோறல் - கொல்லுதல், டயர் - வாலாஜபாத் என்னுமிடத்தில் பல ஆயிரம் மக்களைக் கொன்றவன், கூர்வல் - விரும்புதல், பாடலில் இடம்பெற்ற குறள்:

இன்னா செய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்து விடல்.

3

தாலப் பருவம்

அன்பா லுலகை வயப்படுத்தி
யாருஞ் செய்தற் கரியசெயல்
ஆற்றி அருளை யறத்தையுயர்
ஆண்மை தன்னை அகலாத
இன்ப வாழ்வை எஞ்ஞான்றும்
இன்றி யமையாத் தைரியத்தை
எல்லா உயிருஞ் சமமென்னும்
இனிய கருத்தை ஏதுமிலா
என்போற் சிறிய ஏழையரின்
இதயம் பதித்த நன்றியென்றும்
எளியேன் உள்ளம் கோவில்கொண்
டிருக்குங் கருணை இருங்கடலே
வன்பா தகர்க்குங் கதியளிக்கும்
வள்ளால் தாலோ தாலேலோ
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்மா தாலோ தாலேலோ. (1)

பொருள் :

அன்பினால் உலகைத் தன்வசப்படுத்தி எவரும் செய்தற்கு அரிய செயல்களைச் செய்து, அருளை, அறத்தை, உயர் ஆண்மையை, நீங்காத இன்ப வாழ்வை, எக்காலத்தும் இன்றியமையாத தைரியத்தை, உலகில் எல்லா உயிரும் சமம் என்ற இனிய கருத்தை, எந்தத் தகுதியும் இல்லாத என் போன்ற சிறியவர்களின் இதயத்தில் பதித்து அன்றி, என்றும் அடியவனுடைய உள்ளக் கோயில் குடிகொண்டிருக்கும் கருணைப் பெருங்

கடலே, கொடிய பாதகச் செயலைச் செய்பவர்க்கும் வாழ் வளிக்கும் வள்ளலே தாலே தாலேலோ, மக்கள் வாழ்வதற்கு அவதரித்த மகாத்மா தாலோ தாலேலோ.

சொ.பொ.வி:

இருங்கடல் - பெரியகடல், வன்பாதகர் - கொடிய பாவம், கதி - வாழ்வு.

கன்னல் கண்டு சருக்கரைதேன்
கனிவிண் அமுதங் கரும்பட்ட
கட்டிச் சுவையும் கசப்பென்னக்
கழறு மாறு கனிந்தபெருந்
தன்னொப் பில்லாத் தனிமுதல்வன்
தலைமை யிருக்க அவனடிக்கீழ்ச்
சங்கம் இருந்து வளர்ந்தபசுந்
தனிய இனிய தமிழ்க்கோமான்
தென்னன் சோழன் சேரனுயர்
செனகன் ராமன் தருமனெனும்
செங்கோல் வேந்தர் அரசாண்ட
திறம்பா முறையைத் தீநெறிகள்
மன்னும் உலகில் நிலைநாட்ட
வந்தாய் தாலோ தாலேலோ
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்மா தாலோ தாலேலோ. (2)

பொருள் :

கரும்பு, கற்கண்டு, சர்க்கரை, தேன், பழம், அமுதம், கருப்பட்டி ஆகிய சுவை எல்லாம் கசப்பு என்று கூறும் வண்ணம் கனிவுடைய ஒப்பில்லாத தனி முதல்வனாம் சிவபெருமான் தலைமை தாங்க, அவனடிக்கீழ்

இயங்கிய சங்கத்தில் இருந்து வளர்ந்த இனிமை உடைய தமிழுக்குத் தலைவனாக விளங்கிய பாண்டியன், சோழன், சேரன், சனகன், இராமன், தருமன் என்ற செங்கோல் வேந்தர்கள், அரசாளும் காலத்தில் மாறுபடாத நீதி முறைகளை - தீ நெறிகள் வாழுகின்ற இந்த உலகத்தில் நிலைநாட்ட வந்தவரே தாலோ தாலேலோ, மக்கள் உய்ய அவதரித்த மகாத்மா தாலோ தாலேலோ.

சொ.பொ.வி :

கன்னல் - கரும்பு, (கரும்பு முதலாகச் சொன்ன பொருட்கள் கசப்பு என்று கூறுமாறு சிவபெருமான் கீழ் இயங்கிய சங்கத்தில் வளர்ந்த தமிழ் இனிய சுவை உடையதாய் விளங்கிற்று என்பது முதற் பகுதியின் கருத்து) திறம்பா - மாறுபடாத, மன்னுதல் - வாழ்தல்.

ஈசன் எந்தை இணையடியை
இதயம் பதித்து அவனருளால்
இடற விட்ட கரிபணிய
இணைத்த நீற்றின் அறையினிய
மாசில் வீணை மாலைவரு
மதியமொடு மகிழ் காற்றாய்
வசந்த கால மாய்த்திகழ
மடித்தற் பொருட்டு வரிந்தசிலை
தூசில் உயர்ந்த தெப்பமதாய்த்
துலங்க ஆழிக் கரைகண்ட
தூயோன் நடைய றாத்துறவி
துன்னு சத்தி யாக்கிரக
வாச மலிநா வுக்கரையன்
வரவே தாலோ தாலேலோ
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம தாலோ தாலேலோ. (3)

பொருள் :

எந்தையாம் ஈசனின் திருவடியை இதயத்தில் பதித்து அவனருளாலே தன்னை மிதிக்க வந்த யானை பணிய, சுண்ணாம்புக் காளவாயில் இட்டபொழுது அந்தச் சுண்ணாம்பு அறை குற்றமில்லாத வீணை, இனிய மாலை நேரம், குளிர்ச்சி பொருந்திய திங்கள், இனிய காற்றாய் விளங்கும் வசந்த காலமாய்த் திகழ, அழிப்ப தற்காகக் கடலில் தூக்கிப் போடும் பொழுது கட்டப்பட்ட கல் குற்றமில்லாத உயர்ந்த தெப்பமாய் விளங்க, கடலைக் கடந்த தூயவனாம் சிவபெருமான் எண்ணத் தோடு நடக்கும் வாழ்வைக் கொண்ட துறவியாம் திருநாவுக்கரசர் மேற்கொண்ட சத்தியாக்கிரகத்தை ஏற்ற காந்தியே தாலோ தாலேலோ, மக்கள் உய்ய அவதரித்த மகாத்மாவே தாலோ தாலேலோ.

சொ.பொ.வி :

இடற - மிதிக்க, கரி - யானை, நீற்றின் அறை - சுண் ணாம்புக் காளவாய், மடித்தற் பொருட்டு - அழிதற் பொருட்டு, வரிந்த - கட்டப்பட்ட, சிலை - கல், துலங்க - விளங்க, ஆழி - கடல். துன்னு - கைக்கொண்ட (பழையாறையில் சமணர்கள் மறைத்த சிவன் கோயிலை மீண்டும் மக்கள் வணங்கச் செய்யச் சமணரை எதிர்த்துத் திருநாவுக்கரசர் முதன் முதலில் உண்ணாநோன்பு மேற்கொண்டார். காந்தியும் உண்ணா நோன்பை மேற்கொண்டவர் என்பதால் காந்தியைத் திருநாவுக் கரசரின் வரவாக ஆசிரியர் காட்டியிருப்பது சிறப்புடைத்தாம்)

இந்நாள் இந்தியா விலுளார்
இன்றி அமையாத் தாய்மொழியை
இளமை தன்னிற் பயிலாது
ஏதி லாரின் ஆங்கிலத்தைப்

பன்னாள் பயின்றும் அமையாமல்
பரநா டணுகிப் படித்தங்கு
பட்டந் தாங்கி வரவேகும்
பலர்போல் நீயும் பண்பின்றி
இன்னா நல்கும் பாதகங்கள்
இயையு மேற்கு நாடுபுகுந்
திருந்தாய் எனினும் அந்நாட்டார்
இன்பம் எனக்கொள் பாதகத்துள்
மன்னா தன்னை பால்மொழிந்த
மாற்றம் புரந்தோய் தாலேலோ
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம தாலோ தாலேலோ. (4)

பொருள் :

இந்நாளில் இந்தியாவில் வாழ்கின்றவர்கள் தங்கள் தாய்மொழியை இளமைக் காலத்தில் பயிலாது, பகைவரின் ஆங்கிலத்தைப் பல்லாண்டு பயின்றாலும் அம்மொழித்திறன் அமையாததால், மேலை நாடு களுக்குச் சென்று படித்து, படித்ததற்குரிய பட்டத்தைத் தாங்கி வந்தவர்களைப் போல் நீயும் பண்பில்லாத, இன்பமில் லாதவற்றைத் தந்திடும் பாதகங்கள் விளங்கும் மேற்கு நாடுகளுக்குச் சென்றாய். என்றாலும் அந்நாட்டார் இன்பம் எனக் கொண்ட பாவங்களை ஏற்காது, தாயி னிடத்தில் கூறிய சத்தியத்தைக் காப்பாற்றியவரே தாலோ தாலேலோ, மக்கள் உய்ய வந்த மகாத்மாவே தாலே தாலேலோ.

சொ.பொ.வி:

ஏதிலார் - பகைவர், பரநாடு - மேலைநாடு, பாதகம் - மது, மாமிசம், காமம், அன்னை - புத்ரிபாய், மாற்றம் - சத்தியம்,

(மது குடித்தல் முதலிய பாவங்களைச் செய்யமாட்டேன் என்று செய்து கொடுத்த சத்தியம்)

முன்னம் நமது திருநாட்டில்
முதிர்ந்த அறிவும் பலர்புகழும்
மொய்ம்பும் படைத்து உலகுய்ய
மொழியும் பெருக்கி முனிவகற்றிப்
பன்னற் கரிய பலபணிகள்
பண்பாய் ஆற்றிச் சமயமெனும்
பாட்டை வகுத்துப் பற்றறுத்துப்
பரம கருணா நிதியாகி
இன்னல் எய்தின் தாமேற்று
இனிய அனைத்தும் படிக்கீந்தோர்
எண்ணற் றார்கள் எனினுமுனை
ஏய்ப்பார் ஞாலத் தெவரையா
வன்னம் நிறையும் பாரதத்தாய்
மைந்தா தாலோ தாலேலோ
மக்கள் உய்ய அவதரித்த
மகாத்ம தாலோ தாலேலோ. (5)

பொருள் :

நமது திருநாட்டில் முதிர்ந்த அறிவு, பலர் புகழுகின்ற பெருமையும் கொண்டு உலகம் வாழ அருளுரை வழங்கியும், கோபம் அகற்றிச் சொல்லுதற்கு அரிய பல பணிகளைப் பண்பாய்ச் செய்து, சமயம் என்னும் வழியை வகுத்து, பற்றுக்களை அறுத்து, கருணை உள்ளமுடன் துன்பம் வந்த பொழுது தாம் ஏற்று, இனிமையான முறைகளை உலகுக்கு அளித்த சான்றோர்கள் எண்ணற்றவர்கள் முன் காலத்தில் வாழ்ந்தார்கள் என்றாலும் இன்று வாழுகின்ற உன்னை ஒத்தவர்கள் யார்

ஐயா உள்ளார்கள்? அத்தகைய முழுமை பெற்ற பாரதத் தாயின் புதல்வனே, தாலோ தாலேலோ. மக்கள் உய்ய அவதரித்த மகாத்மாவே தாலோ தாலேலோ.

சொ.பொ.வி:

மொய்ம்பு - பெருமை, மொழி - அருளுரை, முனிவு - கோபம், பன்னற்கரிய - சொல்லுதற்கு அரிய, பாட்டை - வழி, படிக்கு - உலகுக்கு, ஏய்ப்பார் - ஒப்பார், ஞாலத்து - உலகத்து.

வேறு

மெய்த்திரு வரினும் வெந்துயர் வரினும்
விருப்பு வெறுப்பின்றி
மேனாள் ஆன விதிவழி யன்றி
மேவா தியார்க்குமென
ஒத்த மனம்பெற் றுயர்வழி பற்றி
ஒழுகும் உரவோனே
உண்மைக் கொருவ திண்மைப் பெரிய
உறுதிக் குறையுள்ளே
ஒத்துழை யாமைத் தத்துவ மதனை
உலகறி யச்செய்த
உத்தம மோகன் தாசன் எனும்பேர்
உறுதவ என்னுயிரே
தத்தலை வேலைத் தரணி விளக்கே
தாலோ தாலேலோ
தண்ணளி உடையெம் காந்திப் பெரும
தாலோ தாலேலோ. (6)

பொருள் :

உண்மையான செல்வம் வரினும், கொடுமையான துன்பம் வரினும் விருப்பு, வெறுப்பு இல்லாமல் அவை யனைத்தும் தான் முன்பு செய்த வினையின் வழியின்றி

யார்க்கும் வாராது என எண்ணும் மனத்தைப் பெற்று, உயர்ந்த வழியைப் பின்பற்றி வாழும் வ ல்லமை உடையவரே. சத்தியத்திற்கு ஒருவரே, வலிமை மிக்க உறுதியைக் கொண்ட, ஒத்துழையாமை என்னும் தத்துவத்தை உலகறியச் செய்த உத்தமரே, மோகனதாஸ் காந்தி என்னும் பெயர் கொண்ட தவத்தவரே, என் உயிரே, அலைவீசும் கடல் சூழ்ந்த உலகத்தின் விளக்கே தாலோ தாலேலோ, குளிர்ந்த அருள் மனம் கொண்ட காந்தியம் பெருமானே தாலோ தாலேலோ.

சொ.பொ.வி :

மெய்த்திரு - உண்மையான செல்வம், மேவாது - வாராது, உறுதவ - மிகுந்த தவம், தத்தலை - ஒலிமிக்க அலை.

மக்கட் குள்ளே பாகு படுத்தின்
மாண்செயல் குணமாதி
வான்வழி பற்றி வகுக்கும் அதுவே
மாபரம் அஃதன்றித்
தொக்கஉடலின் தோற்றங் கொண்டு
சொல்லுதல் அறியாமை
தோன்றிய யாவும் ஒக்கும் பிறப்பில்
தொழிலொவ் வாதெனவே
பொக்கம் மிக்கவர் புந்தி அழுந்தப்
பொய்யில் பெரும்புலவன்
புகலற மொழியைப் பூவறி யச்செய்
புண்ணியன் நீயன்றோ
தக்கோர் போற்றுந் தரணிப் பெரியோய்
தாலோ தாலேலோ
தண்ணளி உடையெம் காந்திப் பெரும
தாலோ தாலேலோ. (7)

பொருள் :

மக்களிடையே பாகுபடுத்த வேண்டுமானால் அவருடைய மாண்புகள், செயல்கள், குணங்கள் ஆகியவற்றைக் கொண்டுதான் பாகுபடுத்த வேண்டும். அதுவே மரபாகும். அதை விட்டுவிட்டு உடம்பின் தோற்றத்தைக் கொண்டு பாகுபடுத்தல் அறியாமை யாகும். அனைத்து உயிர்களும் பிறப்பால் ஒத்ததே. தொழிலால் தான் ஒவ்வாதவர் ஆவார் என்று வஞ்சகம் மிக்கவர்களின் மனதில் பதியும்படியாகப் பொய்யில் புலவன் திருவள்ளுவன் கூறிய அறக்கருத்தை உலகம் அறியச் செய்த புண்ணியன் நீயன்றோ. தக்கவர்கள் போற்றுகின்ற உலகத்துப் பெரியவனே தாலோ தாலேலோ. தண்ணளி உடைய காந்தியெம் பெருமானே தாலோ தாலேலோ.

சொ.பொ:வி:

பாகுபடுத்தி - மக்களுக்குள்ளே பிரிவுகளை ஏற்படுத்தி (அந்தணர், அரசர், வணிகர், வேளாளர் என்பன போன்ற பாகுபாடு), தொக்க - பொருந்திய, பொக்கம் - வஞ்சகம், புந்தி - மனம், பொய்யில் பெரும் புலவன் - திருவள்ளுவர். பூ - பூமி. பாடலில் இடம்பெற்ற குறள் :

பிறப்பொக்கும் எல்லா உயிர்க்கும் சிறப்பொவ்வா
செய்தொழில் வேற்றுமை யான். (குறள் - 972)

செல்வம் கல்வி தொழிலதி காரம்
திண்மை முதலான
திருவுடன் இந்நாள் செகந்தனில் வாழும்
தேசத் தறிஞருமே

மல்லல் மிக்க மாநிலம் அதனில்
யார்பெரி யாரென்ன
வகுத்து வகுத்து வானள வோட
வண்புகழ் கொண்டந்நாள்
அல்லல் கடலுள் இன்று கிடக்கும்
அறமலி திருநாட்டில்
அவதரித் தருளுங் காந்தியே பெரியார்
அவனியில் என்னநிறுத்
தல்லறி யாதார் தரணியில் உளரோ
தாலோ தாலேலோ
தண்ணளி உடையெம் காந்திப் பெரும
தாலோ தாலேலோ. (8)

பொருள் :

செல்வம், கல்வி, தொழில், அதிகாரம், வலிமை ஆகியவற்றுடன் இந்நாளில் உலகத்தில் வாழும் நாட்டுத் தலைவர்கள், வளப்பம் மிகுந்த பெரிய நிலவுலகத்தில் யார் பெரியவர் என்று வகுத்து வகுத்து, வானளவு புகழ் கொண்டு அந்தக் காலத்தில் துன்பக் கடலில் மூழ்கிக் கிடப்பர். இன்று இத்திருநாட்டில் அவதரித்து அருளி யிருக்கும் காந்தியே உலகத்தில் பெரியவர் என்று அறியாதார் உலகத்தில் உள்ளரோ? தாலோ தாலேலோ. தண்ணளி உடைய எம்காந்திப் பெருமானே தாலோ தாலேலோ.

சொ.பொ.வி :

திண்மை - வலிமை, திரு - செல்வம், செகம் - உலகம், மல்லல் - வளம், அல்லல் - துன்பம், அவனி - உலகம், தரணி - உலகம்.

அந்தணர் என்போர் அறவோர் என்றே
அறமுறை வள்ளுவனார்
அணிபெற அருளிய அருமையின் உயர்வை
அறியா திந்நாளில்
தந்திர மாகச் சாதிசா தியெனச்
சாற்றிப் பொருளின்றித்
தாந்தாம் அந்தணர் எனப்பல பேசுந்
தகுதிய லாமாக்கள்
சிந்தை காணச் செயல்செய் தந்தணச்
சீர்த்தியைத் தனிகொள்ளும்
சீல உனைப்போல் யாருளர் பண்டு
சீர்பெற் றிருந்தவரிச்
சந்திரன் என்ற வாய்மை புரப்போய்
தாலோ தாலேலோ
தண்ணளி உடையெம் காந்திப் பெரும
தாலோ தாலேலோ. (9)

பொருள் :

அந்தணர் என்று கூறப்படுபவர் உலகோர் ஆவார் என்று அறமுறைக்கும் வள்ளுவனார் அழகு பெறக் கூறிய அருமைக் கருத்தை அறியாது, இந்நாளில் தந்திரமாக அந்தணச் சாதி சாதி என்று கூறித் தாம் தாம் சிறந்த அந்தணர் என்று கூறிக் கொள்ளுகின்ற தகுதியில்லாத சிந்தை நாணும்படியாகச் செயல்களைச் செய்து, அந்தணரின் பெருமையை உன்னைப் போல் கொண்டவர் யார் உளர். பழைய காலத்தில் அந்தணர் பெற்றிருந்த பெருமையை உடையவர் இச்சந்திரனே என்ற சொல்லைக் காக்கின்றவரே தாலோ தாலேலோ, தண்ணளி உடைய எம் காந்திப் பெருமானே தாலோ தாலேலோ.

சொ.பொ.வி :

சீர்த்தி - புகழ், சந்திரன் - காந்தி, இடம்பெற்ற குறள் :

அந்தணர் என்போர் அறவோர்மற்று எவ்வுயிர்க்கும்
செந்தண்மை பூண்டு ஒழுகலால் *(குறள் - 30)*

தன்னர சளிப்பது ராட்டினம் ஆகும்
தரித்தத னைக்கையால்
தாழா நொடியுறுஞ் சுழற்றுக வென்னச்
சாற்றிய பெருமானே
மன்னவர் ஆயினும் வானவர் ஆயினும்
மற்றவர் ஆனாலும்
வழிதடு மாறி மறம்புரி வாரேல்
மதியா தவர்பிழையை
எனவரி னும்மதற் கிறையும் அஞ்சா
தியம்பும் உரவோனே
என்னிரு கண்ணே கண்ணுறு மணியே
என்னார் இன்னுயிரே
தன்னிகர் இல்லலாத் தரணிப் பெரியோய்
தாலோ தாலேலோ
தண்ணளி உடையெம் காந்திப் பெரும
தாலோ தாலேலோ. (10)

பொருள் :

அரச உரிமையை அளிப்பது கை ராட்டினம் தான் என்பதை ஏற்றுக் கொண்டு அதனைக் கையால் விடாது ஒவ்வொரு நொடியும் சுழற்றுக என்று கூறிய பெருமானே, மன்னவர்கள் ஆனாலும் தேவர்கள் ஆனாலும் மற்றவர்கள் ஆனாலும் வழி தடுமாறிப் பாவங்கள் செய்வாரேல், அவர் பிழையை எது வரினும் தெய்வமும்

மதிக்காது என்று அஞ்சாது இயம்பிய வலிமை உடையவரே, என் இரு கண்களே, கண்ணில் இருக்கின்ற மணியே, என் ஆருயிரே, ஒப்பார் இல்லாத உலகப் பெரியவரே தாலோ தாலேலோ. த்ண்ணளி உடைய எம் காந்தியம் பெரும தாலோ தாலேலோ.

சொ.பொ.வி :

தன்னரசு - நமக்கு அரசு, தாளாது - தயங்காது, நொடி - நிமிடம், மறம் - பாவம்.



4

சப்பாணிப் பருவம்

இனிப்பிறவி எடுக்கும்போ தெம்பெருமான்
உன்குணத்தை இறைவிடாதெல் லாங்கொடிந்த
இரும்புவியில் இனிமைசெறி என்னருமைத்
தமிழ்நாட்டில் எளியேன்பி றக்கவேண்டும்
கனித்தமொழிக் காரிகையைக் கடிகொள்வ
தானால்நின் காதலிகஸ் தூரியொத்த
கவினமனை யறம்வளர்க்குங் காதலியைப்
பெற்றடியேன் கடைத்தேற அருளவேண்டும்
மனக்கினிய மகவுளவேல் வள்ளால்நின்
மக்களைப்போல் அதிற்தேவ தாசனைப்போல்
மகவு பல வேண்டுமய்யா மாட்சிபெற
இத்துணையும் வாய்ந்தநீ பாக்யவானே
தனிப்பெரியன் இருமுலகுக் கென்னநிலை
சார்ந்தவாஅ சப்பாணி கொட்டியருளே
தருமநெறி வாழவரு காந்திப்பெ
ருந்தகாஅய் சப்பாணி கொட்டியருளே. (1)

பொருள் :

இனி நான் உலகில் பிறவி எடுக்கும் பொழுது, என் தலைவனே, காந்தியே உன் குணத்தை எல்லாம் கொண்டு இந்த உலகில் அதிலும் இனிமை செறிந்த என் அருமைத் தமிழ்நாட்டில் எளியேன் பிறக்க வேண்டும். இனிய மொழி பேசுகின்ற பெண்ணை நான் திருமணம் செய்து கொள்வதானால் உன்னுடைய காதலியாகிய கஸ்தூரியை ஒத்த அழகு மிக்க மனையறத்தை வளர்க்கும் பெண்ணைப்

பெற்று அடியேன் கடைத்தேற அருள வேண்டும். மனதிற்கு இனிய மக்கள் எனக்கு உளர் என்றால் வள்ளலே நின் மக்களைப்போல் அதிலும் தேவதாசனைப் போல் மக்கள் பல வேண்டும் ஐயா. நான் முன்னர் கூறிய அனைத்தும் வாய்த்த நீ பெரும் புண்ணிய வான் ஆவாய். இம்மைக்கும் மறுமைக்கும் தனிப் பெரியன் என்று கூறும் வண்ணம் புகழ் சார்ந்தவனே சப்பாணி கொட்டி யருளே, தருமநெறி வாழ்வதற்கு வந்த பெருந்தகை வனே, காந்தியே சப்பாணி கொட்டியருளே.

சொ.பொ.வி :

தனித்த மொழி - இனிய மொழி, காரிகை - பெண், கடி - திருமணம், கவின் - அழகு.

பிறர்குற்றம் பாராட்டாப் பெருந்தகையை
உலகம்நனி பிறங்கிடவே பேசுமானால்
பிறர்குற்றம் அத்தனையும் தன்குற்ற
மாகக்கொள்ளும் பெருமைபெறு நின்குணத்தின்
முறைமுறைகொண் டுன்செயல்கள் மொழியுமா
றறிகில்லேன் மூடனேனென் செயவலேன்
மொழியுமறந் தனையாற்ற முடியாமற்
பிறசெய்யும் மொய்ம்பில்லார் தம்மைநோக்கி
இறையுமவர்ச் சினந்துரையா தெற்கில்லைத்
திறமையென இயம்புமுன திணையிலாத
எழிலாரும் திருமொழியை எம்மொழியான்
எடுத்துரைப்பே னிந்தியர்கள் வாழவந்தோய்
தறையுய்ய உயச்சாந்தம் ததும்புமுரை
பகரெந்தாய் சப்பாணி கொட்டியருளே
தருமநெறி வாழவரு காந்திப்பெ
ருந்தகாஅய் சப்பாணி கொட்டியருளே. (2)

பொருள் :

பிறர் குற்றத்தைப் பெரிதாக எண்ணாத பெருந் தகைமை உடையவரை உலகம் பெரிதே விளக்கமுறப் பேசுமானால், பிறர் குற்றம் அத்தனையும் தங் குற்ற மாகவே கொள்ளுகின்ற பெருமை பெற்ற உன்னுடைய குணத்தை முறையாகக் கொண்டு உன் செயல்களை உரிய முறையில் கூறுவதற்கு மூடனாகிய நான் அறியாமல் இருக்கின்றேன். என் செய்ய வல்லேன். மொழி மறந்து, செயலைச் செய்ய முடியாமல், தவறு செய்யும் பெருமை யில்லாத பிறர் தம்மை நோக்கி, சிறிதும் கோபம் கொள்ளாத குணம் எனக்கில்லை. சினந்து கூறாத தன்மை உன்னுடைய திறமையாகும். அத்தகைய இணை யில்லாத அழகு மிகுந்த உனது திருமொழியை எம் மொழியால் எடுத்துரைப்பேன். இந்தியர்கள் வாழ்வதற் காக வந்தவனே, உலகம் உய்ய உயர்ந்த சாந்தம் ததும்பும் சொற்களைக் கூறியருளும் பெருமானே சப்பாணி கொட்டியருளே, தருமநெறி வாழவரும் காந்திப் பெருந்தகையே சப்பாணி கொட்டியருளே.

சொ.பொ.வி :

பிறங்கிடவே - விளக்கமுற, செயவலேன் - என்செய்ய வல்லேன், மொய்ம்பில்லார் - பெருமையில்லாதார், இறை - சிறிதளவு.

தீண்டாமை ஒழிகவெனத் திருவாயால்
மொழிந்திடுவார் செயல்புரிய அஞ்சியந்தோ
தெருவழியே அவர்வரினுஞ் செல்லப்பால்
நில்லாதே சீச்சீபோ என்றுரைப்பார்

தீண்டாமை ஒழிவதற்கு மொழிபுகல்தல்
அமைந்திடுமோ செயலின்றி மேடையேறிச்
செகநடுங்கக் கலகலெனப் பலபலசொற்
புகலுவதால் பயனுண்டோ செய்துகாட்டட
வேண்டாமோ அதுகாட்ட அக்குலத்திற்
பிறந்ததிரு மாமகள்பேர் மேவுபெண்ணை
விரும்பிவளர்த் தெடுக்குமருள் பழுத்தொழுகு
மேதகவோய் மேன்மையுறு நீதிதன்னைத்
தாண்டாத தண்ணளியே தனியாடைப்
பெருமானே சப்பாணி கொட்டியருளே
தருமநெறி வாழவரு காந்திப்பெ
ருந்தகாஅய் சப்பாணி கொட்டியருளே. (3)

பொருள் :

தீண்டாமை ஒழிக என்று தங்கள் திருவாயால் மொழிகின்றவர்கள் அதன்படிச் செயல்புரிய அஞ்சி, தெருவழியே தீண்டாதார் வரின் எதிரே நில்லாதே சென்று விடு, சீச்சீ என்று உரைப்பார். அந்தோ தீண்டாமை ஒழிவ தற்குச் செயலின்றிச் சொன்னால் மட்டும் அமைந்திடுமா? மேடையேறி உலக மக்கள் நடுங்கக் கலகல என்று பலபல சொற்களைக் கூறுவதால் பயனுண்டோ? செய்து காட்ட வேண்டாமோ? தீண்டாதார் குலத்தில் பிறந்த திரு மகளின் பெயர் கொண்ட பெண்ணை விரும்பி வளர்த் தெடுக்கும் அருள் பழுத்து ஒழுகும் மேன்மை உடைய வனே, தான் சொல்லும் நீதி தன்னை மீறாத அருள் உள்ளம் கொண்டவனே, தனிஒரு ஆடையாம் கதராடை கொண்ட பெருமானே, சப்பாணி கொட்டியருளே. தருமநெறி வாழ வரும் காந்தியம் பெருமானே சப்பாணி கொட்டியருளே.

சொ.பொ.வி:

அவர் வரினும் - தீண்டாதவர் எனக் கூறும் குலத்தவர் வந்தால், செக நடுங்க - உலக மக்கள் நடுங்க, திருமாமகள் பேர் - இலக்குமி என்னும் பெயர். தாண்டாத - மீறாத.

எதிர்கால வாழ்விற்குப் பொருள்தேடா
தன்றன்று கிடைப்பவையுண் டினியசெய்தே
இரும்புவியின் நலம்நாடி அறம்புரியும்
பெரியோரே எவ்வுயிரும் ஒப்பநோக்கும்
கதிகாணும் அந்தணராம் எனமேலோர்
உரைத்தபடி காசினியில் எவ்விடத்துங்
காண்பாரார் உனையன்றி அந்தணரை
இதுசரதம் கனத்தநின துடைமையெல்லாம்
மதியாமல் அறவழியில் வாரிவிட்டே
இன்றுலக மக்களற வழியினிற்க
மாதவமே செய்கின்ற நின்குணத்தை
ஒண்புகழை மகிமையுடைந் தேவநாட்டுஞ்
சதியாதார் செய்ந்நன்றி கொன்றாரே
சங்கையிலை சப்பாணி கொட்டியருளே
தருமநெறி வாழவரு காந்திப்பெ
ருந்தகாஅய் சப்பாணி கொட்டியருளே. (4)

பொருள் :

அந்தணர் என்போர் எதிர்கால வாழ்விற்குப் பொருள் தேடாது, அன்றன்று கிடைத்தது கொண்டு உண்டு வாழ்ந்து, இனியவை செய்து, இப்பெரிய உலகின் நலம் நாடி எல்லா உயிரையும் ஒப்ப நோக்கும் அறம் புரிகின்ற பெரியோரே ஆவார் என அறிஞர்கள் உரைத்தபடி - உலகத்தில் உன்னை அன்றி வேறு அந்தணரை எவ் விடத்துக்

காண்பார். இது உண்மை. நினது பெரிய உடைமை எல்லாம் பொருட்படுத்தாமல் அறவழியில் செலவழித்து, இன்று உலக மக்கள் அறவழியில் நிற்கப் பெரிய தவத்தைச் செய்கின்ற உன் குணத்தை, உன்னு டைய புகழைப் பெருமை உடைய தேவர் நாட்டும் ஏற்காதார் செய்ந்நன்றி கொன்றவர் ஆவர். இதற்கு ஐயமில்லை. பெரு மானே சப்பாணி கொட்டியருளே, தருமநெறி வாழவரும் காந்திப் பெருந்தகையே, சப்பாணி கொட்டியருளே.

சொ.பொ.வி:

இரும்புவி-பெரிய உலகம், காசினி-உலகம், இது சரதம்-உண்மை, உனது உடைமை - உனக்குரிய செல்வம் முதலியவை, தேவ நாட்டு - தேவர்கள் உலகம், சதியாதார் - ஏற்காதார், சங்கை - ஐயம்.

கொன்னேநம் இந்தியரைக் கூலியெனப்
பெயர்தந்து கொடியவுடல் நிறம்பிரித்துக்
கொண்டுகுணஞ் செயலாதி கூர்ந்தாயா
திறுமாந்து கூசாமல் இழித்துரைத்த
அன்னியர்கள் செய்கொடுமை அறிந்தவுடன்
ஆற்றாதே அவரன்பிற் கெளியனாகி
அங்குற்றன் னியர்செயலுக் கிலக்காகி
அடியும்பட் டந்தோவென் சொல்வனந்தத்
தென்னாப்பி ரிக்காவில் திருமகள்நேர்
மனைவியொடு சிறைப்பட்டு நீகிடந்த
செயலுரைத்தற் கெளிதாமோ இதுசெய்தார்
பெரியரெனச் செப்புவதற் கையமென்னோ
தன்னேரில் லாதவனே என்னிதயம்
உள்ளவனே சப்பாணி கொட்டியருளே
தருமாநெறி வாழவரு காந்திப்பெ
ருந்தகாஅய் சப்பாணி கொட்டியருளே. (5)

பொருள் :

நம் இந்திய நாட்டு மக்களைக் கூலியாட்கள் என்ற பெயரில் உடலின் நிறத்தை வைத்துக் (கருப்பர்)குணம், செயல் ஆகியவற்றைக் கொண்டு ஆராய்ந்து பார்க்காது, இறுமாந்து சிறிது கூடக் கூசாமல் இழித்துரைத்த அன்னியரின் கொடுமையான செயல்களை அறிந்த வுடன் ஆற்றாது வருந்தி, அவருடைய அன்பிற்கு எளியனாக்கிக் கொண்டு, அன்னியரின் செயலுக்கு இலக்காகி, அடியும் பட்டாய் அந்தோ. எப்படிச் சொல்வேன். அந்தத் தென்னாப்பிரிக்காவில் திரு மகளுக்கு ஒப்பான உன் மனைவியுடன் சிறைப்பட்டு நீ கிடந்த செயல் உரைத் தற்கு எளிதாமோ. இத்தகைய செயலைச் செய்த நீ பெரியர் ஆவாய் என்று கூறுவதில் ஐயமுண்டோ. தன்னேரில்லாத் தலைவனே, என் இதயத்தில் உள்ளவனே சப்பாணி கொட்டியருள். தருமநெறி வாழ வருகின்ற காந்தியம் பெருமானே சப்பாணி கொட்டியருள்.

சொ.பொ.வி:

கொன்னே - அசைச்சொல், ஆயாது - ஆராயாது, இறுமாந்து ஆணவங்கொண்டு, அந்நியர்கள் - தென்னாப் பிரிக்கர்கள்.

வேறு

இனிமை செறிந்திடு தமிழ்மொழி அதனை
ஏற்கா தம்மக்கள்
இருநிலம் அறிய இழித்தாங் கிலமொழி
ஏற்றுத் திரிவதுபோல்

தனிமொழி ஆகிய தாய்மொழி பேணுந்
தன்னறி வில்லார்க்குத்
தாரகம் ஆவது தாய்மொழி யேயெனத்
தாட்டிக முடன்கூறும்
கனிவு பொருந்தச் சோதரர் யாரையுங்
கட்டித் தழுவாதே
கண்டிடிற் றீண்டத் தகாதவ ரென்னக்
காவத வழியோடும்
குனிவுறு மாந்தர் கோளரி அனையாய்
கொட்டுக சப்பாணி
கோதறு குணமுள கூர்ஜர நாட
கொட்டுக சப்பாணி. (6)

பொருள் :

இனிமை மிக்க தமிழ்மொழி அதனை ஏற்காத மக்கள் இவ்வுலகம் அறிய இழிந்த ஆங்கில மொழியை ஏற்றுத் திரிவது போல, தனி மொழியாகிய தாய்மொழியைப் பேணுகின்ற உன்னுடைய அறிவு இல்லாதவர்க்கு ஆதாரம் ஆவது தாய்மொழியே என வலிமையுடன் நீ கூறுவாய். கனிவு பொருந்தத் தன்னோடு பழகும் அனைவரையும் சகோதரராக எண்ணிக் கட்டித் தழுவாது, அவர்களைக் கண்டால் தீண்டத்தகாதவர் எனக் கூறி, இரு காததூரம் ஓடும் அடிமை மாந்தர்க்குச் சிங்கம் போன்றவனே, கொட்டுக சப்பாணி. குற்றமற்ற குணமுடைய குஜராத் நாட கொட்டுக சப்பாணி.

சொ.பொ.வி:

இருநிலம் - பெரியநிலம், தாரகம் - ஆதாரம், தாட்டி கமுடன் - வலிமையுடன், காவதம் - காதம் (தூரம்), குனிவுறு - அடிமை, கோளரி - சிங்கம், கோதறு - குற்றமற்ற, கூர்ஜர - குஜராத்.

தன்னுயிர் நீப்பினுஞ் செய்யேல் தான்பிறி
தின்னுயிர் நீக்குவினை
தன்னையென் றந்த வள்ளுவ ரன்று
சாற்றிய உரைப்படியே
பன்னற் கரியநின் சபர்மதி யாச்ரமப்
பாங்குரை பாம்புகளைப்
பாறிட வேண்டிய பக்தரைத் தடுத்துப்
பரமனெவ் வுயிர்களினும்
மன்னுதல் கண்டும் மரபல கோறல்
மாற்றுக இக்குரத்தை
மாசுநம் பாலிலை எனில்நமைச் செய்வதென்
மற்றவை இன்னுயிரைக்
கொன்னே போக்குதல் அவமென உரைத்தவ
கொட்டுக சப்பாணி
கோதறு குணமுள கூர்ஜர நாட
கொட்டுக சப்பாணி. (7)

பொருள் :

தன்னுயிர் நீத்தாலும் செய்ய வேண்டாம் பிற உயிரைக் கொல்லுகின்ற வினை தன்னை என்று வள்ளுவப் பெருமான் அன்று சாற்றிய முறைப்படி, சொல்லுவதற்கு அரிய சபர்மதி ஆசிரமத்தில் வசித்த பாம்புகளைக் கொல்ல நினைத்த அடியவர்களைத் தடுத்து, இறைவன் எல்லா உயிர்களிலும் இருக்கின்றான். என்பதைக் கண்டும் பிற உயிரைக் கொல்லுதல் மரபாகாது. இக்கருத்தை மாற்றுக. நம்பால் குற்றம் இல்லை என்றால் நமக்குத் துன்பம் வாராது. மற்ற இன்னுயிரைக் கொல்லுதல் பாவமாகும் என உரைத் தவரே கொட்டுக சப்பாணி. குற்றமற்ற குணங்கொண்ட குஜராத் நாட கொட்டுக சப்பாணி.

சொ.பொ.வி :

முதல் இரண்டு வரியில் அமைந்த குறள்-
தன்னுயிர் நீப்பினும் செய்யற்க தான்பிறிது
இன்னுயிர் நீக்கும் வினை. (குறள் - 327)

பன்னல் - சொல்லுதல், பாங்கு - இடம், பாறிட - அழித்திட, பக்தரை - அடியவரை, பரமன் - இறைவன், மன்னுதல் - வாழ்தல் (இருத்தல்), கோறல் - கொல்லுதல், நமைச் செய்வது என் - நமக்கு வரும் துன்பம் என், கொன்னே - வீணாக. அவம் - பாவம்.

ஏழைபங் காளன் எம்மான் நீயென
இயம்புதல் என்குற்றம்
ஏழையர் பொருட்டா எந்தைநீ செய்த
இருஞ்செயல் யார்வல்லார்
சாழுடன் அந்நாள் ஆலையின் தொழிலோர்
கருதிய கூலிபெறக்
கருமம் விடுத்துப் பட்டினி கிடந்த
காலத் தவர்க்காக
வாழியெம் பெருமான் உணவுகொள் ளாமல்
வருந்திச் சின்னாளில்
மகிழ்வ வர்க்கருள் மாண்செயல் ஏழை
வகுக்குந் தரமாமோ
கோழை தவிர்க்கப் பிறந்தருள் குருவே
கொட்டுக சப்பாணி
கோதறு குணமுள கூர்ஜர நாட
கொட்டுக சப்பாணி. (8)

பொருள் :

பெருமானே உன்னை ஏழை பங்காளன் என்று கூறுவதில் என்ன குற்றம்? ஏழையர் பொருட்டாக நீ செய்த பெரிய செயல்களை யார் செய்ய வல்லார்?

அன்றொரு நாள் ஆலைத் தொழிலாளர் விரும்பிய கூலி பெற மனவலிமையோடு தன்னுடைய செயல்களை விட்டு விட்டுப் பட்டினி கிடந்தாய். நீ உணவு கொள்ளாமல் வருந்தி உண்ணாவிரதப் போர் நடத்திய சின்னாட்களில் தொழிலாளர் மகிழும் வண்ணம் அருள் கிடைத்தது. அத்தகைய செயலை என்னால் வகுத்துக் கூற முடியுமோ? கோழைத்தனத்தைத் தவிர்க்கப் பிறந்திட்ட குருவே, கொட்டுக சப்பாணி. குற்றமற்ற குணமுடைய குஜராத் நாட கொட்டுக சப்பாணி.

சொ.பொ.வி:

இருஞ்செயல் - பெரிய செயல், காழுடன் - மனவலிமை யுடன், கருமம் - செயல்களை விடுத்து.

மேனாட் செய்த வினைவழி இந்த
மேதினி தனிலிறைவன்
மிகுபொருள் சிறுபொருள் அவரவர்க் கேற்ப
மேவிடத் தருமென்றும்
ஆனவப் பொருளில் பிறர்பொருள் ஒருவன்
வௌவுதல் களவென்றும்
அறமுறை நூலும் பிறபெரி யோரும்
அறையக் கேட்டனமால்
கானமர் மொழிசேர் காந்திப் பெரும
கடல்சூழ் காசினியில்
காரியம் ஆற்றத் தருபொருள் தவிரக்
களவே மற்றதெனக்
கோனே நின்பால் அன்றிக் கேட்டிலம்
கொட்டுக சப்பாணி.
கோதறு குணமுள கூர்ஜர நாட
கொட்டுக சப்பாணி. (9)

பொருள் :

முன்னாள் செய்த வினையின்படி இறைவன் இவ்வுலகத்தில் பெரும் பொருளையோ, சிறு பொருளை யோ அவரவர் வினைக்கேற்ப அனுபவித்திடத் தருவான் என்றும், இறைவனால் கிடைத்த பொருளில் பிறர் பொருளை ஒருவன் எடுத்துக் கொண்டால் அது களவாகும் என்று அறம் உரைக்கும் நூலும், பிற பெரியோர்களும் கூறக் கேட்டிருக்கின்றோம். இசை போல மொழியும் காந்தியம் பெரும, கடல் சூழ்ந்த இவ்வுலகத்தில் செயல்களுக்குரிய பொருள்தான் நற்பொருள், உழைக்காது பெற்றிடும் பொருள் களவே யாகும் என்று உன்னிடத்தில் அன்றி வேறு யாரிடத்திலும் நாங்கள் கேட்டதில்லை. தலைவனே கொட்டுக சப்பாணி, குற்றமற்ற குணமுடைய குஜராத் நாட கொட்டுக சப்பாணி.

சொ.பொ.வி :

வினைவழி - நல்வினை தீவினை வழி, மேதினி - உலகம், மேவிட - அனுபவிக்க, ஆன அப்பொருள் - இறைவன் தந்த பொருள், வெளவுதல் - கைப்பற்றுதல், கானவர் - இசைசேர்ந்த, காரியம் ஆற்றத் தகுபொருள் - செய்த செயலுக்கு உரிய பொருள் (செயல் செய்யாது பெறுகின்ற பொருள் களவாகும்)

வேறு

இத்தரை செழிக்க இன்றே
இணையிலா ராட்டை எடுத்தே
எழில்மிகு பஞ்சைக் கதிரில்
ஏற்றியே நூற்ற நூலைக்

கைத்தறி கொண்டு நெய்வீர்
கடைத்தே றுமார்ககம் இதுவே
கண்ணிய மின்றி வீணே
கனதனப் பட்டந் தாங்கிப்
பித்தரைப் போலலைந் தந்தோ
பேசுவதில் பயன் என்னே
பேச்சைச் சுருக்கி இன்றே
பெருக்குக செய்கையை என்று
சத்திய உரையருள் சான்றோய்
சப்பா ணிகொட்டி யருளே
சற்குரு மணியே காந்தி
சப்பா ணிகொட்டி யருளே. (10)

பொருள் :

இந்த உலகம் செழிக்க இணையில்லாத ராட்டை எடுத்து, எழில் மிக்க பஞ்சைக் கதிரில் ஏற்றி, நூற்ற நூலைக் கைத்தறி கொண்டு நெய்திடுவீர். நாம் வாழ்வதற்கு ஏற்ற மார்க்கம் இதுவே. கண்ணியம் இல்லாது வீணாகச் செல்வத்தால் பட்டம் தாங்கிப் பித்தரைப் போல் அலைந்து பேசுவதில் என்ன பயன்? அந்தோ. பேச்சைச் சுருக்கி மிகுதியான செயலைச் செய்யுங்கள் என்ற சத்திய வாக்கைத் தந்த சான்றோனே, சப்பாணி கொட்டியருள். சற்குரு மணியே சப்பாணி கொட்டியருள்.

சொ.பொ.வி :

இத்தரை - இந்த உலகம், கண்ணியம் - கௌரவம், கனதனப் பட்டம் - செல்வத்தால் பெற்ற பட்டம், சற்குரு - ஞானாசிரியன்.

5

முத்தப் பருவம்

சிந்தை இனிக்கும் செவியினிக்கும்
தேகம் புளகாங் கிதமெய்தும்
திருவாய் இனிக்கும் கண்களிக்கும்
தெவிட்டா இன்பஞ் சேர்ந்திடும்பின்
முந்தை வினைகள் முறிந்தோடும்
முனிவிங் கிடமே தினியென்று
முதுகு காட்டும் மொழிநன்றாம்
முத்தி கிடைக்கும் பெருங்கருணை
வந்து பொருந்தும் காந்தியெனும்
வள்ளால் நினது திருப்பெயரை
மனத்திற் பதிக்கச் செவிமடுக்க
வழுத்தக் காணப் பெறுவார்க்குச்
சிந்துஞ் சாந்தக் கனிவாயால்
தேவா முத்தந் தருகவே
செல்வா நின்றன் மெய்ம்மணக்குந்
திருவாய் முத்தந் தருகவே. (1)

பொருள் :

காந்தி எனும் வள்ளலே, நினது பெயரை மனதில் பதித்து செவிமடுக்கப் போற்றுதலைச் செய்கின்றவர்களுக்கு மனம் இனிக்கும், காது இனிக்கும், உடம்பில் மயிர் சிலிர்க்கும், திருவாய் இனிக்கும், கண்கள் மகிழ்வெய்தும், தெவிட்டாத இன்பம் சேர்ந்திடும், முன் பிறப்பில் செய்த வினைகள் அழிந்து ஓடும். கோபத்திற்கு இடம் இனி எது என்று கோபத்தைப் புறங்காட்டி ஓடச்

செய்யும் நன்மொழி என்ற முத்தி கிடைக்கும். பெருங் கருணை வந்து பொருந்தும். அத்தகைய இனிமை சிந்தும் சாந்தம் பொருந்திய கனிவாயால் தேவனே முத்தந் தருகவே, உன்னுடைய உண்மை மணக்கும் திருவாயால் செல்வா முத்தந் தருகவே.

சொ.பொ.வி :

சிந்தை - மனம், தேகம் - உடல், புளகாங்கிதம் - மயிர்க் கூச்செறிதல், முந்தை வினை - முன்வினைகள், முனிவு - கோபம், சாந்தக் கனிவாயால் - அமைதி ததும்பும் கனிவாயால்.

இகத்திற் பரத்தில் உறுமின்பம்
யாவும் நல்கும் இருவினையை
இல்லா தழிக்கும் இணையில்லா
என்றும் உலவாப் பேரின்பம்
அகத்துண் டாக்கும் ஆணவத்தை
அறவே அகற்றும் அறிவளிக்கும்
அழியாப் புகழை ஆக்கிடும்பின்
ஆன்ம ஞானம் அதையீயும்
முகத்திற் றிருமான் நடமாக்கும்
முடிவில் புகழான் மூதறிஞன்
முனிவொன் றுண்டென் றறியாத
மோகன் தாச காந்திஎனும்
செகத்தில் உயர்ந்த பாரதத்தாய்ச்
சேயே முத்தந் தருகவே
செல்வா நின்றன் மெய்ம்மணக்குந்
திருவாய் முத்தந் தருகவே. (2)

பொருள் :

முடிவில்லாத புகழை உடைய மூதறிஞரே, கோபம் என்ற ஒன்றினை அறியாத மோகன்தாச காந்தி எனும்

உலகத்தில் உயர்ந்த பாரதத்தாய் மகனே - இந்த உலகத்திலும் மேல் உலகத்திலும் பெறுகின்ற இன்பம் யாவையும் தருவதும், நல்வினை தீவினையை இல்லாது அழிக்கும் ஒப்புமை இல்லாத, அழியாத பேரின்பத்தை அகத்தில் உண்டாக்கும், ஆணவத்தை முழுமையும் அகற்றும். தூய அறிவைத் தரும். அழியாத புகழை உண்டாக்கும். ஆன்ம ஞானத்தைத் தரும். முகத்தில் திருமகளை நடனமிடச் செய்யும் உன் முத்தத்தைத் தருகவே. உண்மை மணக்கும் உன்னுடைய திருவாய் முத்தத்தைக் காந்திச் செல்வனே தருகவே.

சொ.பொ.வி :

இகம் - இந்த உலகம், பரம் - மேல் உலகம், இருவினை - நல்வினை, தீவினை, உலவா - அழியாத, திருமான் - திருமகள், முனிவு - கோபம், சகம் - உலகம்.

மரணம் வரினும் பிறவரினும்
மதியா தவற்றை மயிர்நீப்பின்
வாழாக் கவரி மானென்ன
மானம் புரந்து மாற்றார்பால்
சரணம் புகுந்தே மற்றவரின்
தயவை நாடி இரந்துண்ணும்
தன்மை கொண்ட தேசீய
சபையைச் சகத்தார் யாவருமித்
தருணம் மதிக்க நிறுத்தியதிற்
சத்யம் பொறுமை கருணையெனும்
தக்க பொருள்கள் தமைவிரவித்
தரணி இன்ப வாழ்வதனைத்

திரணம் எனவே கொள்காந்தித்
தீரா் முத்தந் தருகவே
செல்வா நின்றன் மெய்ம்மணக்குந்
திருவாய் முத்தந் தருகவே. (3)

பொருள் :

(நாட்டை அடிமைப்படுத்திய) பகைவர்கள் பால் சரணம் புகுந்து (அடிமையாகி) அவர்களின் உதவியை நாடி, அவர்களிடம் யாசித்து உண்ணும் தேசிய சபையை உலகத்தார் யாவரும் இந்த நேரத்தில் மதிக்கும் வண்ணம் இறப்பும் வரினும் பிற துன்பம் வரினும் அவற்றைத் தன்னுடைய உடலில் உள்ள ஒரு மயிர் கீழே விழுந்தாலும் உயிர் வாழாத கவரிமான் போல, தன் மானத்தைக் காத்துச் செயல்புரியும் வண்ணம் நிறுத்தி, அச்சபையில் உண்மை, பொறுமை, கருணை என்னும் தக்க பொருள்கள் கலந்திருக்கும் வண்ணம் செய்து, இந்த உலக இன்ப வாழ்வுதனைத் துரும்பு எனக் கொண்ட தீரனே, காந்தியம் பெருமானே, முத்தந் தருக. உண்மை மணக்கும் திருவாயால் செல்வா முத்தந் தருகவே.

சொ.பொ.வி:

மரணம் - இறப்பு, கவரிமான் - மானின் ஒருவகை, புரந்து - காத்து, மாற்றார் - பகைவர், சரணம் - அடைக்கலம், இரந்து - யாசித்து, சகத்தார் - உலகத்தார், விரவி - கலந்து, தரணி - உலகம், திரணம் - துரும்பு.

செங்கோல் செலுத்தும் முறை திறம்பின்
செய்யத் தக்க திதுவென்னும்
செம்மை யறத்தை யுலகிற்குச்
செப்பி அதனாற் சிறைக்கோட்டம்

துங்க முறநீ புகுந்துறைநாள்
தொழுதுன் அருளைப் பெறவந்த
தூய நின்றன் நல்வாழ்க்கைத்
துணைவி துரிசில் திருமனத்தாள்
எங்கள் அன்னை கஸ்தூரி
இனிய முகத்தை நோக்கிநீ
இன்னுஞ் சிறையேன் ஏகவில்லை
என்ன மொழிந்த கனிவாயால்
தெங்கு மலியும் திருநாட்டுத்
திருவே முத்தந் தருகவே
செல்வா நின்றன் மெய்ம்மணக்குந்
திருவாய் முத்தம் தருகவே. (4)

பொருள் :

செங்கோல் செலுத்தும் அந்நியர்கள் அரசமுறை மாறுபட்ட பொழுது, செய்யத் தக்கவை இவைதான் என்று நடுநிலை தவறாத அரசியல் அறத்தை அவர் களுக்கும் உலகத்திற்கும் உரைத்து, அதனை ஏற்காத அவர் களால் அளிக்கப் பெற்ற சிறைச்சாலை பெருமை உற நீ புகுந்து வாழும் நாளில், உன்னை வணங்கி அருளைப் பெற வந்த தூய்மையான உந்தன் நல்வாழ்க்கைத் துணைவி குற்றமற்ற மனத்தை உடைய எங்கள் தாய் கஸ்தூரியின் இனிய முகத்தை நோக்கி நீ ஏன் இன்னும் சிறை புகவில்லை என்று மொழிந்த கனிவாயால், தென்னை மரம் சூழ்ந்த திருநாட்டின் செல்வமே முத்தந் தருகவே, செல்வா உந்தன் உண்மை மணக்கும் திருவாயால் முத்தந் தருகவே.

சொ.பொ.வி:

முறைதிறம்பி - ஆட்சிமுறை மாறுபட்ட பொழுது, செப்பி - கூறி, துங்கமுற - பெருமையுடன், தூய - தூய்மையான, துரிசுஇல் - குற்றமற்ற, தெங்கு - தென்னைமரம்.

தேனார் மொழிசேர் பாஞ்சாலச்
சீராச் செல்வப் பாவையரைச்
செய்யா தனசெய் தவமதித்துச்
சிறுவர் பெரியோர் பல்லோரை
வானா டேற்றி எந்நாளும்
மறக்க முடியாப் பழிகொண்ட
வண்ணங் கண்டும் அவர்ச்சினந்து
மாற்றம் ஒன்றும் உரையாது
தானே அரசு வந்தெய்தும்
சத்யாக் கிரக நெறிபிடித்ததால்
சரதம் இதுவே என்றுரைத்த
தண்மைக் காந்தி சாந்தமெனுந்
தேனே ஒழுகு செம்பவளத்
திருவாய் முத்தம் தருகவே
செல்வா நின்றன் மெய்மணக்குந்
திருவாய் முத்தந் தருகவே. (5)

பொருள் :

தேன் போன்ற சொற்களை உடைய பாஞ்சால நாட்டின் சிறப்புடைய பெண்களைச் செய்யாதன எல்லாம் செய்து மானபங்கப்படுத்தியும், சிறுவர்கள் முதலாக பெரியோர் பலரையும் கொன்று வானாடு ஏற்றி எந்நாளும் அழிக்க முடியாத பழிகொண்ட செயல் கண்டும், அவர்பால் கோபம் கொள்ளாது வேறொன்றும் கூறாது, சத்யாக்கிரக நெறி பிடித்தால் நமக்குத் தானே

அரசுரிமை வந்தெய்தும், இதுதான் உண்மை என்றுரைத்த சாந்தம் நிறைந்த காந்தியே, சாந்தமெனும் தேன் ஒழுகுகின்ற செம்மையான பவளம் போன்ற திருவாயால் முத்தந் தருகவே, செல்வா உந்தன் உண்மை மணக்கும் திருவாயால் முத்தந் தருகவே.

சொ.பொ.வி :

அவமதித்து - மானபங்கம் செய்து, வானாடு ஏற்றி - கொன்று மேலுலகம் ஏற்றி, சரதம் - உண்மை, தண்மை - சாந்தம்.

பாரார் புகழ்சேர் பார்த்தனபி
மன்னன் வீமன் பகல்மைந்தன்
பண்பு மிக்க ராமனவன்
இளவல் ஆதி பலவரசர்
சீரார் வலியோ டந்நாளில்
சீர்த்தி நாட்ட இனிதிருந்த
செல்வத் திருநா டின்றேழைத்
தேச மாகிச் செயலிழந்து
ஆரார் வரினும் அரசுமுதல்
அனைத்துங் கொடுத்தே அவர்வாய்பார்த்
தண்ணாந் திரங்கி அழியுமதற்
காற்றா துரிமைப் போராடும்
தீரா காந்தி செம்பவளத்
திருவாய் முத்தந் தருகவே
செல்வா நின்றன் மெய்ம்மணக்குந்
திருவாய் முத்தந் தருகவே. (6)

பொருள் :

உலகத்தில் புகழ் சேர்த்த அருச்சுனன், அபிமன்யு, வீமன், கர்ணன், பண்புமிக்க இராமன், அவன் தம்பி

பரதன் ஆகிய பல அரசர்கள் சீர்மை மிகுந்த தங்கள் வலிமையால் பழங்காலத்தில் புகழுழை நாட்டி இனிதிருந்த செல்வத் திருநாடு (பாரதம்), இன்று ஏழைத் தேசமாகிச் செயல் இழந்து, யார் வந்தாலும் அரசு முதல் அனைத்தையும் அவர்பால் கொடுத்து, அவர் வாயைப் பார்த்து அண்ணாந்து யாசித்து அழிகின்றது. அதனைக் கண்டு ஆற்றாது நாட்டு உரிமைக்காகப் போராடும் தீரனே, காந்தியே, செம்பவளத் திருவாயால் முத்தந் தருகவே. செல்வா உந்தன் உண்மை மணக்கும் திருவாயால் முத்தந் தருகவே.

சொ.பொ.வி :

பார்த்தன் - அருச்சுனன், அபிமன்னன் - அபிமன்யு, பகல் மைந்தன் - கர்ணன், இளவல் - பரதன், உரிமைப் போராடும் - உரிமைக்காகப் போராடும்.

வேறு

இறைமனம் இன்புற அறம்புரி நின்னை
இப்புவி மக்கள்சிலர்
எங்கிருந் தோவந் திங்குசெய் சட்டம்
கடந்தனை என்சொல்லி
சிறைசெய்து நீதி மன்றத் தேற்றிச்
செப்புக மொழியென்னச்
சீலநீ அரங்கத் தன்று மொழிந்த
திண்மைகொள் திருமொழியைத்
தறைமதி இரவி தாமுள வரையும்
தங்கத் தேடுசெய்து
சாலப் பதித்தே அநுதின மும்மது
சாற்றற் கரியதகு

முறையுள-தண்ணால் அத்திருவாயால்
முத்தம் அளித்தருளே.
மொழிவழி உறையும் மோகன தாச
முத்தம் அளித்தருளே. (7)

பொருள் :

தெய்வங்களின் மனம் இன்புறும் வண்ணம் அறத்தை நிலை நாட்டும் உன்னை இந்த உலகில் எங்கிருந்தோ இங்கு வந்த ஆங்கிலேயர் தாங்கள் செய்த சட்டங்களை மீறினாய் எனக் கூறிக் கைது செய்து நீதிமன்றத்தில் ஏற்றி, உன்னுடைய பதிலைச் சொல் என்று கட்டளை இட்ட போது, சீலனே, நீதிமன்றத்தில் அன்று நீ கூறிய வலிமை கொண்ட உன்னுடைய பதிலைச் சந்திரன், சூரியன் இருக்கும் வரை, தங்கத்தால் ஏடு செய்து அதில் பதித்து நாள்தோறும் அதனைக் கூறுவதற்கு அரியதாகும் முறைமை யுடையது. அத்தகைய திருவாயால் அண்ணலே முத்தம் அளித்தருளே, சொல்லிய வண்ணம் வாழுகின்ற மோகனதாச காந்தியே, முத்தந் தருகவே.

சொ.பொ.வி :

இறை - கடவுள், மக்கள் சிலர் - ஆங்கிலேயர், திண்மை - வலிமை, தரை மதி - முழுநிலவு.

நின்வழக் கதனில் தீர்ப்புரை அதிபர்
நின்வய மேயாகி
நிலவிய ஆங்கிலச் சட்டப் படியே
நினைச்சிறை புகல்வதற்குத்
தன்மனத் தெணியுன் தகுதியை நோக்கிச்
சஞ்சல மிகவுற்றுச்
சாலப் பலப்பல மாற்றம் உரைத்துத்
தண்டிக்கும் பொழுதும்

என்னினும் மிக்க இருங்களிப் புடையார்
எவரும் இரார்நீங்கள்
எழில்பெற விடுதலை யேற்றால் எனஅன்
றியம்பிய இன்னுரையை
முன்னி மகிழ்ந்தேன் முனிவறி யாதாய்
முத்தம் அளித்தருளே
மொழிவழி உறையும் மோகன தாச
முத்தம் அளித்தருளே. (8)

பொருள் :

உன்னுடைய வழக்குகளில் தீர்ப்பு வழங்குகின்ற நீதிபதிகள் ஆங்கிலேயரின் சட்டப்படி உன்னைச் சிறையில் இடத் தம் மனத்தில் எண்ணுகின்ற பொழுது, உன் வசமாகி, உன்னுடைய தகுதியை நோக்கித் தங்கள் மனதிலே சஞ்சலம் உற்றுத், தங்கள் மனதிலே பல மாற்றங்களை உரைத்து உன்னைத் தண்டிக்கும் பொழுது, நீங்கள் எழில்பெற விடுதலை ஏற்றால் அதில் மகிழ்ச்சி அடைவதில் எம்மைவிடப் பெரிய மகிழ்ச்சி உடையார் யாரும் இருக்கமாட்டார்கள் என்று அந்நீதிபதிகள் இயம்பிய இன்னுரையை இன்று எண்ணி மகிழ்கின் றேன். கோபமே அறியாதவனே முத்தந் தருகவே, சொல்லிய வண்ணம் வாழும் மோகனதாச முத்தந் தருகவே.

சொ.பொ.வி :

தீர்ப்புரை அதிபர் - நீதிபதிகள், புகல் - புகுதல், எணி - எண்ணி, சஞ்சலம் - மனத்தில் தடுமாற்றம் எய்தி, இருங்களிப்பு - மிகுதியான மகிழ்ச்சி, முன்னி - எண்ணி.

இந்தியர் ஆருயிர் நீயென இயம்பல்
இம்மியும் மிகையில்லை
இத்தகை உயிர்உடல் நீங்கிடு மோவென்
றெண்ணத் தக்கநிலை
வந்த பெரும்பிணி யாலன் றுன்னுடல்
வாள்கொண் டறுக்குமுன்னர்
மருங்கமர் ஒருவர் நாட்டிற் கென்ன
மாற்றமை யாவென்னச்
சிந்தைகொண் டேதும் செப்ப மறுத்துச்
சிறையாள் ஆகும்நான்
செய்தி உரைத்தல் தகாதென மொழிந்த
செய்கையை என்னென்பேன்
முந்தி விரைந்தம் மொழிபகர் வாயால்
முத்தம் அளித்தருளே
மொழிவழி உறையும் மோகன தாச
முத்தம் அளித்தருளே. (9)

பொருள் :

இந்திய நாட்டிற்கு ஆருயிர் நீதான் என்று கூறுவது சிறிது கூடமிகையாகாது. (சிறைச்சாலையில் நீ இருந்த பொழுது) அத்தகைய உயிர் உடலுக்கு வந்த பெரும் பிணியால் உடலைவிட்டு நீங்கிடுமோ என்ற நிலை வந்தது. அந்நிலையில் கத்தி கொண்டு அறுக்கும் (அறுவை சிகிச்சை) முன்னர் பக்கத்தில் இருந்த ஒருவர் இனிமேல் நாட்டிற்கு வரும் மாற்றம் யாது என்று கேட்க, சிந்தை கொண்டு எதுவும் கூற மறுத்துச் சிறையில் இருக்கும் நான் எந்தச் செய்தியும் உரைத்தல் தகாது எனப் பதில் கூறினாய். அத்தகைய செய்கையை நான் என்ன சொல்லிப் பாராட்டுவேன். இத்தகைய பதிலை விரைந்து

மொழிந்த வாயால் முத்தம் அளித்து அருள் வாயாக. சொல்லிய வண்ணம் வாழும் மோகனதாச முத்தம் தருவாயாக.

சொ.பொ.வி:

இம்மியும் - சிறிதும், வாள்கொண்டு அறுத்து - அறுவை சிகிச்சை, மருங்க - பக்கம், சிறையாள் - சிறையில் இருக்கும்.

இருமூன் றாண்டு சிறைவாழ் வேற்றே
ஏர்வா டாத்தலத்தில்
இனிதமர் நாளில் இரும்பிணி உறவே
எம்மான் உனைப்பூனாப்
பெருநகர் கொடுபோய்ச் சாசூன் வைத்ய
சாலை பிறங்கவைத்துப்
பெரும்புகழ் கொண்டார் மாடாக் ஆண்டு
பெரியோய் நீபெற்ற
அருமுப சாரம் யாரே பெற்றார்
அரசரில் வந்தாலும்
அடைதற் கரிதே சிறையாள் ஆன
ஐயநீ பெற்றவது
முருகமர் செயலோய் முன்னிய புரிவோய்
முத்தம் அளித்தருளே
மொழிவழி உறையும் மோகன தாச
முத்தம் அளித்தருளே. (10)


பொருள் :

ஏர்வாடாச் சிறையில் ஆறாண்டுகள் சிறைத் தண்டனை பெற்று வாழ்ந்தபோது, மாடாக் ஆண்டு உனக்குக் கடு நோய் வந்தது. ஆதலால் சிறை அதிகாரிகள் உனைப் பூனா என்ற பெருநகரத்தில் இருந்த சாசூன்

மருத்துவமனையில் தங்க வைத்து மருத்துவம் பார்த்துப் பெரும்புகழ் கொண்டனர். அங்கு நீ பெற்ற உபசாரங்கள் யாரே பெற்றார். அரசர்களாக இருந்தாலும் பெற முடியாது. ஆனால், சிறையில் இருந்த நீ பெற்றது இறைவன் செயலே ஆகும். அதனைப் பெற்றவனே முத்தம் அளித்து அருளே, சொல்லிய வண்ணம் வாழும் மோகனதாச முத்தந் தருகவே.

சொ.பொ.வி :

இருமூன்றாண்டு - ஆறு வருடங்கள், இரும்பிணி - கடுநோய், பிறங்க - தங்க, மாடாக் ஆண்டு - இந்தி ஆண்டு, உபசாரம் - பணிவிடைகள், முருகமர் செயல் - இறைவன் செயல்.



6

வருகைப் பருவம்

அய்ய வருக பாரதநாட்
டரசே வருக உலகிற்கோர்
அணியே வருக அடியேனை
ஆண்டாய் வருக அவனியெலாம்
உய்ய வருக உயிர்க்கெல்லாம்
உயிரே வருக உத்தமரின்
உணர்வே வருக ஓராடை
உடுத்தாய் வருக உண்மையுரை
செய்ய வருக பூமிக்கோர்
திலக வருக தெருளளிக்கும்
செல்வ வருவ நெறிதிறம்பாச்
செம்மல் வருக சீாமருவு
கய்ய வருக கருணைபுரி
காந்தி வருக வருகவே
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக வருகவே. (1)

பொருள் :

ஐயா வருக, பாரத நாட்டின் அரசே வருக, உலகிற்கு ஒரு அணியாய் விளங்கும் அழகே வருக. என்னை ஆள்கின்றவனே வருக. உலகம் எல்லாம் வாழ்வதற்கு வருக. உயிர்களுக்கு எல்லாம் உயிரே வருக. உத்தமர் களின் உள்ளத்து உணர்வே வருக. ஒரே ஆடையை உடுத்தி யிருக்கும் எளியவனே வருக. உண்மையையே உரைக் கின்ற செம்மலே வருக. மண்ணுலகத்தின் திலகமே

வருக. அறிவின் தெளிவை விளக்கும் செல்வமே வருக. வாழ்வியல் நெறி மாறாத செம்மலே வருக. புகழ் கொண்ட ஐயா வருக, கருணை செய்யும் காந்தியே வருக வருகவே. மனைவியாகிய கஸ்தூரியின் கருத்திற்கிசைந்த கணவனே வருக வருகவே.

சொ.பொ.வி:

அணி - அழகு, அவனி - உலகம், உய்ய - வாழ, உண்மை உரை, உண்மையே பேசும். செய்ய - செம்மையானவனே. தெருள் - அறிவு.

காந்தி வருக கருணைபுரி
கடலே வருக ஏழையேன்
கண்ணே வருக இந்தியரின்
கருத்தே வருக என்னன்பை
மாந்த வருக மக்களுய
வந்தாய் வருக பழஅறத்தை
வகுத்தாய் வருக வடிவுடைய
வள்ளால் வருக மண்முழுதும்
சாந்தி நிலவ உரையருளும்
சான்றோய் வருக தண்ணளிசேர்
தலைவ வருக தார்மன்னர்
தருமச் செங்கோல் தாங்கஅருள்
காந்தி வருக அருள்பழுத்த
கனியே வருக வருகவே
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக வருகவே. (2)

பொருள் :

காந்தி வருக. கருணை அருளும் கடலே வருக. ஏழையனாகிய வறிவயவன் கண்ணே வருக. இந்தியரின் உள்ளக் கருத்தே வருக. என் அன்பை உண்ண வருக.

மக்கள் வாழ்வதற்கு வந்தவனே வருக. பழைய தருமத்தை வகுத்தவனே வருக. வள்ளல் எனும் வடிவத்தை உடைய வனே வருக. உலகம் முழுவதும் அமைதி நிலவக் கருத்துரை வழங்கும் சான்றோனே வருக. அருள் உள்ளம் சேர்ந்த தலைவனே வருக. மாலையணிந்த அரசர்களின் நீதியினைச் செலுத்தும் செங்கோலே வருக. அருளைத் தாங்கியுள்ள காந்தியே வருக. அருள் பழுத்த கனியே வருக வருகவே. கஸ்தூரியின் கருத்திற்கு இசைந்த கணவா வருக வருகவே.

சொ.பொ.வி :

மாந்த-உண்ண, பழஅறம் - பழமையான தருமம், மண் - உலகம், சாந்தி - அமைதி, தண்ணளி - கருணை, (அருள்), தார் - மாலை.

எந்தாய் வருக எழிலாரும்
எம்மான் வருக எனையாளும்
இறைவா வருக ஏழையேன்
இதயங் கொளநின் இணையடியைத்
தந்தாய் வருக சந்மார்க்கஞ்
சார்ந்து தமியேன் கடைத்தேறத்
தண்மை ஒழுக அருளுபெருந்
தகையே வருக சாந்தத்தின்
மைந்தா வருக எந்தனிரு
கண்ணே வருக கண்ணினுறு
மணியே வருக ஆருயிரே
வருக சிறியேன் பாட்டுக்கு
கந்தே வருக தருதரிய
காந்தி வருக வருகவே
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக வருகவே. (3)

பொருள் :

என் தந்தையே வருக, அழகு பொருந்திய தலைவனே வருக. என்னை ஆள்கின்ற இறைவா வருக. எளியவனாகிய என்னின் இதயம் கொள்ள உன்னுடைய இரண்டு அடிகளைத் தந்தவனே வருக. சன்மார்க்கத்தைச் சார்ந்து அடியேன் வாழ்வில் உயர்வு பெற இன்பம் ஒழுக அருளிய பெருந்தகையே வருக. அமைதியின் மைந்தனே வருக. என்னின் இரு கண்களே வருக. கண்ணில் விளங்கும் மணியே வருக. என் அருமை உயிரே வருக. எளியவனின் பாட்டுக்கு மகிழ்ந்தே வருக. அழைத்தற்கு அரிய காந்தியே வருக வருகவே. கருத்திற்கு இசைந்த கஸ்தூரியின் கணவா வருக வருகவே.

சொ.பொ.வி :

எழில் - அழகு, இணையடி - இரண்டு திருவடி, தண்மை - இன்பம், உகந்தே - மகிழ்ந்தே, தருதல் - அழைத்தல்.

பெரும வருக அறமலியப்
பிறந்தோய் வருக பீடுடைய
பெம்மான் வருக புவிக்குள்ளே
பெரியோய் வருக பிறர்பொருட்டா
அருமை உறுநின் உடல்பொருளும்
ஆவி மக்கள் மனையாதி
அனைத்தும் விடுத்தோர் கதராடை
அணிந்தே ஏழ்மை நிலைகொண்ட
தரும உருவே வருகவெலாஞ்
சாற்றல் எளிய அவ்வண்ணஞ்
சாதித் திடுதல் அரியவெனுஞ்
சான்ற புலவன் உரைமறுத்துக்

கருமம் ஆற்றிப் பின்புசொலும்
காந்தி வருக வருகவே
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக வருகவே. (4)

பொருள் :

பெருமானே வருக. அறம் விளங்கப் பிறந்தவனே வருக. பெருமை உடைய பெம்மானே வருக. உலகத்திற் குள்ளே பெரியோனோய் விளங்குபவனே வருக. நாட்டு மக்களுக்காக அருமையான உன்னுடைய உடலையும், பொருளையும், உயிரையும, மக்களையும், மனைவி ஆகிய அனைத்தையும் விடுத்து ஓர் கதராடை அணிந்து ஏழ்மை நிலை கொண்ட தரும உருவமே வருக. சொல்லுதல் யார்க்கும் எளிது, சொல்லிய வண்ணம் செய்தல் அரிது என்று திருவள்ளுவராம் புலவன் கூறியதை மறுத்துத் தன்னுடைய செயல்களை முதலில் செய்து, பின்பு அதைப் பற்றிக் கூறுகின்ற காந்தியே வருக வருகவே. கருத்திற்கு இசைந்த கஸ்தூரியின் கணவனே வருக வருகவே.

சொ.பொ.வி :

அறம் மலிய - அறம் மிகுந்திட, பீடு - புகழ், புவி - உலகம், ஆவி - உயிர், மனை - மனைவி, புலவன் உரை - திருக்குறள்.

"சொல்லுதல் யார்க்கும் எளிதாம் அரியவாம்
சொல்லிய வண்ணம் செயல்." (குறள் - 664)

ஞாலம் மதிக்கும் பெருங்கொள்கை
நாட்ட வருக கதர்ப்பெருமை
நவில வருக தீண்டாமை
நலிய வருக ராட்டேந்தச்

சீல வருக ஐம்பாவம்
தேய வருக சிறுதகையேன்
திருந்த வருக தீமையெலாம்
திறம்ப வருக திருக்கருணை
சால வருக தனியாடை
தரிக்க வருக சாந்தநிலை
ததும்ப வருக தருக்கனைத்தும்
சாக வருக தாரணியிக்
காலம் உய்யப் பிறந்தருளுங்
காந்தி வருக வருகவே
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக வருகவே. (5)

பொருள் :

உலகம் மதிக்கும் பெருங்கொள்கையினை நாட்ட வருக. கதரின் பெருமையைக் கூறிட வருக. தீண்டாமை அழிய வருக. ராட்டை ஏந்திய சீலனே வருக. ஐம்பாவங் கள் தேய வருக. சிறிய தகைவனாகிய நான் திருந்த வருக. தீமை எல்லாம் மாறுபட வருக. மங்கலம் பொருந்திய கருணை பெருக வருக. தனியாடை (கதராடை) தரிக்க வருக. அமைதி நிலை பெருகிட வருக. ஆணவம் அனைத்தும் சாக வருக. உலகில் நல்ல காலம் உய்யப் பிறந்த பெருமானே காந்தியே வருக, கஸ்தூரிபாயின் கருத்திற்கு இசைந்த கணவனே வருக வருகவே.

சொ.பொ.வி:

ஞாலம் - உலகம், நலிய - அழிய, ஐம்பாவங்கள் - சிறுதகை - சிறிய தன்மை, திறம்ப - மாறுபட, சால - மிக, தரித்தல் - உடுத்துதல், தருக்கு - ஆணவம்.

வள்ளால் வருக பாரதத்தாய்
மைந்தா வருக மண்முழுதும்
மதிக்க வாழும் மாண்புடைய
மணியே வருக மறுமையெனும்
தள்ளாப் பொருளொன் றுளதென்னுந்
தன்மை யறியா தறங்கொன்று
தாய்நா டாளுந் தனியுரிமை
தகைசால் மக்கட் கில்லையென
எள்ளா எவர்க்கும் அதிபரெனும்
இறுமாப் புற்று நனியுழல்வோர்க்
கினிய உரைதந் தீடேற்ற
எண்ணும் பெரியோய் வருகவே
தள்ளார் மகர்க்கும் அறிவளிக்கும்
காந்தி வருக வருகவே
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக வருகவே. (6)

பொருள் :

வள்ளலே வருக, பாரதத்தாய் புதல்வனே வருக. உலகம் முழுவதும் மதிக்கும் வண்ணம் மாண்புகள் கொண்ட மணியே வருக. மறுமை என்னும் மேல் உலகம் நீக்க முடியாத ஒன்று என்பதை அறியாது, தருமத்தைக் கொன்று, தாய்நாடாம் இந்தியாவை ஆளுகின்ற உரிமை இந்நாட்டு மக்களுக்கு இல்லை என்று நகையாடி, அனைவருக்கும் தலைவர் நாங்களே என்று அகந்தையோடு வாழுகின்ற, அந்நியனுக்கு இனிய உரை கூறி, அவர்களை ஈடேற்ற எண்ணும் பெரியவரே வருக. தாழ்ந்த மக்களுக்கும் அறிவதனைத் தந்திடும் காந்தியே வருக வருகவே. கஸ்தூரியின் கருத்திற்கு இசைந்த கணவனே வருக வருகவே.

சொ.பொ.வி :

மறுமை - மேல் உலகம், தள்ளா - நீக்க முடியாத. எள்ளா - எள்ளி (நகையாடி), தள்ளார் - தாழ்மையுடைய.

சாதி சமயச் சண்டையெனுஞ்
சுழியிற் பட்டுத் தடுமாறிச்
சத்தி யத்தை அறமறந்து
தருக்கிக் குலத்தாற் பெரியோனான்
பேதை சிறியன் நீபிறப்பில்
என்னப் பிதற்றிப் பெரியாரைப்
பிழைப்ப தன்றிப் பொருளானும்
தொழிலாற் பிறவாற் பெருமைசொலும்
ஏதி லார்க்கும் இனியமொழி
இயம்பி அவர்கள் கொள்கையெலாம்
இருள்போல் எகப் பேரொளியை
எங்கும் பரப்பும் இணையில்லாய்
காதல் கொண்டுன் அடிசேர்ந்தேன்
காந்தி வருக வருகவே
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக வருகவே. (7)

பொருள் :

சாதி சமயச் சண்டை எனும் கடலில் அகப்பட்டுத் தடுமாறி, சத்தியத்தை முழுமையாக மறந்து, ஆணவம் கொண்டு, பிறந்த குலத்தால் நான் பெரியவன், பேதை நீ சிறியவன் என்று பிதற்றிச் சான்றோர்களை வருத்துவ தோடு, பொருள், தொழில் ஆகியவற்றால் தங்களைப் பெருமையாகச் சொல்லும் மாறுபட்டவர்களுக்கு இனிய சொற்களைக் கூறி அவர்தம் கொள்கை எல்லாம் இருள் போல் அழிய, அருள் என்னும் பேரொளியை எங்கும்

பரப்பும் ஒப்பற்றவனே, காதல் கொண்டு உன் திருவடி சேர்ந்தேன், காந்தி வருக வருகவே, கஸ்தூரியின் கருத்திற்கு இசைந்த கணவா வருக வருகவே.

சொ.பொ.வி :

சுழி - கடல், தருக்கி - ஆணவத்தில், பெரியோரை - சான்றோரை, ஏதிலர் - பகைவர் (மாறுபட்டவர்), எக - அழிய.

சாந்தம் என்னும் பெருங்கடலில்
சத்யம் என்னுந் தூண்நாட்டித்
தகைசால் பொறையை மத்தாக்கித்
தருமம் என்னும் நாண்போக்கி
வாய்ந்த அவற்றின் இருமருங்கும்
மல்லல் மிக்க இந்துமுசல்
மான்கள் என்னும் இருவேறு
மதத்து ளாரும் வலிந்திழுக்க
ஈந்த பயனாய் எழுந்தபெரும்
இன்பம் என்னும் ஆரமுதை
இறைமால் ஒப்பாய் இவ்வுலகில்
எல்லா உயிரும் உயவருளிக்
காந்தம் எனவே அன்பிழுக்குங்
காந்தி வருக வருகவே
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக வருகவே. (8)

பொருள் :

அமைதி என்னும் பெரிய கடலில் உண்மை என்னும் தூணை நாட்டித் தகைமையுடைய பொறுமையை மத்தாக்கி, தருமம் என்ற கயிற்றைக் கட்டி, அவற்றின் இரு பக்கங்களிலும் வலிமை மிக்க இந்து, முகமதியர் என்ற இருவேறு மதத்துளாரும் வலிந்து இழுக்க,

அவற்றின் பயனாய்க் கிடைத்த இன்பம் என்னும் அமுதத்தைத் திருமால் போன்று, நீ விளங்கி இவ்வுலக மக்கள் எல்லாம் வாழ்வதற்கு அருளிய அன்பை இழுக்கும் காந்தம் போன்ற காந்தியே வருக வருகவே. கஸ்தூரியின் கருத்திற்கு இசைந்த கணவா வருக வருகவே.

சொ.பொ.வி:

சாந்தம் - அமைதி, சத்யம் - உண்மை, பொறை - பொறுமை, நாண் - கயிறு, இருமருங்கும் - இருபக்கத்திலும், மல்லல் - வலிமை, இந்து - இந்துமதத்தினர், முசல்மான்கள் - முகமதியர், ஆரமுது - அமுதம், இறைமால் - திருமால்.

செந்நெல் விளையுந் திருநாடு
செழிக்க உலகம் தீநெறியில்
செல்லா துய்யச் சிறுமையெலாம்
சென்று தேய அறந்தழைக்க
மன்னர் செங்கோல் வழுவாது
மாண்பிற் செல்ல மதுவருந்தும்
மடமை ஒழிய மக்கள்தமை
மதியா தொதுக்கும் மருளகல
இன்னல் நல்குஞ் சாதிமத
இறுமாப் பேக என்னனையார்
இதயங் களிக்க விளையாட
இம்மா நிலத்திற் பிறந்தருளுங்
கன்னல் அனைய திருமொழிசேர்
காந்தி வருக வருகவே
கருத்திற் கிசைந்த கஸ்தூரி
கணவா வருக வருகவே. (9)

பொருள் :

செந்நெல் விளைகின்ற திருநாடாம் பாரதம் செழிக்க, உலகம் தீய நெறியில் செல்லாது தழைக்க, சிறுமையெல்லாம் சென்று தேய்ந்திட, தருமந் தழைக்க, அரசாட்சி செய்வோர் செங்கோல் வழுவாது மாண்புடனே செல்ல, மதுவை அருந்தும் அறியாமை ஒழிய, மக்களிடையே பிரிவை ஏற்படுத்தும் அறியாமை அகல, துன்பத்தைத் தரும் சாதி மத இறுமாப்புகள் அழிய, என்னைப் போன்றவர்களுடைய இதயம் இன்புறும் வண்ணம் விளையாட, இந்த உலகத்தில் பிறந்த கருணை வள்ளலே, கரும்பு போன்ற சொற்களைக் கூறும் காந்தியே வருக வருகவே. கஸ்தூரியின் கருத்திற்கு இசைந்த கணவனே வருக வருகவே.

சொ.பொ.வி:

திருநாடு - இந்தியா, சிறுமை - அற்பத்தனம், மடமை - அறியாமை, ஒதுக்கும் - பிரிக்கும், மருள் - மயக்கம் (அறியாமை).

வேறு

அறமலி திருநா டவனியில் உயர
அணிபெற வருக வருகவே
அடியவர் உளமகிழ் தரமொழி பகரும்
ஆண்டகை வருக வருகவே
மறமறப் பிறந்த வடித்துத் தெளித்த
மாண்குண வருக வருகவே
மன்னறம் நிலைபெற வகுத்தினி தருளும்
வள்ளால் வருக வருகவே

உறுதியின் ஒப்புயர் வொருவரும் இல்லா
உரவோய் வருக வருகவே
உண்மை பொறுமை வீரமஞ் சாமை
உறுதவ வருக வருகவே
திறமையின் அளிமிகு செயல்செயும் அந்தணச்
சீல வருக வருகவே
திண்மைகொள் அன்பர் மனத்துறை காந்திச்
செல்வ வருக வருகவே (10)

பொருள் :

தருமம் மிகுந்த இந்திய நாடு உலகில் உயர்வு பெற அழகு பெற வருக வருகவே. அடியவர்கள் உள்ளம் எல்லாம் மகிழும் வண்ணம் அறம் கூறும் தலைவனே வருக வருகவே. பாவம் நீங்க வடிவம் கொண்டு பிறந்த தெளிந்த குணம் கொண்ட மாண்புடையவனே வருக வருகவே. ஆட்சியினர் நிலைபெறக் கொள்கைகளை வகுத்து இனிது அருளும் வள்ளலே வருக வருகவே. கொள்கையில் உறுதியுடன் நின்று யாரும் ஒப்பாகாத வாறு திறம் கொண்டவனே வருக வருக. உண்மை, பொறுமை, வீரம், அஞ்சாமை ஆகியவை மிகுதியாய் உடையவனே, வருக வருகவே. தன்னுடைய திறமை யினால் அருள்மிக்க செயல்களைச் செய்யும் அந்தணத் தலைமையோனே, வருக வருகவே. வலிமை கொண்ட அன்பர்கள் மனத்தில் உறைகின்ற காந்திச் செல்வனே வருக வருகவே.

சொ.பொ.வி:

அறமதி - தருமம் மிகுந்த, மறம் - பாவம், திண்மை - வலிமை.

7

அம்புலிப் பருவம்

விண்ணுறையும் மாமதியே மேதினிக்குக் கைம்மாறு
வேண்டாமல் வெண்மையான
மென்மையுறு பாலனைய நிலவெனும்நின் மெய்யொளியை
விரும்பிநனி ஈயுமேலாம்
தண்ணளிமிக் குடையாய்நீ எனஉலகம் சாற்றிடுமால்
சத்தியமே சாருவாயும்
சாந்தநிறை திருமனமுஞ் சகத்திலுள தண்ணளிகள்
யாவுமொரு உருவெடுத்து
மண்ணுலகம் நனிவாழ மழையெனவே அருளொழுக
மாணாடை ஒன்றுடுத்து
வருகாந்தி அடிகளெனும் வள்ளலளி யோடுன்றன்
வளரளியை ஆயவேண்டும்
அண்ணல்நிகர் இல்லாத அருமைமிகு காந்தியினோ
டம்புலீஇ ஆடவாவே
அன்பதனால் உலகாளும் ஐயனுயர் காந்தியினோ
டம்புலீஇ ஆடவாவே. (1)

பொருள் :

ஆகாயத்தில் திகழுகின்ற திங்களே, உலகத்திற்குக் கைம்மாறு வேண்டாமல் வெள்ளை நிறமான மென்மை யான, பால் போன்ற நிலவாகிய உன்னுடைய ஒளியை விரும்பி மிகுதியும் தருகின்ற அருள் மிக்கு உடையாய் நீ என்று உலகம் கூறுகின்றது. உலகத்தில் உள்ள உண்மையே சார்ந்த திருவாயும், சாந்தமே நிறைந்த திருவுள்ளமும் ஆகிய யாவும் ஒரு உருவெடுத்து, இந்த

உலகம் மகிழ்வுடன் வாழ மழை போன்று அருள் ஒழுக மதிப்புடைய ஆடை ஒன்றை உடுத்தி, வந்திருக்கும் காந்தி அடிகள் என்னும் வள்ளலின் அன்போடு உன்னின் வளர்கின்ற அன்பை ஆராய வேண்டும். ஆதலால் நிகரில்லாத அண்ணல் அருமை மிகு காந்தியோடு சந்திரனே (அம்புலி) ஆடவாவே. அன்பினால் உலகு ஆளும் ஐயன் உயர் காந்தியோடு அம்புலி ஆடவாவே.

சொ.பொ.வி :

மேதினிக்கு - உலகுக்கு, பால்அனைய - பால் போன்ற, நனி - பெரிதாக, ஈயும் - தரும், சாருவாய் - சார்ந்தவாய், சகம் - உலகம். மாணாடை - மாண்புடைய ஒற்றை ஆடை, அளி - அன்பு.

மக்களுயர் வழிபற்றிக் கொலையாதி பாதகத்துள்
மன்னாமல் வாழவைத்தல்
மரபாகும் பெரியோர்க்கவ் வழிபார்க்கின் காந்தியெனும்
மாதவனின் மாண்பு நோக்கின்
ஒக்குமுழு வதுமன்னான் ஒளிமுன்னர் கொலைகளவு
கட்காம மோடுபொய்யும்
ஓடிடுமீ துலகறிந்த தொன்றேகாண் உம்பருறை
உன்தோற்றத் துறுவதந்தோ
அக்கமொரு மூன்றுடையான் காய்ந்தவனென் றவனிசொலும்
அருவமதாய் நின்றமாறன்
அணிவிழவே ஆதலினால் அவனாடான் உடனென்றே
ஐயம்நீ கொள்ள வேண்டாம்
அக்கணமே உனைப்புனிதம் ஆக்கியுடன் ஆடிடுவான்
அம்பலீஇ ஆடவாவே
அன்பதனால் உலகாளும் ஐயனுயர் காந்தியினோ
டம்புலீஇ ஆடவாவே. (2)

பொருள் :

உலகத்தில் வாழும் பெரியோர்கள், உலக மக்களைக் கொலை உள்ளிட்ட பாதகத்துள் அழுந்தாமல், உயர்ந்த நெறிகளைப் பின்பற்றி வாழவைத்தல் மரபாகும். அந்த நெறிப்படியே சிந்தித்தால் காந்தி எனும் மாதவத்தவரின் மாண்புகளை நோக்கும் பொழுது அப்பெரியோர்களுக்கு ஒப்பாகும். அன்னவரின் புகழ் ஒளி முன்னர் கொலை, களவு, கள், காமம், பொய் என்ற ஐந்து பாவங்களும் விலகி விடும். இது உலகறிந்த ஒன்றாகும். (அத்தகைய மிகுந்த ஒளி பெற்றவர் காந்தி, ஆனால் சந்திரனே) தேவர் உலகத்தில் உறைகின்ற உன் தோற்றமோ குறைவதும் வளர்வதுமாய் உள்ளது அந்தோ, மூன்று கண்களை உடைய சிவபெருமான் கண்ணால் காய்ந்ததால் மன்மதன் அருவமாய் நிற்கின்றான் என்று உலகம் சொல்லும் அத்தகைய மன்மதனின் படையில் நீ இருப்பதால் காந்தி உன்னோடு ஆடான் என்று நீ சந்தேகம் கொள்ள வேண்டாம். நீ ஆடவரும் அந்தக்கணமே உன்னைப் புண்ணியம் உடையவனாக்கி உன்னோடு ஆடுவான். ஆதலால் அம்புலியே ஆடவாவே. அன்பினால் உலகத்தை ஆளும் ஐயனாம் காந்தியினோடு அம்புலியே ஆடவாவே.

சொ.பொ.வி:

கொலையாதி பாதகம் - கொலை முதலான பாதகம், அன்னாமல் - அழுந்துதல், ஒக்கும் - ஒப்பு, உம்பர் - தேவர் உலகம், அக்கம் - கண்கள், மாறன் - மன்மதன், அணி - படை (வரிசை).

நாம்விண்ணில் உறைகின்றோம் அவன்மண்ணில் உறைகின்றான்
நாமவனொ டாடநேரல்
நம்பெருமைக் கழகன்றென் றெண்ணுவையோ மாமதியே
நன்றுநின தெண்ணநீதான்
போம்நாட்டில் யாண்டில்லைப் புண்ணியனின் புகழுண்மை
புவியறியப் புகலுவாயே
புந்திவிரி வில்லாமல் இல்லன்றிப் பிறிதறியர்
போன்றவன்நீ அல்லையே
தாமதிகம் உலகிலெனத் தருக்கோடு வாழ்ந்திடுவார்
தாங்களுமே பெயரியரென்னச்
சாற்றியதன் றியாரையவர் யாண்டுறைந்தா லென்னகுறை
தக்கவர்பார்த் தடைதலேமேல்
ஆமென்பர் அறிவுள்ளார் ஆதலினால் தாழாமல்
அம்புலீஇ ஆடவாவே
அன்பதனால் உலகாளும் ஐயனுயர் காந்தியினோ
டம்புலீ ஆடவாவே. (3)

பொருள் :

முழு நிலவே, நாம் விண்ணில் வாழுகின்றோம், காந்தி மண்ணுலகில் வாழுகின்றார். நாம் அவனோடு விளையாடுதல் நம் பெருமைக்கு அழகு ஆகாது என்று நீ எண்ணுகின்றாயா? உன்னுடைய எண்ணம் நன்றே. (காந்தியின் புகழைக் குறைத்து எண்ணாதே) நீ செல்லு கின்ற நாட்டில் உலகம் அறிந்த புண்ணியனின் புகழ் எங்கு தான் இல்லை. கூறுவாயாக. (எல்லா உலகத்திலும் புகழ் உண்டு) தாங்களே பெரியவர் என்று தருக்கோடு உலகத்தில் வாழ்பவர்களே அதிகம். அவ்வாறு கூறுகின்ற வர்கள் யாராக இருந்தால் என்ன? எங்கு அவர்கள் வாழ்ந்தால் என்ன? அறிவு மிகுதி இல்லாமல் தாங்கள்

வாழுகின்ற இடத்தை அன்றிப் பிற இடங்களை அறியாதவர் போன்றவன் நீ இல்லை. (எல்லா இடத் திற்கும் செல்லுகின்றவன் நீ) உலகத்தில் தக்கவர் யார் என்று பார்த்து, அவரைச் சார்ந்து அடைதலே நன்று என அறிவுள்ளவர்கள் கூறுவார்கள். ஆதலால் காலந்தாழ்த்தாது காந்தியுடன் அம்புலி ஆடவா. அன்பினால் உலகாளும் ஐயன் காந்தியினோடு அம்புலி ஆடவா.

சொ.பொ.வி :

அவன் - காந்தி, நேரல் - நேர்வது, போம்நாட்டில் - போகும் நாட்டில், புகலுவாயே - கூறுவாயே, புந்தி - அறிவு, இல்லம் - இடம், தாளாமல் - காலந்தாழ்த்தாமல்.

திங்களேஎ உனையரவந் தீண்டிவருத் திடுதுயரைத்
தீர்த்துய்ய எண்ணமுண்டேல்
சென்றுலகம் எங்குந்தி ரிந்தாலும் ஆகாது
செப்பிடுவேன் அதற்குபாயம்
எங்களுயர் நாயகனிவ் விரும்புவியில் ஈடில்லான்
எல்லாம்பொ றுக்குமெம்மான்
இடரகலச் சபர்மதியில் எழுந்தருளி இனிதிருக்கும்
இணையில்சீர் கொண்டஎந்தை
பொங்கதிருக் கமலமலர் போதரவிப் பழிதீரும்
புயங்கனவன் அன்பனன்னான்
புயத்தினொடு மடிதனிலும் ஏறிவிளை யாடுகதை
புவியறியும் ஆதலாலே
அங்கண்வந் தின்புபெற அண்ணலெம் காந்தியனோ
டம்புலீஇ ஆடவாவே
அன்பதனால் உலகாளும் ஐயனுயர் காந்தியினோ
டம்புலீஇ ஆடவாவே. (4)

பொருள் :

திங்களே உனை இராகு கேது என்ற பாம்புகள் தீண்டி வருத்திடும் துயரைத் தீர்த்து வாழவேண்டும் என்ற எண்ணம் உனக்கு உண்டானால், எந்த உலகம் சென்றா லும் அது தீராது. தீர்வதற்கு உபாயம் சொல்லுவேன். கேட்பாயாக. எங்கள் உயர் தலைவன், இப்பெரிய பூமியில் ஈடு இணையற்றவன், எல்லாவற்றையும் பொறுத்துக் கொள்கின்றவன், துன்பங்கள் நீங்க சபர்மதி ஆசிரமத்தில் எழுந்தருளி இருப்பவன், இணையில்லாத புகழைக் கொண்டவன். அப்படிப்பட்ட எந்தை அவன் விரிந்த தாமரை மலர் போன்ற திருவடிகளைச் சேர்ந்தால் அப்பழி தீரும். நீ சிவபெருமானின் அன்பன் காந்தியின் தோளில், மடியில் ஏறி விளையாடிய கதை உலகம் அறியும். ஆதலால் அதன்படி வந்து இன்புற அண்ணலாம் எம் காந்தியோடு அம்புலியே ஆடவா. அன்பினாலே உலகத்தை ஆளும் ஐயன் உயர் காந்தியோடு அம்புலியே ஆடவா.

சொ.பொ.வி :

அரவம் - இராகு, கேது என்ற பாம்புகள், உய்ய - வாழ, செப்பிடுவேன் - கூறுவேன், இடர் - துன்பம், பொங்கு - விரிந்த, கமல மலர் - தாமரை மலர் போன்ற திருவடி, கோதற - சென்றடைய. புயங்கன் - சிவபெருமான், புயம் - தோள்.

நீகலைகள் ஈரெட்டே தாமுடையாய் நேயனவன்
நெய்தவொற்றைக் கலையொடெண்ணில்
நேரான பல்கலைகள் தரமுடையான் நினக்குமரு
உண்டன்னான் மருவிலாதான்

வாகுடைய மழைமறைத்தால் ஒளிகுறைவாய் அவனொளியை
வலிகொண்டு மறைக்கவல்லார்
மண்ணகத்தும் வானகத்தும் யாண்டுமிலை மாமதியே
நீநாளும் வரிசையாகத்
தேகந்தான் தேய்ந்தழிவாய் ஒளிகுறைவாய் பின்மிகுவாய்
திண்மைநிறை எங்களையன்
சீரான நிறைவுள்ளான் நின்தோற்றம் இரவிற்றான்
சீலனொளி இறையுநீங்கா
தாகவுள தாதலினால் அப்பெரிய அண்ணலினோ
டம்புலீஇ ஆடவாவே
அன்பதனால் உலகாளும் ஐயனார் காந்தியினோ
டம்புலீஇ ஆடவாவே. (5)

பொருள் :

மாமதியே, நீ பதினாறு கலைகளைக் கொண்டிருக்கின்றாய். காந்தியோ நெய்யப் பெற்ற ஒற்றைக் கலையாகிய ஆடையோடு, எண்ணில்லாத நேர்மையான பல கலைகளாம் கல்வியைத் தாமுடையான். உனக்குக் கறை உண்டு. ஆனால், அவன் குற்றமில்லாதவன். பெரிய மேகம் மறைத்தால் நீ ஒளி குறைவாய். அவனுடைய ஒளியை (புகழை) வலிமை கொண்டு மறைக்கின்றவர்கள் மண்ணகத்தும் வானகத்தும் எங்கும் இல்லை. நீ பதினைந்து நாட்கள் உடல் தேய்ந்து அழிவாய். ஒளி குறைவாய். பின் பதினைந்து நாட்கள் மிகுவாய். ஆனால், எங்கள் தலைவன் காந்தியோ ஒரே மாதிரியான வலிமையை முழுமையாக என்றும் பெற்றுள்ளான். உன்னுடைய வடிவம் இரவில் தான் தெரியும். காந்தியினுடைய புகழ்மிக்க ஒளியோ சிறிதளவும் நீங்காது என்றும் உளதாகும். ஆதலினால் அப்

பெரிய அண்ணலோடு அம்புலியே ஆவா. அன்பினால் உலகாளும் ஐயன் காந்தியோடு அம்புலியே ஆடவா.

சொ.பொ.வி :

கலைகள் ஈரெட்டு - நேயம் - நேசம் மிக்கவன், ஒற்றை கலை - ஒற்றையாடை, மரு- கறை (சந்திரனுக்கு) தேகம் - வடிவம், இறை - சிறிதும்.

சத்தியத்தைத் தருமத்தைச் சாந்தத்தைத் தைரியத்தைத்
தனிப்பொறையைக் கருணைதன்னைச்
சத்யாக்க ரகமென்னுந் தரணிபுகழ் இயக்கத்தின்
தத்துவத்தைச் சாற்றின்பாய்க்
கத்தருடை உதவிடுவான் கட்டிமகிழ் வெய்திடலாம்
கணக்கிட்டு ரைக்கவொண்ணாக்
கண்ணியமி குந்தது கைராட்டு நூல்கொண்டு
கைத்தறியில் நெய்ததாமால்
நத்தியுனை நனியேற்று நாடறிந்த நின்களங்கம்
நலிந்தோட ஞானமெய்த
நாட்டமது வைத்திடுவான் எங்காந்தி அன்னவனை
நாடிவா நல்லொழுக்கம்
அத்தனையும் எய்திடலாம் அதனினால் அன்னானோ
டம்புலீஇ ஆடவாவே
அன்பதனால் உலகாளும் ஐயனுயர் காந்தியினோ
டம்புலீஇ ஆடவாவே. (6)

பொருள் :

சத்தியத்தை, அறத்தை, சாந்தத்தை, தைரியத்தை, பொறுக்கும் தன்மையை, கருணையை, சத்தியாக்கிரகம் என்னும் தரணி புகழ் தத்துவத்தைச் சாற்றியவன். அன்பாய் கதருடை தந்திடுவான். கட்டி மகிழ்வு எய்திடலாம். (அக் கதருடை) கணக்கிட்டு உரைக்க முடியாத கண்ணியம்

கொண்டது. கைராட்டையில் திரித்த நூல் கொண்டு கைத்தறியில் நெய்தது. (தெரிந்து கொள்வா யாக) எம் காந்தி உனை விரும்பி மகிழ்வோடு ஏற்று உலகறிந்த உன்னு டைய கறையாகிய களங்கம் நலிந்து ஓட, நீ ஞானம் எய்த எண்ணம் கொண்டுள்ளான். அன்ன வனை நாடி வந்தால் நல்லொழுக்கம் அத்தனையும் பெற்றிடலாம். ஆதலினால் அன்னவருடன் அம்புலியே ஆடவாவே. அன்பினால் உலகாளும் ஐயன் காந்தியோடு அம்புலியே ஆடவாவே.

சொ.பொ.வி :

கத்தருடை - கதருடை (த் விகாரம்), கண்ணியம் - கௌரவம், நத்தி - விரும்பி.

ஒழுக்கமது விழுப்பத்தைத் தருதலினால் அவ்வொழுக்கம்
உயிரதினும் உயர்ந்ததாக
ஓம்புதகை மிக்கதென உரைத்ததிரு வள்ளுவனார்
உண்மையுரை கொண்டுசெய்கை
இழைத்ததவருள் இணையில்லை எனோரென் றெடுத்தேத்தும்
ஏதமிலா எந்தையெம்மான்
இன்னாத எண்ணாதான் மறுமாதர் இன்முகத்தை
எந்நாளும் நோக்கிலாத
விழுப்பமுனான் எங்காந்தி மேனாள்நீ குருமனையை
விழைந்தல்லல் உற்றையென்ப
மேதகவோன் முனிவானோ எனவங்கி விளையாடல்
ஒழியாமல் மேவுவாயே
அழுத்தமுற மதிபுகல்வான் முனிவறியான் ஆதலினால்
அம்புலீஇ ஆடவாவே.
அன்பதனால் உலகாளும் ஐயனுயர் காந்தியினோ
டம்புலீஇ ஆடவாவே. (7)

பொருள் :

ஒழுக்கம் மக்களுக்குப் பெருமையைத் தந்திடும் ஆதலினால் அவ் ஒழுக்கத்தை உயிரைக் காட்டிலும் மேலானதாகக் கடைப்பிடித்தல் வேண்டும் என உரைத்த திருவள்ளுவரின் உண்மை உரையைக் கொண்டு, செய்கை செய்தவருள் தனக்கு இணை இல்லை பிறர் என்று ஏத்திப் புகழும் வண்ணம் குற்றம் எதுவும் இல்லாத எந்தை காந்தி எம் பெருமான் ஆவார். தீயனவற்றை என்றைக்கும் எண்ணாதவர். பிற பெண்களின் இன்முகத்தை எந்த நாளும் நோக்காத ஒழுக்கமுடையவர் நம் காந்தி. ஆனால், நீயோ வியாழனின் மனைவியை விரும்பித் துன்பப்பட்டாய் என்பர். ஆதலால் மாண்பு கொண்ட காந்தி உன்னைக் கோபிப்பானோ என அஞ்சி விளையாட வாராமல் இருக்காதே, வருவாயாக. அழுத்தமாக நல்ல அறிவுதனைச் சொல்லுவான். கோபத்தை அறியாதவன், ஆதலால் அம்புலியே நீ ஆடவா. அன்பினால் உலகை ஆளும் ஐயன் காந்தியி னோடு அம்புலியே ஆடவாவே.

சொ.பொ.வி :

இன்னாத - தீமைகள், நறுமாதர் - பிற பெண்கள், குருமனையை - வியாழனின் மனைவியை, மேதகவு - மாண்புடைய, மேவுவாய் - வருவாய், மதி - அறிவு.

இடம் பெற்ற திருக்குறள்.

ஒழுக்கம் விழுப்பம் தரலான் ஒழுக்கம்
உயிரினும் ஓம்பப் படும் - குறள்

மறைபுகலும் நெறியதனை வடிகட்டி இனிதெடுத்து
மண்ணுலக மாந்தருய்ய
மாண்புமிகும் அறநெறியை மாசில்லா ஒழுக்கத்தை
மன்னாத உடலைநோக்கிப்
பறையரென ஒருசாரார் பரிதபிக்க ஒதுக்குகின்ற
பாதகம்மாள் வழியைஇப்
பாராளும் உரிமைஇந் நாட்டார்க்கே உளதென்னும்
பண்பைக்கட் குடிவிலக்கை
அறைகூவு மாண்புசெறி அருட்கடலைக் குணக்குன்றை
அடியாரின் இருதயத்தில்
அணிபெறவீற்றிருந்தருளும்அண்ணலைஇந்நிலையில்லா
அரசியலின் வாதியென்னல்
அறியாமை அறியாமை ஆதலினால் அஞ்சாமல்
அம்புலீஇ ஆடவாவே
அன்பதனால் உலகாளும் ஐயனுயர் காந்தியினோ
டம்புலீஇ ஆடவாவே. (8)

பொருள் :

வேதங்கள் புகழும் நெறிகளைத் தொகுத்து, இனிது எடுத்து மண்ணுலக மக்கள் வாழ, பெருமை மிக்க வேத நெறியைக் காட்டியவரை குற்றமில்லாத ஒழுக்கத்தை உடையவரை நிலை யில்லாத உடலை நோக்கி இவர் பறையர் என்று பெயர் சாற்றி, அவர் வருந்தும் வண்ணம் அவரை ஒதுக்குகின்ற பாதகத்தை அழிக்கும் வழியை, இந்தப் பாரதத்தை ஆளும் உரிமை பாரத நாட்டவர்க்கே உரித்து என்று கூறும் பண்பை, கள், குடி இவற்றை நீக்குதலை உரத்த குரலில் கூவி, பெருமை மிக்க நெறியை வகுத்திட்ட அருட்கடலை, குணக்குன்றை, அடியவரின் இதயங்களில் அழகு பெற வீற்றிருக்கும்

அண்ணலை - இத்தகுதிகள் இல்லாத அரசியலின்வாதி (பிரதிநிதி) என்று கூறுவது அறியாமை உடையதாகும். ஆதலினால் அஞ்சாமல் அம்புலியே ஆடவாவே. அன்பினால் உலகை ஆளும் ஐயன் காந்தியினோடு அம்புலியே ஆடவாவே.

சொ.பொ.வி :

மறை - வேதம், மன்னாத - நிலையாத, பரிதவிக்க - வேத னையுற, பாதகம்மாள் - பாதகம்அழிய, கள், குடி - மது உண்ணுதல்.

இழையாயி ரம்பெற்ற எழிலாடை பண்டைநாள்
ஈன்றுபெரு மிதமடைந்த
இணையில்சீர் சேர்ந்நா டின்றாடை ஏதுமிலா
திரங்கிப்பல் இன்னலுற்றுத்
தழையாடை யாக்கொண்டு தருமநெறி அறியாது
தருசூழுங் கானகத்தில்
தாய்த்திரியும் விலங்குகள்போற் சஞ்சரித்தே இந்நாளில்
தருக்காதி கொண்டுசீறுங்
குழையாத பிறநாட்டை உடல்மறைக்க எதிர்பார்த்தல்
குற்றமத னாலுயர்ந்த
கோதில்லாக் கதராடை குவலயத்தே பெருக்குமெனக்
கூறுமொழிற் கூர்ஜரம்வாழ்
அழையாமல் அவனிக்கே அருள்புரியும் அண்ணலினோ
டம்புலீஇ ஆடவாவே
அன்பதனால் உலகாளும் ஐயனுயர் காந்தியனோ
டம்புலீஇ ஆடவாவே. (9)

பொருள் :

பண்டைக் காலத்தில் நூல் இழைகள் ஆயிரம் கொண்ட அழகு பொருந்திய ஆடைகள் நெய்து

பெருமை அடைந்த, ஈடில்லாத பெருமை சேர்த்த நம் நாட்டில் - ஆடை ஏதும் இல்லாமல், இரக்கத்திற்கு ஆளாகி, பல துன்பங்கள் உற்று, தழையை ஆடையாகக் கொண்டு, தரும நெறியையும் அறியாது - மரம் சூழ்ந்த காட்டில் திரிகின்ற விலங்குகள் போல நாட்டு மக்கள் வாழுகின்ற இந்நாளில், செருக்குற்று சீறுகின்ற பணி வில்லாத பிற நாட்டினரிடம் நம் உடல் மறைக்க எதிர்பார்த்தல் குற்றமாகும் என்பதை உணர்ந்து, உயர்ந்த, குற்றமில்லாத, கதராடையை நாட்டில் பெருக்க வேண்டும் எனக் கூறிய குஜராத்தில் வாழுகின்ற, அழைக் காமலே உடன்வந்து அருள்புரியும் அண்ணலோடு அம்புலியே ஆடவாவே, அன்பாலே உலகம் ஆளுகின்ற ஐயன் காந்தியினோடு அம்புலியே ஆடவாவே.

சொ.பொ.வி: -

இழை - நூல்இழை, தழை - இலை, தரு - மரம், கானகம் - காடு, சஞ்சரித்தே - நாட்டில் திரிந்து வாழும், தருக்கு - செருக்கு முதலான குணம் கொண்டு, சீறும் - கோபிக்கின்ற, குழையாத - பணிவில்லாத, கோது - குற்றம், அவனி - உலகம்.

இழுக்காக அடிமையெனும் படுகுழியில் வீழ்த்துவது
எழிலாடை கொண்டுதேச
இரும்பொருளைப் பிறநாட்டுக்கனுப்புதலே ஆதலினால்
இஃதோர்ந்து நமதுமக்கள்
பிழைக்கவழி கதராடை பேணுதலே ஆகுமெனப்
பிறங்கிடவே மொழிந்தபின்னும்
பெருமைமிகு நாட்டிற்காப் பிறபலசெய் யாவிடினும்
பீடுபெறு கதருடுத்தும்

ஒழுக்கத்தைக் கொள்ளாதார் மனந்திருந்த வேண்டுமென
ஒப்பற்ற பொருளைநாடி
உறுதவமே செய்கின்ற ஒண்புகழான் தண்ணளியான்
ஒன்னலரென் றெவருமில்லான்
அழுக்காற வாவெகுளி இன்னாச்சொல் இல்லானோ
டம்புலீஇ ஆடவாவே
அன்பதனால் உலகாளும் ஐயனுயர் காந்தியினோ
டம்புலீஇ ஆடவாவே. (10)

பொருள் :

(பிற நாட்டிலிருந்து) அழகான ஆடைகளைக் கொண்டு வர இந்திய நாட்டின் பெரும் பொருளை அன்னிய நாட்டிற்கு அனுப்புவது நம்மை ஈனம் எனும் அடிமைப் படுகுழியில் வீழ்த்துவதாகும். ஆதலினால் இதனைத் தெரிந்து நமது மக்கள் பிழைப்பதற்கு உரிய வழியாகக் கதராடையைப் பேணுவதே சிறந்த வழியாகும் என விளக்கமுறக் கூறிப் பின்னும் பெருமை மிகு நாட்டிற்காக வேறு காரியம் எதுவும் செய்யாவிடினும், பெருமை மிக்க கதரை உடுத்தும் ஒழுக்கமதைக் கொள்ளாதார் மனந்திருந்த வேண்டும் என, அத்தகைய செயலை நாடித் தவம் செய்கின்ற புகழை உடைய, அருள் கொண்ட, பகைவர் எவரும் இல்லாத, அழுக்காறு அவா வெகுளி இன்னாச் சொல் இல்லாத காந்தியோடு அம்புலி ஆட வாவே. அன்பினாலே உலகை ஆளும் ஐயன் காந்தியோடு அம்புலி ஆடவாவே.

சொ.பொ.வி :

இழுக்காக - ஈனமிக்க, தேச இரும்பொருளை - தேசத்தின் பெரும் பொருளை, ஓர்ந்து - தேர்ந்து, பிறங்கிடவே - விளக்கமாக, ஒன்னலர் - பகைவர்.

8

சிற்றில் பருவம்

குற்றம் புரிந்தாய் நீயென்னக்
கொண்டு நீதித் தலத்திட்டுக்
கூறு வாக்கு மூலமெனக்
கோணா துள்ளம் பெருங்கதையாய்ச்
செற்றம் இன்றி நீமொழிந்த
திருவா சகத்தின் சுருக்கத்தின்
செய்தி தன்னைச் சிறுதகையேன்
செப்ப விழைந்தேன் இத்தமிழின்
இற்றை அரசாங் கத்துடனே
இனிய அன்பு கொண்டிருந்த
என்றன் உள்ளம் மாறியதற்
கேற்ற அதனை எல்லோருந்
தெற்றென் றறிய உரைப்பனெனுந்
தீரா சிற்றில் சிதையேலே
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா சிற்றில் சிதையேலே. (1)

பொருள் :

தேசக் குற்றம் புரிந்தாய் நீ என்று உன்னை நீதி மன்றத்தில் நிறுத்தி பதில் கூறுக என ஆணையிட்ட பொழுது, உள்ளம் வருந்தாது உன்னுடைய பதிலைக் கோபமின்றிப் பெருங்கதையாய்க் குற்றம் இன்றி நீ மொழிந்த திருவாசகத்தின் சுருக்கத்தினை அழகு தமிழில் சிறியவனாகிய நான் கூற ஆசைப்பட்டேன். (இனிவரும் பாடல்களில் நீ கூறுவதுபோல், அதனைக் கூறுவேன்)

இன்றைய அரசாங்கத்தோடு இனிமையான அன்பு கொண்டிருந்த என்னுடைய உள்ளம் பிறகு மாறியதை எல்லோரும் அறிய விரைவாக அறிய உரைப்பன் என்று கூறிய காந்தி எனும் தீரனே சிறுவீட்டை அழிக்காதே. சிறியவனுடைய உள்ளத்தில் அமர்ந்திருக்கும் காந்தி எனும் பெருமானே சிற்றில் சிதைக்காதே.

சொ.பொ.வி :

நீதித்தலம் - நீதிமன்றம், கோணாது - வருந்தாது, செற்றம் - குற்றம், தெற்றெம் - விரைவாக, சிற்றில் - சிறுவர் சிறுமியர் மனதில் கட்டுகின்ற சிறுவீடு, சிதையேல் - அழிக்காதே. (இனி வரும் பாடல்களில் காந்தி தான் செய்த செயல்களைத் தானே சொல்வது போல ஆசிரியர் அமைத்துள்ளது குறிப்பிடத் தக்கதாம்)

தென்னாப் பிரிக்கா சென்றங்கு
சிறுமை உற்ற இந்தியரைத்
தேற்ற எண்ணிச் செயல்புரிந்து
செகத்திற் பிறந்த எவருமடை
மன்னா உரிமை இந்தியனாய்
வந்த அரிய காரணத்தால்
மறுக்கப் பட்டேன் அதுகொண்டு
மயங்கா தந்த அரசினுக்கே
இன்னாப் பழுதாம் இந்தியரை
இவ்வா றிகழ்தல் எனஇதயத்
தெண்ணி அவரோ டொத்துழைத்தேன்
என்ன மொழிந்து எம்மானே
தென்னார் காந்தி புத்திரிபாய்
சிறுவா சிற்றில் சிதையேலே
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா சிற்றில் சிதையேலே. (2)

பொருள் :

தென்னாப்பிரிக்கா சென்று அங்குத் துன்பமுற்ற இந்தியரைத் தேற்றுவதற்கு எண்ணிச் செயல்புரிந்து, உலகத்தில் பிறந்த எவருக்கும் உரிய உரிமையை இந்தியனாய்ப் பிறந்த காரணத்தால் மறுக்கப்பட்டேன். அது கொண்டு மயங்காது இந்தியரை இகழ்வது அந்த அரசுக்கு இன்னாத பழியாகும் என்று என்னுடைய இதயத்தில் எண்ணி, அதை மாற்றுவதற்காக தென்னாப்பிரிக்கா வாழ் இந்தியரோடு ஒத்துழைத்தேன் என்று கூறிய எம்மானே, புத்திரிபாய் மகனே சிற்றில் சிதைக்காதே, சிறியவனாகிய எனது உள்ளத்தமர் காந்தியே சிற்றில் சிதைக்காதே.

சொ.பொ.வி :

சிறுமை - துன்பம், தேற்ற - தெளிவிக்க, செகம் - உலகில், மன்னா - நிலைபெற்ற, அவரோடு - இந்தியரோடு.

போயர் அமர்க்குப் படைதிரட்டிப்
பிறங்கக் கொடுத்தேன் ஜுலுவென்போர்
புரட்சிக் குதவி நனிபுரிந்தேன்
புகழ்ந்தார் அந்த ஆப்பிரிக்கா
ஆய தீவை அரசாள்வோர்
அறிக்கை அதனால் அந்நாளில்
அரசப் பிரதி நிதியென்பார்
அளித்தார் பொன்னின் பதக்கமதை
மேய ஜெர்மன் பெரும்போர்க்கு
விரும்பிப் படையைச் சேர்த்தளித்தேன்
விழைந்தில் வாறா உதவிசெய்தால்
மேன்மை பெறலாம் என்றென்று

தேயம் மதிக்க உரைசெய்த
செல்வா சிற்றில் சிதையேலே
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா சிற்றில் சிதையேலே. (3)

பொருள் :

போயர் சண்டைக்கு இந்தியர்களைக் கொண்டு படைதிரட்டிப் பெருமையுடன் கொடுத்தேன். ஜுலுவென் போருக்கு மகிழ்வோடு உதவி புரிந்தேன். ஆப்பிரிக்க அரசு என்னைப் புகழ்ந்தது. மேலும் ஜெர்மன் பெரும் போருக்கு விருப்பமுடன் படையைச் சேர்த்து அளித்தேன். ஆப்பிரிக்க அரசு அறிக்கை விடுத்துப் பெருமை சேர்த்து, அரசப் பிரதிநிதி மூலம் பொற்பதக்கம் அளித்தனர். இவ்வாறு உதவி செய்ததால் மேன்மை பெறலாம் என எண்ணிச் செய்தேன் என்று உலகம் மதிக்க உரை செய்த செல்வா சிற்றில் சிதைக்காதே, சிறியேன் உள்ளத்து அமர்ந்த காந்தித் தேவனே சிற்றில் சிதைக்காதே.

சொ.பொ.வி:

அமர் - சண்டை, பிறங்க - பெருமை, நனி - மகிழ்ந்து, பொன்னின் பதக்கம் - பொற்பதக்கம், விழைந்து - விரும்பி.

நன்று கிடைக்கும் என்றெண்ணி
நானிவ் வாறா உதவிசெய
நாவை யடைக்கும் பெரும்பூட்டாய்
நவிலும் ரௌலட் சட்டமது
மன்றம் ஏறி வந்தந்த
மறத்தைப் போக்க ஓரியக்கம்
வகுக்க வேண்டி யானதுபின்
மாபாஞ் சாலந் தனிலந்தோ

கொன்று மலையாக் குவித்தபெருங்
கொடிய கொலையுந் தோன்றியதால்
குருவைக் காக்கத் துருக்கர்க்குக்
கொடுத்த வாக்கைக் காக்காமல்
தின்று விட்டார் மந்த்ரியெனுந்
தீரா சிற்றில் சிதையேலே
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா சிற்றில் சிதையேலே. (4)

பொருள் :

இந்தியருக்கு நல்லது கிடைக்கும் என்று நான் இவ்வாறாக உதவி செய்து கொண்டிருக்கும் பொழுது, பேச்சுரிமையைத் தடுக்கும் ரௌலட் சட்டம் நாவிற்குப் பெரும் பூட்டாய் அரசியல் மன்றத்தில் நிறைவேறியது. அந்த தீமைப் போக்க ஓர் இயக்கம் (ஒத்துழையாமை) வகுக்க வேண்டியதாயிற்று. மேலும் பாஞ்சால நாட்டில் மக்களை மலை மலையாகக் கொன்று குவித்த செயலும் நடந்தது. குருஷேத்திரத்தைக் காக்கத் துருக்கியருக்குக் கொடுத்த வாக்கைக் காக்காமல் அழித்துவிட்டார்கள் அரசப் பிரதிநிதிகள் என்று கூறிய தீரனே, சிற்றில் சிதைக்காதே, சிறியவனகிய என் உள்ளத்தமர் காந்திப் பெருமானே சிற்றில் சிதைக்காதே.

சொ.பொ.வி :

நாவை அடக்கும் - பேச்சுரிமையைத் தடுக்கும், மன்றம் - அரசாங்கம், ஏறி வந்தது - கொண்டு வரப்பட்டது.

இன்ன செய்கை கண்டபினும்
எதிர்க்க உள்ளத் தெண்ணாமல்
எந்தன் உயிரின் துணைவர்பலர்
இயம்பும் மொழியுங் கொள்ளாமல்

பின்னும் ஒத்தே உழைக்கவெனப்
பேசித் தந்த திருத்தத்தைப்
பெரிய தேச சபைமுன்னர்ப்
பெற்றுக் கொளமன் றாடினைப்
பண்ணற் கரிய பாஞ்சாலப்
பழிக்கும் முஸ்லீம் குருவுக்கும்
பரிகா ரங்கள் கிடைக்குமெனும்
பண்பைக் கொண்டே எனமொழிந்த
சென்னி உலகுக் கெனத்திகழுந்
திருவே சிற்றில் சிதையேலே
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா சிற்றில் சிதையேலே. (5)

பொருள் :

அரசாங்கத்தார் இத்தகைய இன்னாத செயல்கள் செய்வதைக் கண்ட பின்னும் உள்ளத்தில் எதிர்க்க எண்ணவில்லை. என்னுடைய உயிரனைய நண்பர்கள் கூறிய மொழிகளையும் ஏற்காமல், செய்யக் கூடாத பாஞ்சாலப் பழிக்கும், முஸ்லீம் குருவுக்கு நிகழ்ந்த பழிக்கும் பரிகாரம் கிடைக்கும் என்ற பண்பால் நம் இந்திய மக்களை அரசாங்கத்திற்கு ஒத்துழைக்க வேண்டும் எனக் கூறி, அரசாங்கம் விதித்த சட்டங்களுக்கு நான் கொடுத்த திருத்தத்தை அரச சபையின் முன்னர் நிறைவேற்றிக் கொள்ளலாம் என்று மன்றாடிப் பெருமுயற்சி செய்தேன் எனக் கூறிய உலகத்திற்குத் தலைவன் எனத் திகழும் காந்தியே, சிற்றில் சிதைக்காதே, சிறியவனாகிய என் உள்ளத்தமர் காந்தியே சிற்றில் சிதைக்காதே.

சொ.பொ.வி :

உயிர்த்துணைவர் - நண்பர், தேச சபை - அரசசபை, பன்னற்கரிய - செய்யக் கூடாத, சென்னி - தலைவன்.

நீள்பாஞ் சாலப் படுகொலைக்கு
நீதி ஏதுங் கண்டில்லேன்
நீக்கம் பெறவும் பெற்றிலராய்
நிற்கின் றாரன் னார்சிலவர்
மூளுங் காதல் கொடுசிலர்க்கு
முன்னிப் பரிசும் ஈகின்றார்
மொழிபொய்த் ததற்கும் ஒன்றுமிலை
முடித்துக் கொடுத்த சீர்திருத்தம்
வாளா அன்றி மற்றில்லை
வறுமைப் பிணியால் வாட்டமுறும்
மக்கள் உய்ய வழியில்லை
மனத்துட் கொண்டேன் இவையெனும்புந்
தேளிர் பரவும் திருநாட்டுச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா சிற்றில் சிதையேலே. (6)

பொருள் :

கொடுமையான பாஞ்சாலப் படுகொலைக்கு நீதி எதுவும் கண்டிலேன். ரௌலட் சட்டத்தை நீக்கவும் பெற்றிலராய் இந்தியர் நிற்கின்றார். அரசாங்கம் தங்களிடம் அன்பு கொண்டவர் சிலருக்கு (காட்டிக் கொடுத்த) முன்வந்து பரிசும் நல்கியது. அரசாங்கம் தான் கொடுத்த வாக்குத் தவறியதற்கும் ஒன்றும் நிகழவில்லை. சட்டத் திருத்தமும் எதுவும் நிகழாமல் அப்படியே கிடந்தது. வறுமையுற்றுத் திகழும் இந்திய மக்களுக்கு வாழ வழியும் இல்லை. இவை எல்லாம் என் மனதில் கொண்டேன் என்று கூறிய தேவர்களும் போற்றும் செல்வனே, சிற்றில் சிதைக்காதே. சிறியவனாகிய என் உள்ளத்தமர் காந்தித் தேவனே சிற்றில் சிதைக்காதே.

சொ.பொ.வி:

காதல் கொடு சிலர் - அரசாங்கத்திற்கு அன்புடையவர், மொழி பொய்த்ததற்கு - வாக்கு தவறியதற்கு, வாழா - வெறுமனே கிடந்தது, உய்ய - வாழ.

இந்தியர் எய்துந் துயர்தன்னை
எடுத்துப் புகல்வோர் எல்லோரும்
ஏதஞ் சாரும் சிறையெய்தி
இன்னல் ஏற்றங் குறைவதையும்
நொந்து துன்பம் அடைவதையும்
நோக்கி அவரோ டொத்துழையா
நுவலற் கரிய கருணைசெறி
நோன்பை மக்கள் எளிதாகச்
சிந்தை கொள்ளத் தந்தனனால்
சீற்றம் இறைபால் என்றனக்குச்
சிறிதும் இல்லை எனமொழிந்த
செம்மை மிக்க சீரநம்ப
செந்தா மரையாள் திகழ்நாட்டுச்
செல்வா சிற்றில் சிதையேலே
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா சிற்றில் சிதையேலே. (7)

பொருள் :

இந்தியர் எய்தும் துன்பங்களை எல்லாம் எடுத்துக் கூறுகின்றவர்கள் எல்லோரும் துன்பம் தரும் சிறைச் சாலையில் அடைக்கப்பட்டு, துன்புறுவதையும் மனம் நொந்து துயரடைந்ததையும் நான் நோக்கி, அரசாங்கத் தோடு ஒத்துழையாமை என்ற தீங்கு தராத அருள் கொண்ட நோன்பை மக்கள் எளிதாக ஏற்றுக் கொள்ளத் தந்தேன். அரசாங்கத்தின் மீது எனக்குச் சிறிதும் கோபம்

இல்லை என மொழிந்த, செம்மை மிக்க நம்பியே, திருமகள் விளங்கும் இந்நாட்டுச் செல்வனே, சிற்றில் சிதைக்காதே. சிறியேன் என் உள்ளத்தமர் காந்தியே சிற்றில் சிதைக்காதே.

சொ.பொ.வி:

துயர், ஏதம், இன்னல், துன்பம் - இவை யாவும் ஒரு பொருட் சொற்கள். துன்பம் என்பது அவற்றின் பொருள். இறை - அரசாங்கம், செந்தாமரையாள் - திருமகள்.

ஆன இந்த அரசாட்சி
அடியேன் கொள்ளேன் அதில்வெறுப்பை
அடைதல் மேலாம் குணமென்ன
அணிந்தேன் ஆண்மை தனையழிக்கும்
ஈனங் கொண்ட ஆட்சியதை
ஏற்றல் பாடம் எனவுணர்ந்தேன்
இழிக்கும் தீதோ டுறவாடேன்
ஏழிலார் நன்மை பற்றுங்கால்
நானே அடைவேன் எதுவரினும்
நன்கு பொறுப்பேன் துயரையெலாம்
நலிய மாட்டேன் எற்கிவையே
நல்ல கடமை எனநவின்ற
தேனே ஒழுகு திண்மைசெறி
தீரா சிற்றில் சிதையேலே
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா சிற்றில் சிதையேலே. (8)

பொருள் :

இத்தகைய துன்பந் தரும் ஆங்கிலேய ஆட்சியை அடியேன் ஏற்றுக் கொள்ளமாட்டேன். ஆட்சியில் வெறுப்பைக் கொள்ளுதல் நமக்கு உரியதே எனக்

கொண்டேன். இந்திய ஆண்மையை அழிக்கின்ற ஈனம் மிகுந்த ஆட்சியை ஏற்றுக் கொள்ளுதல் பாபம் என உணர்ந்தேன். மக்களை இழிவாக நடத்தும் தீமை அரசோடு உறவாடேன். நன்மை வந்தாலும் நானே அடைவேன், துன்பம் எதுவரினும் நானே பொறுப்பேன், அதற்காக வருந்தமாட்டேன், இதுவே என்னுடைய கடமை எனத் தேன் போன்ற சொற்களால் கூறிய வல்லமை கொண்ட தீரனே, சிற்றில் சிதைக்காதே, சிறியேன் உள்ளத்து அமர் காந்தியே சிற்றில் சிதையாதே.

சொ.பொ.வி :

மேலாம் குணம் - முதன்மைக் குணம், அணிந்தேன் - ஏற்றேன், ஆண்மை - இந்தியரின் வலிமை.

கடமை யாக நான்கொண்ட
காரி யத்தைக் குற்றமெனக்
கணிக்குஞ் சட்டம் தனையறிந்தே
கருதுந் தண்டனை தனையேற்க
அடைந்தேன் ஈண்டச் சட்டமுறை
அதுவே ஒழுங்கென் றகங்கொண்டால்
ஆற்ற தண்டித் திடுகவன்றி
அடியேன் செயலை இனிதோர்ந்து
கொடுமை சட்டம் என்னுடைய
கொள்கை சரியென் றறிவீரேல்
கோது பொருந்தும் இப்பதவி
கொள்ளா தின்றே விடுகவெனத்
திடமாய நீதி பதிமுனுரை
செல்வா சிற்றில் சிதையேலே
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவே சிற்றில் சிதையேலே. (9)

பொருள் :

நாட்டுக்குரிய கடமையாக நான் கொண்ட செயலை எல்லாம் அன்னியர் ஆட்சியில் குற்றமெனக் கொள்ளு கின்ற சட்டம் தனை அறிந்து, அவர்கள் குற்றமெனக் கருதும் அதற்கு அளிக்கும் தண்டனையைப் பெற்றுக் கொள்ளச் சட்டத்திற்கு முன்னே நின்றேன். நான் செய்தது குற்றம் என நீங்கள் கருதினால் என்னைத் தண்டித்திடுக. அதுவல்லது எனது செயலை நன்கு ஆராய்ந்து உங்களுடைய சட்டமானது என்னுடைய செய்கையைச் சரியென்று கூறுவது அறிந்தால் குற்றம் பொருந்திய என் கைது நிலையை விடுவித்திடுக என்று நீதிபதியிடம் வலிமையுடன் கூறிய செல்வனே, காந்தியே சிற்றில் சிதையாதே. சிறியேன் உள்ளத்து அமர்ந்த காந்தித் தேவா சிற்றில் சிதையாதே.

சொ.பொ.வி:

கணிக்கும் - கூறும், கருதும் - சட்டம் கூறும், ஆற்ற - உரிய, கோது - துன்பம், இப்பதவி - கைதி எனும் பதவி.

நியாயம் வகுக்கும் அதிபதியுந்
நாள்நிற் பார்த்தே என்முன்னர்
நின்னை அனைய - தகுதியுளார்
நின்ற தில்லை இதுகாறும்
அயாவு னைப்போல் இனிமேலும்
அடையப் போவ தில்லையுனை
அறிவேன் நன்றாய் நீயுரைக்கும்
அஹிம்சை ஆதி அறத்தையென

வயாவோ டுரைத்துப் பற்பல்புகழ்
வழுத்தப் பெற்றாய் என்றாலுன்
மாட்சி உரைக்க வல்லேனிம்
மதியில் ஏழைச் சிறியேனோ
தியாக உருவே அன்புசெறி
தீரா சிற்றில் சிதையேலே
சிறியேன் உள்ளத் தமர்காந்தித்
தேவா சிற்றில் சிதையேலே. (10)

பொருள் :

நீதியைக் கூறும் நீதிபதிக்கு முன்னே நீ நிற்பதைக் கண்ட நீதிபதி அன்று எனக்கு முன்னே நிற்பவர்களில் உன்னைப் போன்ற தகுதி உடையவர்கள் நின்றதில்லை. மேலும் தளர்ச்சியில்லாத உன்னைப் போல் இனிமேலும் நாங்கள் காணப் போவதில்லை. உன்னை நன்றாக அறிவேன். நீ உரைக்கும் அஹிம்சை முதலான அறத்தையும் அறிவேன் என்று விருப்பத்தோடு அந்நீதிபதி உரைக்கின்ற அளவுக்கு பல்புகழாலும் போற்றப் பெற்றாய் என்றால் உன் மாட்சி உரைக்க அறிவில் ஏழையாக இருக்கின்ற என்னால் முடியுமா? தியாகத்தின் வடிவே, அன்பு நிறைந்த தீரனே, சிற்றில் சிதையேல், சிறியேன் உள்ளத்து அமர்ந்த காந்தித் தேவா, சிற்றில் சிதையாதே.

சொ.பொ.வி :

நியாயம் - நீதி, அதிபதி - நீதிபதி, வயா - தளராது, தயாவோடு - விருப்பத்தோடு.

9

சிறுபறைப் பருவம்

தென்னாப்பி ரிக்காவில் நின்செயற்குத் துணைநின்ற
சீலமிகு கின்ற எங்கள்
திருமலிய அறம்வளர்த்த பலபெரியோர் அவதரித்த
சீர்த்தியடைத் தமிழ்பி றந்த
தென்னாட்டு நாகப்பன் வள்ளியம்மை சீர்நாரா
யணனிவர்கள் செய்கை தன்னைச்
செகமறியப் பலப்பலகால் செப்பிமகிழ் உத்தமனே
சிறந்ததமிழ் மொழியில் அந்நாள்
எந்நாடும் எம்மதமும் எம்மொழியும் எம்மனித
ரும்மென்றும் இதயம் ஏந்த
இனிதறத்தை வகுத்தருளும் எந்திருவள்ளுவர் குறள்கட்
கிலக்காகி ஈண்டு வந்த
செந்நாவாய் உண்மையினில் ஜெகத்குருவே சீர்க்காந்தி
சிறுபறை முழக்கி யருளே
செல்வக்க ரஞ்சந்த்ரர் புத்திரிபாய் திருமகனே
சிறுபறை முழக்கி யருளே. (1)

பொருள் :

கரம்சந்த்ரர் புத்திரிபாய் பெற்றெடுத்த திருமகனே, தென்னாப்பிரிக்க நாட்டில் உன்னுடைய செயல்களுக்குத் துணைநின்ற சிறப்பு மிகுந்த மங்கலம் விளங்குகின்ற அறம் வளர்த்த பல பெரியோர்கள் அவதரித்த, புகழுடைய எங்கள் தமிழ்நாட்டில் பிறந்திட்ட, தென்னாட்டு நாகப்பன், வள்ளியம்மை, சீர்மிகுந்த நாராயணன் இவர்களுடைய செயல்கள் தன்னை

உலகமறியப் பலப்பல முறையில் கூறி மகிழ்ந்த உத்தமனே. எங்கள் தமிழ் மொழியில் பண்டைக் காலத்தில் எந்த நாடும் எந்த மதமும், எந்த மொழியும், எந்த மனிதரும் தங்கள் இதயத்தில் ஏற்றுக் கொள்ளுகின்ற வண்ணம் இனிமையான அறத்தை வகுத்துத் தந்த எம் திருவள்ளுவர் குறளுக்கு எடுத்துக்காட்டாய் இங்கு வந்த, உண்மை பேசும் நாவினை உடைய ஜெகத்குருவே, சிறுபறை என்னும் இசைக் கருவியைக் கொட்டி முழக்கி அருள்வாயாக.

சொ.பொ.வி :

செகம் அறிய - உலகறிய', செப்பி - கூறி, குறள்கட்கிலக்காகி - குறளுக்கு எடுத்துக்காட்டாகி.

சீரமலியுந் தமிழ்நாட்டில் திருமலியுந் தனவணிகர்
தெருமலிய அறம் வளர்க்கும்
சீர்த்திமலி வளப்பாண்டி மண்டலத்தில் திகழ்காரைக்
குடியென்னுஞ் சீரப்ப திதனில்
நார்மலியப் பொறைமலிய நல்லுண்மை தாமலிய
நண்ணுமறம் ஆதி யாயவும்
நனிமலிய உரைபகர்நாள் நாட்டன்பு சிறிதின்றி
நண்ணாதார் நாடு நன்றாய்
ஏர்மலியப் பொருளீந்தே இழுக்குடைய மகவுணவை
ஈந்துமகார் வளர்த்தல் தன்னில்
இறந்துபட விடுதல்மேல் எனஅன்பால் உரைவிரித்த
எழில்மலியுற் காந்தி என்னுந்
தேர்மலியுந் திருவீதித் தென்னாட்டார் திருவுளமே
சிறுபறை முழக்கி யருளே.
செல்வக்க ரஞ்சந்த்ரர் புத்திரிபாய் திருமகனே
சிறுபறை முழக்கி யருளே. (2)

பொருள் :

பெருமை மிக்க தமிழ்நாட்டில், புகழ்மிக்க வளமிக்க பாண்டி மண்டலத்தில், தெருவெல்லாம் அறம் வளர்க்கும் செல்வம் மிக்க தனவணிகர் வாழுகின்ற காரைக்குடி என்னும் பெருமை மிக்க ஊரில், அன்பு, பொறுமை, உண்மை ஆகியவை பெருக, நல்லறங்கள் யாவும் சிறந்தே வளர சொற்பெருக்கு ஆற்றிய நாளில் - நாட்டின்மீது அன்பு சிறிதும் இன்றி, பகைவரின் நாடு நன்றாய் வளம் பெருகப் பொருளீந்து, இழிவுடைய புலால் உணவைக் கொடுத்து மக்களை வளர்த்தலைவிட, இறந்து விடுதலே மேல் என அன்பால் விரித்துரைத்த, அழகு விளங்கும் காந்தி என்னும் தேர் ஓடும் திருவீதிகளைக் கொண்ட, தென்னாட்டு மக்களின் திருவுளமே சிறுபறை முழக்கி அருளே, செல்வக் கரஞ்சந்த்ர புத்திரிபாய் பெற்றெடுத்த திருமகனே சிறுபறை முழக்கி அருளே.

சொ.பொ.வி:

மலிதல் - பெருகுதல், பதி - ஊர், நார் - அன்பு, நண்ணாதார் - பகைவர், ஏர் - வளம், மகவுணவு - புலால் உணவு, மகார் - மக்கள்.

பொன்புரையுந் திருமேனி பொன்றாப்புன் சிறைபுக்க
போதுமொரு துயரும் இன்றிப்
பொருமியழு துளம்நொந்த புண்ணியவித் திருநாட்டுப்
புதல்வர்தமை இனிது நோக்கி
அன்புரையாற் கதர்கதரென் றறைந்தேகி அணிபெறவீற்
றிருந்தருளும் அறக்கொ ழுந்தே
அடியேனின் இப்பிறப்பின் பயன்கதரைப் பெருக்குதலே
ஆகுமெனும் அண்ணல் ஏறே

மன்பெரிய பயனடையும் நூல்பயிலல் அதனினுநான்
மாராட்டின் நூலை நூற்றல்
மாண்பெனவே மதிக்கின்றேன் என்றுரைக்கும் மாமணியே
மாநாடு வாழ வந்தோய்
தென்பொதியுந் திருநாட்டில் திகழ்காந்திச் செம்மலே
சிறுபறை முழக்கி யருளே
செல்வக்க ரஞ்சந்த்ரர் புத்திரிபாய் திருமகனே
சிறுபறை முழக்கி யருளே. (3)

பொருள் :

பொன் போன்ற அழகு மிக்க உடம்பு அழகு அழிய, கொடிய சிறையில் புகுந்த போது ஒரு துன்பமும் இன்றி, அதே நேரத்தில் உள்ளத்துக்குள்ளே பொருமி அழுது வருந்துகின்ற, புண்ணிய பூமியான இத்திருநாட்டு மக்களை நோக்கி, உன்னுடைய அன்புரையால் கதராடை கதராடை என்று கூறி, அழகு பெற வீற்றிருந்து அருளு கின்ற அறத்தின் கொழுந்தே - என்னுடைய பிறப்பின் பயன் கதரைப் பெருக்குதலே ஆகும் என்று கூறும் அண்ணலே, ராட்டினத்தில் நூலை நூற்றல் உலகத்தில் பயன் தருகின்ற கல்வி கற்பதைக் காட்டிலும் மாண் புடையது என மதிக்கின்றேன் என்று உரைக்கும் மாமணியே, இந்தப் பெரிய நாடு வாழ வந்தவனே, தென்பொதிகைத் திருநாட்டில் திகழுகின்ற காந்திச் செம்மலே, சிறுபறை முழக்கி அருளே, செல்வக் கரஞ் சந்த்ரர் புத்திரிபாய் திருமகனே சிறுபறை முழக்கி அருளே.

சொ.பொ.வி :

பொன் - தங்கம், அறைந்து - கூறி, மன்பெரிய பயனடையும் - உலகம் பெரிய பயனடைகின்ற, நூல் பயிலல் - கல்வி கற்றல்.

ஊனொடுக்கி ஒளிபெருக்கும் உத்தமனென் றுலகுபுகழ்
ஒருவனுளன் உலகில் ஆனால்
உனையன்றி வேறில்லை உன்னுணவின் அருமையினை
ஒண்புகழாம் ஒளியை ஓர்ந்து
நானடுக்கி நவிலுதற்கு வல்லவனோ நாப்பலபெற்
றாலுமவை நண்ணல் ஆமோ
நாகரிகம் என்றிந்நாள் நனியாடை பலசுமந்து
நண்ணுமவர் நாண அன்பாய்
வானுடுக்கும் புகழ்கொண்ட மாண்புசெறி ஒருசிறிய
கதருடுத்தும் வள்ள லேஇம்
மண்மதிக்குந் தனிப்பெரிய மகத்சப்தம் இனிதேற்ற
எண்ணமிகு காந்தி மன்னா
தேனடுக்கும் மலர்ப்பொழில்சூழ் திருப்பழன நாட்டவனே
சிறுபறை முழக்க யருளே
செல்வக்க ரஞ்சந்த்ரர் புத்திரிபாய் திருமகளே
சிறுபறை முழக்கி யருளே. (4)

பொருள் :

உடம்பை ஒடுக்கி ஒளி பெருக்கும் உத்தமன் என்று உலகு புகழ் ஒருவன் உலகத்தில் இருக்கின்றான் என்றால் உனைத் தவிர வேறு ஒருவர் இல்லை. உன்னுடைய வாழ்வியல் அருமையினை மிக்க புகழாம் பெருமை யினை நினைந்து நான் சொற்களை அடுக்கிக் கூறுவதற்கு வல்லவனோ? நாக்கு பல பெற்றாலும் உன் பெருமை யைக் கூறலாகுமோ? இந்நாளில் நாகரிகம் என்று பல ஆடைகளைச் சுமந்து வாழுகின்றவர்கள் நாணும்படியாக, வானளவு நீண்ட புகழ் கொண்ட மாண்பு செறிந்த அன்புடனே ஒரு சிறிய கதருடுத்தி வாழும் அண்ணலே, உலகம் மதிக்கின்ற தனிப்பெரிய, பெரிய சப்தத்தை

(வாழ்க எனும் சத்தம்) இனிது ஏற்ற வல்லமை மிக்க காந்தி என்னும் மன்னவனே. தேன் பொருந்திய மலர்களைக் கொண்ட, சோலைகள் சூழ்ந்த திருப்பழன நாட்டவனே, சிறுபறை முழக்கி அருளே, செல்வக் கரஞ்சந்த்ரர் புத்திரிபாய் பெற்றெடுத்த திருமகனே சிறுபறை முழக்கி அருளே.

சொ.பொ.வி:

ஊன் - உடல், உன்னுணவின் - உணவு உள்ளிட்ட வாழ்க்கை, ஓர்ந்து - சிந்தித்து, அடுக்கி - சொல்லால் அடுக்கி, நா - நாக்கு, ஆடை பல - பல ஆடைகள், நண்ணுதல் - வாழ்தல், வானுடுக்கும் - வானளவு, மகத்சப்தம் - பெரிய சப்தம்.

ஐம்பெரிய பாதகத்துள் மதுவருந்தல் ஒன்றெனவே
அறஞ்சொன்ன புலவர் அந்நாள்
அறைந்தவதை மனங்கொண்டே அவ்வினையால் மக்கள்பலர்
அழிந்துசெயல் இன்றி அந்தோ
தம்பமெனத் தெருக்கிடக்க சாற்றரிய இவ்விழிவாம்
தன்மையால் தார மோடு
தனையரெலாம் தரித்திரத்தை நனியேற்றுத் தளர்ந்துபல
தாங்கொண்ணாத் துன்பம் எய்தி
வெம்பவிவை உள்ளமதில் விரைந்தெணிஇந் நாட்டறிவு
மேவியிட வேண்டு மானால்
விரும்பவொணா இக்கள்ளை விட்டுவிட வேண்டுமென
விதியினொடு சேர்த்த மைத்த
செம்பதுமத் திருமகிழச் செயல்புரிகாந் திச்செம்மல்
சிறுபறை முழக்கி யருளே
செல்வக்க ரஞ்சந்த்ரர் புத்திரிபாய் திருமகனே
சிறுபறை முழக்கி யருளே (5)

பொருள் :

களவு, பொய், கொலை, கள், காமம் என்ற ஐந்து பாதகங்களில் ஒன்று மது அருந்துதலாகும் என்று அறம் கூறிய புலவர்கள் கருத்தை உன் மனத்தில் கொண்டு, அந்த கள் குடித்தல் என்ற வினையால் இந்த நாட்டு மக்கள் பலர் அழிந்து செயல் இன்றி, கட்டை போலத் தெருவிலே கிடக்க - கூறுவதற்கு அரிய இந்த இழி செயலால் தன் மனைவியும் சுற்றத்தாரும் வறுமையில் வாடிடப் பலவிதமான துன்பங்களை எய்தித் துடிக்க, அவர்கள் உள்ளம் வெம்ப, இவற்றைக் கண்டு தன் உள்ளத்தில் இனி இந்த நாட்டில் அறிவு மேம்பட வேண்டுமானால் விரும்பத் தகாத இந்தக் கள்ளை விட்டுவிட வேண்டும் எனத் தன் கொள்கைகளில் ஒன்றாய்ச் சேர்த்து வற்புறுத்திய - தாமரையில் வீற்றிருக்கும் திருமகள் மகிழச் செயல் புரிந்த காந்திச் செம்மலே, சிறுபறை முழக்கி அருளே, செல்வக் கரஞ்சந்த்ரர் புத்திரிபாய் பெற்றெடுத்த செல்வனே, சிறுபறை முழக்கி அருளே.

சொ.பொ.வி :

அறைந்தவதை - கூறியவற்றை, தம்பம் - தூண் (மரக் கட்டை), தரித்திரம் - வறுமை, வெம்ப - வாடுதல், விரைந்தெணி - விரைந்தெண்ணி, விதியொனொடு - கொள்கையோடு.

தக்கதகா தனவோர்ந்து தருமத்தின் வழிச்சென்று
தாரணியெந் நாளும் வாழத்
தருகடமை தனையாற்றிச் சாற்றரிய இன்புநிலை
சாருதலே தலத்து வந்த

மக்களுயர் கடனதற்கு மாசற்ற அறிவுதரு
மாண்புடைக் கல்வி வேண்டும்
வாழுமுறை பயிற்றாத சீலமொரு சிறிதுமிலா
வல்லடிமை கொளப்ப யிற்றும்
மிக்கவர்வே றில்லையென விளம்புதகை மேவரமேல்
வீடடைய அறிவி யாத
வெறுங்கல்வி பயனில்லை வேண்டாமப் பள்ளிதனை
விட்டின்னே விலகும் என்ற
செக்காரும் பொன்மேனிச் செகம்புகழ்காந் திப்பெரிய
சிறுபறை முழக்கி யருளே
செல்வக்க ரஞ்சந்த்ரர் புத்திரிபாய் திருமகனே
சிறபறை முழக்கி யருளே (6)

பொருள் :

செய்யத் தக்கவை, செய்யத் தகாதவை இவை என்பதைத் தெளிந்து, அறத்தின் வழி நடந்து, உலக மெலாம் எந்நாளும் வாழ, தக்க கடமைதனைச் செய்து, கூறுவதற்கு அரிய இன்பநிலை எய்துதலே - பிறந்து வந்த மக்களுக்கு உயர்வாகும். இத்தகைய நிலையை அடைவதற்குக் குற்றமற்ற அறிவைத் தருகின்ற பெருமை மிக்க கல்வி வேண்டும். வாழும் முறைகளைச் சொல்லிக் கொடுக்காத சீலம் சிறிம் இல்லாத அடிமை கொள்ளச் சொல்லிக் கொடுக்கும், தகைமை உடையவர்களே மிக்கவர், அவர்களை வானுலகம் எய்துவர் என்று அறிவிக்காத வெறுங்கல்வி பயனில்லை. எனவே, வெறுங்கல்வி கற்றுக் கொடுக்கும் கல்விதனை (சமய உணர்வு இல்லாத மேல்நாட்டுக் கல்விதனை கற்றுக் கொடுப்பதை) இன்றே விலக்குவீர்களாக என்று கூறிய, செவ்வானத்தைப் போன்ற பொன்மேனியைக் கொண்ட

உலகம் புகழுகின்ற காந்தியம் பெருமானே, சிறுபறை முழக்கி அருளே, செல்வக் கரஞ்சந்த்ரர் புத்திரிபாய் பெற்றெடுத்த மகனே சிறுபறை முழக்கி அருளே.

சொ.பொ.வி :

ஓர்ந்து - ஆய்ந்து (தெளிந்து) தருமத்தின் - அறத்தின், தாரணி - உலகில், தகுகடமை - தக்க கடமை, சாற்றரிய - கூறுவதற்கு இயலாத, தலத்துவந்த - பிறந்த, பயிற்றும் - சொல்லிக் கொடுக்கும், இன்னே - இன்றே, செக்கர்வானம் - அந்திவானம்.

வேறு

சட்டச பைகளிற் சார்வதிற் பயனிலை
சார்ந்தவண் செய்வதெவன்
சான்றோர் அங்கிலை சனநலம் எனச்சில
சாதித் திடினுமவர்
இட்டப் படிசெய எல்லா உரிமையும்
ஏற்றிருக்கும் பொழுது
என்செய வல்லீர் அங்குசென் றந்தோ
ஏனிவ் இடர்ப்பாடு
திட்டம் உடன்பிற செயல்புரி வதில்நாள்
செலவிட் டால்தேசம்
செழிக்கும் பயன்தரு செயல்செயும் வீணே
சென்றுயர் குன்றதனில்
முட்டிய குரீயென மொய்ம்பழி யீரென
முழக்குக சிறுபறையே
மோகன தாஸ்கரம் சந்திர காந்தி
முழக்குச் சிறுபறையே. (7)

பொருள் :

ஆளும் சபைகளில் சென்று பதவி வகிப்பதில் பயனில்லை. அங்கு சென்று எதையும் செய்ய முடியாது.

தக்கவர்கள் அங்கில்லை. மக்களுக்கு நலம்பயக்கும் எனச் சில திட்டங்களைச் சாதித்திட்டாலும், சபையின் விதிப்படியே அனைத்து உரிமைகளையும் செய்ய வேண்டும் என்று விதி இருப்பதால் அங்கு சென்று என்ன செய்ய முடியும்? எதற்காக துயரப்பட வேண்டும்? அத்திட்டம் மற்றும் பிற செயல்களைச் செய்வதில் (வெளியிலிருந்து) வாழ்நாளைச் செலவிட்டால் தேசம் செழிக்கும். செயல்களும் பயன் தரும். பறக்கும்போது பெரிய மலையில் சென்று முட்டி வீணாகும் குருவி போல வீணே அழிந்து விடாதீர் என்று மொழிந்தவரே, முழக்குக சிறுபறையே, மோகனதாஸ் கரம்சந்திர காந்தியே சிறுபறை முழக்கி அருளே. (இப்பாடல் காந்தியின் அரசுப் பதவித் துறவைச் சுட்டுவதாகும்)

சொ.பொ.வி:

சட்டசபை - ஆளும் மன்றம், சனநலம் - மக்கள்நலம், அவரிட்டப்படி - சட்டசபை விதியின்படி, இடர்ப்பாடு - துன்பம், திட்டம் - மக்கள் நலத்திட்டம், குன்று - மலை, குரீ - குருவி.

பாரிற் பாதகத் தொழிலெது என்னின்
பள்ளியிற் பயில்சிறிய
பச்சைக் குழந்தையும் பகரும் பொருளைப்
பகற்கொளை அடிப்பதுபோல்
நேரிற் பறித்துண் நியாய வாதியாயம்
நெறியில் தொழிலென்றே
நின்றவ் வினையால் பாதகப் பொய்க்கு
நெஞ்சத் தச்சமிலா

நாரில் மக்கள் நலம்பெற் றுய்ய
நாடு செழித்தோங்க
நல்லன மலிய அல்லன நலிய
நல்லெறி வெங்குமிக
மூரிப் பெரிய முளரிக் கையால்
முழக்குக சிறுபறையே
மோகன தாஸ்கரம் சந்திர காந்தி
முழக்குக சிறுபறையே. (8)

பொருள் :

உலகத்தில் பெரிய பாதகத் தொழில் எது என்றால் பள்ளியில் கல்வி பயிலுகின்ற சிறு குழந்தைகள் (படிக்கச் செல்லாது கூறி விற்கும் பொருளை) பகற் கொள்ளை அடிப்பது போல, குழந்தைகளை ஏமாற்றிப் பறித்து உண்ணுகின்ற நிலையாகும். அது போல, தங்களை நியாயவாதியாகக் கூறிக்கொண்டு, நெறியில்லாத தொழிலைச் செய்து, அந்தப் பாதகத் தொழிலால் விளையும் பொய்க்கு நெஞ்சத்தில் சிறிதும் அச்சப்படாது, அன்பில்லாது வாழுகின்ற மக்கள் - நலம் பெற்று வாழ, நாடு செழித்தோங்க, நல்ல செயல் பெருக, அல்ல செயல்கள் அழிய, நல்லறிவு எங்கும் வளர உன்னுடைய வலிமை மிக்க பெரிய தாமரைக் கையால் சிறுபறையை முழக்குவீராக. மோகன தாஸ்கரம் சந்திர காந்தியே சிறுபறையை முழக்கி அருள்க.

சொ.பொ.வி:

பாரில் - உலகில், பகரும் - விலைகூறும் (கையில் வைத்திருக்கும் என்றும் கொள்ளலாம்), கொளை - கொள்ளை, நெறியில் - நெறியில்லாத, நாரில் - அன்பில்லாத, மரி - வலிமை, முளரி - தாமரை.

பாண்டிந் நாட்டிற் பஞ்சா யத்தெனப்
பண்புற மக்கள் தமைப்
பார்த்தூர் தோறும் அமைத்தனர் அவரும்
பாங்காய் வழக்குகளை
விண்டற நெறியே விளக்கினர் அன்னார்
மிகுதுலை நாவன்ன
மேதகு நடுநிலை தவறா வாய்மையர்
மேவுமிந் நாள் நிலையை
மண்டலம் அறியும் வாயாற் கூறினும்
மாசே மாசெனவே
மதிமிக உடைய வள்ளால் கருணை
மாபெரு வாரிதியை
மொண்டே மொழியும் மொய்ம்புடை மழையே
முழக்குக சிறுபறையே
மோகன தாஸ்கரம் சந்திர காந்தி
முழக்குக சிறுபறையே. (9)

பொருள்:

பண்டைக் காலத்தில் இந்நாட்டில் ஊர்ப்பஞ்சாயத்து என பண்பு கொண்ட மக்களைக் கொண்டு ஊர்தோறும் சபைகளை அமைத்தனர். அவர்களும் பாங்காய் மக்களுக்கு உரிய வழக்குகளை அறநெறியில் விசாரித்து நீதி வழங்கினர். அவர்கள் தராசுத் தட்டின் நாக்குப் போல நடுவு நிலைமை தவறாத வாய்மை உடையவர் ஆவர். இந்நாள் நிலையை (நீதி கூறும் நிலையை) உலகம் அறியும். அந் (இழிநிலையை) நிலையை வாயால் கூறினும் குற்றம் குற்றமே என்று - அறிவு மிக்க வள்ளலே, அருள் என்ற பெரிய கடல் நீரை மொண்டு மழையைப் பொழியும் மேகம் போல, (அந்த நிலையை) எடுத்துக் கூறுகின்ற சான்

றோனே, உண்மை உடையவனே, முழக்கு சிறுபறையே, மோக தாஸ்கரம் சந்திர காந்தியே முழக்கு சிறுபறையே.

சொ.பொ.வி :

பண்டு - பண்டைக் காலத்தில், பாங்காய் - பண்புடனே, விண்டுஅற நெறியில் - விசாரித்து அறநெறியில், துலைநா - தராசுத் தட்டின் நாக்கு, மண்டலம் - உலகம், மாசு - குற்றம், மொண்டு - முகந்து.

கதியடை பவர்போல் களிப்பொடு வீணே
கண்ணியம் எனக்கொடுக்கும்
கருதின் பொருளெதும் இல்லா எழுத்தின்
கணமாம் பட்டமதை
நிதியென ஏற்பதில் பயனெதும் இல்லை
நிந்தனை ஒடுநம்மை
நினைப்பரும் இடரில் அழுத்திடும் அவரொடு
நேர்ந்துற வாடிடுதல்
மதியல் மான வாழ்க்கையை எண்ணி
வாழுதல் மேலன்றி
மானந் துரந்தும் பட்டந் தாங்குதல்
மரபல எனுமுயர்ந்த
முதுபுல வோர்கள் மொழிகளை ஓதி
முழக்குக சிறுபறையே
மோகன தாஸ்கரம் சந்திர காந்தி
முழக்குக சிறுபறையே. (10)


பொருள் :

நற்கதியை அடைந்தவர் போல மகிழ்ச்சியோடு - நாகரிகம் எனக் கொடுக்கும் பொருள் எதுவும் இல்லாத வெறும் எழுத்தின் கூட்டமாம் பட்டங்களை வீணே

கொடுக்க, அதனைப் பெரும் செல்வம் என ஏற்பதில் பயன் எதுவும் இல்லை. இகழ்ச்சியோடு நம்மை நினைக்க முடியாத துன்பத்தில் அழுத்துகின்ற அவரோடு (பட்டம் தருபவரோடு) சேர்ந்து உறவாடுதல் அறிவு ஆகாது. தன்மான வாழ்க்கையை எண்ணி வாழுதலே மேலான வாழ்க்கையாகும். அதுவன்றி தன்மானம் துறந்து பட்டம் தாங்குதல் மரபு ஆகாது என்று கூறிய பழைய புலவர்களின் கருத்துக்களை ஓதி காந்தியே சிறுபறையை முழக்குக. மோகன தஸ் கரம்சந்திர காந்தியே முழக்குக சிறுபறையே.

சொ.பொ.வி :

கதி - பிறப்பு, கண்ணியம் - நாகரிகம், எழுத்தின் கணம் - எழுத்தின் கூட்டம், பட்டம் - ஆங்கிலேயர் தரும் சர் உள்ளிட்ட பட்டங்கள். நிந்தனையோடு - இகழ்ச்சியோடு, மதியல - அறிவாகாது.



10

சிறுதேர்ப் பருவம்

இந்துமுசல் மான்வேற்று மையென்னுங் கொடியபிணி
இறந்துபட்டோட இந்த
இணையில்சீர்த் திருநாட்டில் பிறநாட்டின் ஆடையெலாம்
எரிக்கரை யதாகி வீழப்
புந்தியிலாக் கள்ளருந்தும் புன்செய்கை அகன்றோடப்
பிள்ளையை அடிமை ஆக்கும்
பெரும்பள்ளிக் கூடங்கள் பெருமையழிந்தொழியநெறி
பேசா வழக்கு மன்றம்
முந்தியழி வெய்தியிட மொய்சட்ட சபைவைத்த
மோகம் பறந்து மாள
மொய்ம்போடு பொருளுமிலா வீண்பட்ட ஆசைகள்
மோதுபெற் றோடி ஒழியச்
சிந்தைநிறை அறியாமை சிதறுண்டு சென்றுருளச்
சிறுதேர் உருட்டி அருளே
செகத்திலுயர் தனிக்காந்தி திகிரிபுனை செங்கையால்
சிறுதேர் உருட்டி அருளே. (1)

பொருள்:

இந்து முஸ்லீம் வேற்றுமை என்னும் கொடுமை யான நோய் அழிந்துபட்டு ஓட, இணையில்லாத இந்திய நாட்டில் பிற நாட்டு ஆடையெல்லாம் தீக்கு இரையாகி வீழ்ந்திட, அறிவில்லாத கள் குடிக்கும் கீழான செயல் அகன்று ஓட, படிக்கும் பிள்ளைகளை அடிமையாக்கும் பெரிய பள்ளிக் கூடங்களின் பெருமை அழிந்து ஒழிய, உண்மை நெறியை உரைக்காத நீதிமன்றங்கள் அழி

வெய்திட, சட்டசபையின் மேல் வைத்த பதவி ஆசை பரந்தோட, உண்மை வழியில் வராது சேகரித்த பொருள் களால் பெறுகின்ற ஆசைகள் உடைந்து ஓடி அழிய, சிந்தையில் நிறைந்திருக்கின்ற அறியாமை சிதறி உருண்டு ஓடிடச் சிறுதேர் உருட்டி அருள்வாயாக. உலகத்தில் உயர்ந்த ராட்டை சுழற்றும் செங்கையால் காந்தியே சிறுதேர் உருட்டி அருளே.

சொ.பொ.வி :

முசல்மான் - முஸ்லீம், எரி - தீ, புந்தியிலா - அறிவில்லாத, நெறிபேசா - உண்மைநெறி பேசா, மொய்ம்போடு - உண்மை நெறி வாராத.

இந்துமுக மதியரெனும் இருவேறு மதத்திலுறை
யாவரும் ஒன்று பட்டே
ஏதில்லார் தந்தீதை மோதிஉயர் வெய்தாமல்
இவர்க்குளே மாறு பட்டால்
வந்தபெருந் துன்பங்கள் மாளாவெ னும்உண்மை
மனத்துளே கொண்டெ நாளும்
மாறாமல் இவ்வொற்று மைநாடி மாற்றமுரை
வள்ளலே மாண்கு ணத்தோய்
எந்தஉயி ரும்நோவ இறையும்பொ றுக்காத
இணையிலாக் கருணை மூர்த்தி
எதுவரினும் அஞ்சாத இருமலையே பொறுமையாம்
எழிலுடைத் தீஞ்செ ழுந்தேன்
சிந்துதிரு வாய்ச்செம்மல் செயல்வல்ல சீர்க்காந்தி
சிறுதேர் உருட்டி அருளே
செகத்திலுயர் தனிக்காந்தி திகிரிபுனை செங்கையால்
சிறுதேர் உருட்டி அருளே. (2)

பொருள் :

இந்து முஸ்லீம் என்னும் இரண்டு வேறுபட்ட மதத்தில் வாழுகின்ற யாவரும் ஒன்றுபட்டு அன்னிய நாட்டார் தரும் தீமைகளை எதிர்த்து அழித்து உயர்வு எய்தாமல், தங்களுக்குள்ளே மாறுபட்டால் வருகின்ற துன்பங்கள் யாவும் அழியாது என்ற உண்மையை தன் மனதுக்குள் கொண்டு, நாளும் அதனை விடாது இருமதத் தாரின் ஒற்றுமையை நாடி உரையாற்றுகின்ற வள்ளலே, மாண்புடைய மனத்தவனே, எந்த உயிரும் வருந்தச் சிறிதளவு கூடப் பொறுக்காத இணையற்ற கருணை வள்ளலே, எத்துன்பம் வந்தாலும் அஞ்சாத பெரிய மலை போன்றவனே, பொறுமை என்ற அழகுடைய இனிய தேன் போன்று இனிக்கின்ற சொற்களை உடைய திருவாய் கொண்ட செம்மலே, செயல் வல்லவனே, காந்தியம் பெருமானே சிறுதேர் உருட்டி அருளே, உலகத்தில் உயர்ந்த ராட்டை சுழற்றும் செங்கையால் காந்தியம் பெருமானே சிறுதேர் உருட்டி அருளே.

சொ.பொ.வி:

ஏதிலார் - அயல்நாட்டார், மாளா - நீங்காது, நோவ - துன்பம் அடைய, இறையும் - சிறுபொழுதும், இருமலையே - பெரிய மலையே, தீஞ்செழுந்தேன் - இனிய தேன்.

வள்ளுவரும் நீயும்பல் வகையினால் ஒப்பென்ன
வகுக்கலாம் அந்த ஞான
வள்ளலுயர் நெய்தொழிலின் மாண்பறிந்து கைக்கொண்டார்
நீயுமத் தொழிலை ஏற்றாய்
எள்ளுகுணம் இல்லாத மனைவியுளார் அவரதினும்
இம்மியுந் தாழ்வு றாத

எழில்மனையை நீயுடையாய் அவரந்நாள் மக்களுய
ஏதமில் அறமுரைத்தார்
தள்ளரிய அவ்வறத்தைத் தாழாமல் இற்றைநாட்
தகவறிந் தினிது நீயும்
சாற்றுகின்றாய் ஆதலினால் தகுதியுடை நீஎங்கள்
தண்மையோ டினிமை சாரும்
தெள்ளுதமிழ் வள்ளுவனார் திருவரவென் றியம்பிடலாம்
சிறுதேர் உருட்டி அருளே.
செகத்திலுயர் தனிக்காந்தி திகிரிபுனை செங்கையால்
சிறுதேர் உருட்டி அருளே. (3)

பொருள்:

(காந்தியம் பெருமானே) நீயும் திருவள்ளுவரும் ஒத்தவர்கள் என்று கூறலாம். திருவள்ளுவர் உயர்ந்த நெசவுத் தொழிலின் செழுமையை உணர்ந்து கைக்கொண் டார். நீயும் கதர் நெய்யும் தொழிலாம் அத்தொழிலை மேற் கொண்டாய். இழிவாகச் சொல்லுகின்ற எந்தக் குணமும் இல்லாத வாசுகி என்ற மனைவியை அவர் பெற்றிருந்தார். நீயும் வாசுகி அம்மையாரின் பெருமை யில் அணுவளவு கூடக் குறையாத கஸ்தூரிபாய் என்னும் மனையைப் பெற்றாய். திருவள்ளுவரும் மக்கள் வாழ்வதற்குக் குற்றம் இல்லாத அறத்தை உரைத்தார். அவர் கூறிய நீக்க முடியாத அவ்வறங்களைச் சிறிது கூடத் தயங்காது இந்த நாளில் சிறப்பறிந்து இனிமையாக நீயும் கூறுகின்றாய். எனவே, உன்னை எங்கள் தனித்தன்மை பெற்ற இனிமை சார்ந்த தெள்ளுதமிழ் திருவள்ளுவர்தான் மீண்டும் வந்துள்ளார் என இயம்பிடலாம். அத்தகைய வனே சிறுதேர் உருட்டி அருளே, உலகத்தில் உயர்ந்த ராட்டை சுழற்றும் செங்கை யால் காந்தியே சிறுதேர் உருட்டி அருளே.

சொ.பொ.வி :

ஒப்பு - ஒத்தவர், நெய்தொழில் - நெசவுத்தொழில், எள்ளுதல் - இழிவு, இம்மி - அணு, மக்கள் உய்ய - மக்கள் வாழ, ஏதமில் - குற்றமில்லாத, தாளாமல் - தயங்காமல், திருவரவு - மீண்டும் பிறந்ததாக.

நின்னுடைய தொழிலெதுவென் றறைந்த பொழுதண்ணால்நீ
நெய்தல்விவ சாய மென்றும்
நீஎந்தக் குலமென்ன வினவகுடி யானவனான்
என்றுமே நேர்மையோடு
சொன்னமொழி கண்டும்வீண் சோம்பேறி ஆனபலர்
தூய்மைசேர் ஞானம் இன்றித்
தொழிலொன்றை ஆற்றித்தொல் பிறப்பதனால் சாதிசொலும்
தூசுநீங் கிடுவ தென்றோ
என்னபொருள் ஒன்றியற்றி மற்றொன்றன் பெயர்குறித்தற்
கென்பதை அறிந்தி லேனால்
ஏனிந்த அறியாமை இதுசாக எழிலிறைவன்
என்றுளங் கொள்ளு வானோ
சென்னிமிசை நின்சரண கமலமலர் சேர்த்தினேன்
சிறுதேர் உருட்டி அருளே
செகத்திலுயர் தனிக்காந்தி திகிரிபுனை செங்கையால்
சிறுதேர் உருட்டி அருளே. (4)

பொருள் :

(காந்தியே) உன்னுடைய தொழில் எது என்று கேட்டபொழுது அண்ணலே, நெய்தலும் விவசாயமும் என்பாய். நீ எந்தக் குலத்தை உடையவன் என்று கேட்டால் குடியானவன் நான் என்று நேர்மையோடு உரைப்பாய். அதனைக் கேட்ட பிறகும் சோம்பேறியாகவும் தூய்மை யான ஞான அறிவு இல்லாமலும் ஏதோ ஒரு அறமற்ற

தொழிலைச் செய்து கொண்டு வாழ்கின்றவர்கள் தங்களுக்குள் பிறப்பால் சாதி வேறுபாடுகளை வகுப்பார் கள். அத்தகையவர்கள் எப்பொழுது தங்களுடைய குற்றத்தை நீக்கிக் கொள்வார்கள்? இவ்வாறு சாதியைப் பிரிப்பவர்கள் தொழிலால் சாதியைப் பிரிப்பதன்றி (வேளாண் தொழில் செய்பவர் வேளாளர், வாணிபம் செய்பவர் வாணிபர் என்பது போல்) பிறப்பினாலே சாதியைப் பிரிப்பதற்கு உரிய காரணத்தை அறிய முடிய வில்லையே. ஏன் இந்த அறியாமை. இது அறிய எல்லாம் வல்ல இறைவன் என்று திருவுளம் கொள்ளுவானோ. என்னுடைய தலையில் உன்னுடைய திருவடியைத் தாங்கினேன். அத்தகைய பெருமானே சிறுதேர் உருட்டி அருளே, உலகத்தில் உயர்ந்த ராட்டை சுழற்றும் செங்கையால் சிறுதேர் உருட்டி அருளே.

சொ.பொ.வி :

அறைந்த பொழுது - கேட்டபொழுது, குடியானவன் - விவசாயத் தொழில் செய்பவர், தூசு - குற்றம், சாக - அழிய, சென்னி - தலை, சரண கமல மலர் - தாமரை போன்ற திருவடி.

பொன்மணக்கத் திருவீதி புகழ்மணக்க வானளவும்
பொருவிலா அறங்கள் எல்லாம்
புவிமணக்கச் சைவநெறி பொலிவெய்தி மிகமணக்கப்
புகலரும் சீர்த்தி போத
நன்மணக்க வாழ்ந்தநாள் நற்தனவை சியரெனப்பேர்
நவிலவே இனி துறைந்த
நல்லதொரு சமூகத்தின் நவைகளைந்து பழம்பெருமை
நாட்டவே ஞாலம் வந்த

என்மணக்க நெறிமணக்கும் எழிற்காரைத் தனவைசியர்
ஊழியர் சங்கம் அன்போ
டினிதளித்த பத்திரத்தில் நின்பெயரை உளங்கொண்டால்
எய்தலாம் சாந்தம் என்று
தென்மணக்க உரைத்ததமொழி திறம்பாத வாய்மையே
சிறுதேர் உருட்டி அருளே
செகத்திலுயர் தனிக்காந்தி திகிரிபுனை செங்கையால்
சிறுதேர் உருட்டி அருளே. (5)

பொருள் :

செல்வம் மணக்க, வீதியெலாம் புகழ் மணக்க, வானம் வரை உயர்ந்திருக்கும் ஒப்புமை இல்லாத அறங்கள் அனைத்தையும் செய்து உலகம் மணக்க, சைவ நெறியைக் கடைப்பிடித்து அந்நெறி மிக மணக்க, கூறுவதற்கு அரிய புகழ் மணக்க வாழ்ந்து, தனவைசியர் எனப் பெயர் பெற்று இனிது வாழ்கின்ற நல்லதொரு சமுதாயம், குற்றம் களைந்து பழம் பெருமை நாட்டிடத் தோன்றிய, நல்ல நெறி மணக்கும் அழகு மிக்க காரைக்குடி தனவைசிய ஊழியர் சங்கம் எனும் இயக்கம் அன்போடு இனிது உனக்கு அளித்த வரவேற்பு மடலில் நின்பெயரை ஒவ்வொருவரும் தங்கள் இதயத்தில் கொண்டால் அமைதி எய்தலாம் என்று கூறப் பெற்றிருந்த நல்வாசகத்திற்கு மாறுபடாத வாய்மை யாளனே, சிறுதேர் உருட்டி அருளே, உலகத்தில் உயர்ந்த ராட்டை சுழற்றும் செங்கையால் காந்தியே சிறுதேர் உருட்டி அருளே.

சொ.பொ.வி :

பொன் - செல்வம், பொருவிலா - இணையிலா, புவி - பூமி, சீர்த்தி - புகழ், வாழ்ந்த அன்னாள் - வாழ்ந்த நாளில்,

தனவைசிகர் - செட்டிநாட்டு செட்டி மக்களின் பெயர், நவை - குற்றம், ஞாலம் வந்த - தோன்றிய, காரை - காரைக்குடி, ஊழியர் - தொழிலாளர், பத்திரம் - வரவேற்பு மடல். திறம்பாத - மாறுபடாத.

வேறு

பான்மதி அரவஞ் சூடிய உமையாள்
பதிபர மேசுரனும்
பச்சை நிறந்திகழ் லெட்சுமி கொழுநன்
பாற்கடல் உறைவோனும்
மான்விழி மங்கை வெண்டா மரையாள்
மகிழ்நனும் அசுரர்களின்
வாழ்வு தொலைத்த வள்ளிம ணாள
வள்ளலும் வானாளும்
தேன்சொரி தருவின் இனிதுறை செல்வத்
தேவர்க் கிறையவனும்
தினமும் விரும்பும் திருவாழ் நாட்டில்
செனித்துப் புகழ்படைத்தோய்
ஊன்றிய அறிஞ உண்மைக் காந்தி
உருட்டுக சிறுதேரே
ஒப்புயர் வில்லா உத்தமர் ஏறே
உருட்டுக சிறுதேரே. (6)

பொருள் :

பிறைச் சந்திரனையும், பாம்பையும் தலையில் சூடியவனும், உமையவளை ஒரு பாகத்தில் கொண்டவனும் ஆகிய சிவபெருமானும், பச்சை நிறம் கொண்டவனும் திருமகளின் கணவனும் பாற்கடலில் வாழ்வனும் ஆகிய திருமாலும், மானின் கண்ணைப் போன்ற கண்ணை உடையவளும் வெள்ளைத் தாமரையில் இருப்பவளுமாகிய கலைமகளின் கணவனுமாகிய

பிரம்மனும், அரக்கர்களின் கொடுமையையும் அவர்தம் வாழ்வையும் அழித்தவனும் வள்ளியின் கணவனுமாகிய முருகப் பெருமானும், வானுலகை ஆள்பவனும் தேன் சொரிகின்ற கற்பகத் தருவின் கீழ் இனிது வாழ்பவனும் தேவர்களுக்கு எல்லாம் தலைவனுமாகிய இந்திரனும், நாள்தோறும் விரும்புகின்ற பாரத நாட்டில் பிறந்து புகழ் படைத்தவனே, ஆழமான அறிவுடையவனே, உண்மையே பேசும் காந்தியே, சிறுதேர் உருட்டி அருளே, உயர்வில் ஒப்புமை இல்லாத உத்தமராம் காந்தியே சிறுதேர் உருட்டி அருள்க.

சொ.பொ.வி:

பான்மதி - பிறைச்சந்திரன், அரவம் - பாம்பு, பதி - கணவன், கொழுநன் - கணவன், மகிழ்நன் - கணவன், மணாளன் - கணவன், தரு - கற்பக மரம், இனித்து - பிறந்து, ஊன்றிய - ஆழமான.

இந்நில மாந்தர் இன்புற் றுயர
எழில்மட வாரெல்லாம்
ஏந்தக் கற்பை ஏழை அடிமை
எவ்வுல கத்துமின்றித்
தன்னர சோங்கித் தாரணி வாழத்
தருக்கா தீயாவும்
சாகத் தீமைகள் சட்டென் றழியத்
தருமமெ லாம்வளரப்
பன்னரு போர்த்தொழில் பறக்கக் கருணைப்
பார்புகழ் அமர்வினையே
படர்ந்திஞ் ஞாலம் பரிசுத் தம்பெறப்
பார்வை புரிந்தருளி

ஒன்னலர் இல்லாய் ஊனமில் காந்தி
உருட்டுக சிறுதேரே
ஒப்புயர் வில்லா உத்தமர் ஏறே
உருட்டுக சிறுதேரே. (7)

பொருள் :

இந்த உலகத்து மக்களெல்லாம் மகிழ்வோடு உயர்ந்து வாழ, அழகுடைய பெண்கள் எல்லாம் கற்புடன் திகழ, ஏழை அடிமை என்ற பாகுபாடு எந்த உலகத்தும் இன்றி ஆட்சி செலுத்தும் அரசு ஓங்கி உலகம் வாழ, ஆணவம் என்ற தீ அழிய அனைத்துத் தீமைகளும் சட்டென்று ஒழிய, அறங்கள் எல்லாம் வளர, அழிவு தரும் போர்த் தொழில்கள் பறக்க, கருணை என்ற புகழபெற்ற வினையே படர்ந்து இந்த உலகம் பரிசுத்தம் பெற, அருட்பார்வை புரிந்து அருளி - பகைவரே இல்லாத குறைவு இல்லாத காந்தியே சிறுதேர் உருட்டி அருள்க, உயர்வில் ஒப்பில்லாத உத்தமத் தலைவ சிறுதேர் உருட்டி அருள்க.

சொ.பொ.வி :

எழில் மடவார் - அழகு உடைய பெண்கள், அரசு ஓங்கி - ஆட்சி செய்யும் அரசுகள் ஓங்கி, தாரணி - உலகம், தருக்காதி - ஆணவம் என்னும் தீ, ஞாலம் - உலகம், ஒன்னலர் - பகைவர், ஊனம் - குறைவு.

முழுதுல கினுநின் மொய்ம்பறி யாதார்
முன்னினி ராரென்றே
மொழிவது சிறிதும் மிகையிலை அறிஞர்
மொழிவழி ஒழுகியுனைத்
தொழுகுவர் உணர்வில் துரிசு பொருந்தும்
தொல்வினை உடையாரே

சூடா துன்னடி வேறாய் வீழ்வர்
தோமறு நல்லோரின்
வழுவறு மனங்கள் மோகிக் குந்நலம்
வாய்த்தமை கொண்டுனக்கு
வழுத்தினர் போலும் மோகனன் என்னும்
மாண்புத் திருநாமம்
ஒழுகுதல் கல்வி ஒருங்குடை காந்தி
உருட்டுக கிறுதேரே
ஒப்புயர் வில்லா உத்தமர் ஏறே
உருட்டுக சிறுதேரே. (8)

பொருள் :

இந்த உலகத்தில் உன்னுடைய புகழ் அறியாதவர் யார் இருக்கின்றார்கள் என்று மொழிவது மிகையாகாது. அறிஞர்கள் உன்னுடைய அறிவுரையின்படி வாழ்ந்து உன்னைத் தெய்வமாக வணங்குவர். நல் உணர்வு இல்லாத குற்றம் பொருந்திய தொழிலைச் செய்பவரே உன்னுடைய திருவடியை வணங்காது வேறாய் வாழ்வர். குற்றமற்ற நல்லோர்களின் பிழையற்ற மனங்கள் மோகிக்கும் (ஆசைப்படும்) அந்நலம் உனக்கு வாய்த்தமையால் அதனைக் கொண்டு உன்னை மோகனன் (காந்தி) என்னும் திருப்பெயரால் வணங்கு கின்றார்கள் போலும். கற்ற கல்வி வழி வாழுகின்ற ஒருமை மனங் கொண்ட காந்தியம் பெருமானே சிறுதேர் உருட்டி அருளே. உயர்வில் ஒப்புமை இல்லாத உத்தமத் தலைவனே சிறுதேர் உருட்டி அருளே.

சொ.பொ.வி:

முழுதுஉலகினும் - உலகம் முழுவதும், மொய்ம்பு - புகழ், மொழி வழி - உன் உரையின்படி, துரிசு - குற்றம், தோமறு - குற்றம் இல்லாத, வழு - குற்றம், மோகிக்கும் - ஆசைப்படுதல், திருநாமம் - பெயர்.

அன்னை எனினும் அத்தனே ஆயினும்
அறந்தவிர் ஆறுரைத்தால்
அதனைக் கடந்து அறங்காத் துயர்தல்
அணியுயர் மாந்தரவர்க்
கென்னைப் பெற்றோர் இழிதொழில் ஒன்றை
இயற்றென் றியம்புவரேல்
ஏற்கா தவர்மொழி தன்னைத் தள்ளி
என்கடன் செய்வனென
உன்னுயிர் மகற்கு நீசிறை யுறுநாள்
ஓலைத் தூக்குவிட்ட
உண்மை திண்மை உறுதி சாந்தம்
ஓங்கிய புகழ்மிக்க
உன்னைத் தொழுதேன் ஒண்டவ காந்தி
உருட்டுக சிறுதேரே
ஒப்புயர் வில்லா உத்தமர் ஏறே
உருட்டுக சிறுதேரே. (9)

பொருள் :

தாயென்றாலும், பெற்ற தந்தையே ஆனாலும் அறம் இல்லாத செயலைச் செய்ய உரைத்தால் அதனை மீறி அறத்தைக் காத்து வினை செய்து உயர்தல் மக்களின் கடமையாகும். பெற்றோர் இழிந்த தொழில் ஒன்றைச் செய்க என்று கூறுவாரேல் அதனை ஏற்காது, அவர் சொன்ன சொல்லை மீறி என் கடன் நல்லது செய்தலே என்று வாழவேண்டும் என்று உன்னுடைய மகனுக்கு நீ சிறையில் இருந்த பொழுது கடிதம் எழுதினாயே, அத்தகைய உண்மை, திண்மை, உறுதி, சாந்தம் ஓங்கிய புகழ்மிக்க காந்தியே உன்னை வணங்குவேன். சிறந்த தவத்தை உடைய காந்தியே சிறுதேர் உருட்டி அருளே, உயர்வில் ஒப்பில்லா உத்தமத் தலைவனே சிறுதேர் உருட்டி அருளே.

சொ.பொ.வி :

அத்தன் - தந்தை, அறந்தவிர் ஆறு - அறம் மீறிய வழி, மாந்தர் அவர்க்கு - மக்களுக்கு, அணிஉயர் - உயர்வாகும், என்னை - அசைச்சொல். இயற்றுக - செய்க, இயம்புவரேல் - சொல்லுவாரேல், மகற்கு - மகனுக்கு, ஓலைத்தூக்கு விட்ட - கடிதம் எழுதிய, திண்மை - வலிமை.

வேறு

ஏராரும் புகழ்க்காந்தி யாங்களுயச் சிறுதேரை
இனிதே உருட்டி அருள்க
இணையிலாக் கஸ்தூரி எழிற்கணவ சிறுதேரை
இனிதே உருட்டி அருள்க
சீராருந் தேவதாஸ் திருத்தந்தாய் சிறுதேரைச்
சீக்கிரம் உருட்டி அருள்க
செல்வமலி பாரதத்தாய் திருமகனே சிறுதேரைச்
சீக்கிரம் உருட்டி அருள்க
நாராரும் நன்மக்கள் நாயகனே சிறுதேரை
நன்றாய் உருட்டி அருள்க
நன்மைக்கு நண்பனே நாடறியச் சிறுதேரை
நன்றாய் உருட்டி அருள்க
பாராரும் பண்புநிறை பாவலனே சிறுதேரைப்
பாங்காய் உருட்டி அருள்க
பழவறத்தை உலகிற்குப் பகரெந்தாய் சிறுதேரைப்
பாங்காய் உருட்டி அருள்க. (10)

பொருள் :

நாங்கள் வாழப் புகழ்பெற்ற காந்தியே சிறுதேரை உருட்டி அருள்க. ஒப்புயர்வில்லாக் கஸ்தூரியின் கணவனே சிறுதேரை இனிது உருட்டி அருள்க. புகழ் பெற்ற தேவதாஸ் காந்தியின் தந்தையே சிறுதேரைச் சீக்கிரம் உருட்டி அருள்க. செல்வம் மிகுந்த பாரதத்தாயின்

திருமகனே சிறுதேரைச் சீக்கிரம் உருட்டி அருள்க. அன்புமிக்க மக்களின் நாயகனே சிறுதேரை நன்றாய் உருட்டி அருள்க. நன்மை அனைத்திற்கும் நண்பனே இந்த நாடறிய நன்றாய்ச் சிறுதேரை உருட்டி அருள்க. மக்கள் போற்றும் பண்புகள் நிறைந்த பாவலனே சிறுதேரைப் பாங்காய் உருட்டி அருள்க. தொன்மையான அறங்களை உலக மக்களுக்குக் கூற என் தந்தையே சிறு தேரைப் பாங்காய் உருட்டி அருள்க.

சொ.பொ.வி :

ஏர் - அழகு, உய்ய - வாழ, நாரார் - அன்புடைய.

முற்றுப் பெற்றது

வாழி

காந்திஎனும் கருணைபொழி கவின்மேகம்
வாழ்க உலகத்து வாழும்
மாந்தரொடு பல்லுயிரும் வாழ்க அறம்
யாவும்நனி வாழ்க வாழ்க
வாய்ந்தபுகழ் கொண்டுஅன்று வாழ்ந்தபெரும்
பாரதத்தாய் வாழ்க நாங்கள்
ஏந்துதமிழ் வாழ்ந்திடுக எழிலாரும்
அறவோர்கள் என்றும் வாழ்க.

பொருள் :

காந்தி என்ற கருணை மழையைப் பொழிகின்ற மேகம் வாழ்க, உலகில் வாழும் மக்களோடு பல உயிர்களும் வாழ்க. அறம் அனைத்தும் நனிதே வாழ்க. என்றும் புகழ் கொண்டு வாழுகின்ற பாரதத்தாய் வாழ்க. நாங்கள் போற்றும் தமிழ் வாழ்க. அழகு மிக்க அறவோர்கள் என்றும் வாழ்க.

❀

செய்யுள் முதற் குறிப்பகராதி



காந்தி பிள்ளைத் தமிழ்

ஆக்கியவர்: ராய. சொ

விளக்க உரை: பழ. முத்தப்பன்

உமா
பதிப்பகம்